திருச்சிற்றம்பலம்

திருவானைக்காவந்தாதி

மூலமும் உரையும்

ஆக்கியோர் :

வளவர் வம்சபாரம்பரையினராகிய
தமிழன்பர்,
திரு.
சொ. சிங்காரவடிவேல் வன்னியமுண்டார்
அம்பலகாரர்
கச்சமங்கலம்

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

உரைச் செப்பங்கண்டார்
விண்ணமங்கலம்,
வித்துவான், வி. அரங்கசாமி அவர்கள்

தஞ்சைக்
கூட்டுறவு மின்னியக்கப் பதிப்பகம், கரந்தை.

பதிப்புரிமை] 1944 [நூல் ஆசிரியருக்கு

விலை அணா 0—8—0

புண்ணை காசு முதலியா
திருநெல்வேலி

திருச்சிற்றம்பலம்

நூல் ஆசிரியர்:
கச்சமங்கலம்,
சொ. சிங்காரவடிவேல் வன்னியமுண்டார்
பிறப்பு — 2—8—1885

பு.சி. புன்னைவனநாத முதலியார்
"புலவரகம்" திருநெல்வேலி.

கரந்தைப் புலவர் கல்லூரியின் தலைவராகிய

திருவாளர், நாவலர், பண்டித,

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

அவர்கள் எழுதிய

முகவுரை

அந்தாதி என்பது ஒரு செய்யுளின் அந்தம் அடுத்த செய்யுளுக்கு ஆதியாக வரச் சொற்றொடர்நிலையாகப் பாடப்படுவது. தமிழிலுள்ள பாட்டியல்களால் இலக்கணங் கூறப்படும் பிரபந்த வகைகளில் ஒன்று. ஆசிரியர் தொல்காப்பியனார் இவற்றிற்கு இலக்கணம் கூறிற்றிலர் எனினும், அவர், அம்மை முதலாயின தொடர்நிலைச் செய்யுளுக்கு இலக்கணமாகக் கூறுமிடத்து, விருந்து என்பதனை ஒன்றாகக் கூறியிருத்தலின், அதுவே பற்றுக்கோடாகப் பின்னுளோர் தாம்வேண்டியவாறு புதிய பலபிரபந்தங்களை இயற்றுவாராயினர். ஐங்குறு நூற்றின் நெய்தல் எட்டாம் பத்தும், பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தும் சங்கநாளிலேயே சொற்றொடர் நிலையாகப் பாடும் வழக்குண்மையைப் புலப்படுத்தி நிற்கின்றன. பதினோராந்திருமுறையிலுள்ள நக்கீரர், கபிலர், பரணர் அந்தாதிகளும், பொய்கையார் முதலிய முதலாழ்வார்கள் இயற்றிய அந்தாதிகளும் மிக்க பழமையுடையன. பிற்காலத்திலே யமகமும் திரிபுமாகப் புலவர்களால் எண்ணிறந்த அந்தாதிகள் பாடப்பெற்றுள்ளன. அவையெல்லாம் தமிழ்ப் பயிற்சிக்குச் சிறந்த கருவிகளாகவும், இறைவன்பால் அன்பு விளைப்பனவாகவும் உள்ளனவே. திருவானைக்கா என்பது காவிரியின் வடகரையில் உள்ள சோணாட்டுத் திருப்பதிகளில்ஒன்று; மூவர் பாடலும் பெற்றது; ஐம்பூதப் பதிகளில் அப்புத்தலமாகவுள்ளது. ஆனை பூசித்தமையால் ஆனைக்கா என்னும்பெயர் பெற்றது. பழம் பிறப்பில் ஒரு சிலந்தியானது சிவபிரா

னுக்குப் பந்தரியற்றிப் பூசித்து அப்புண்ணியத்தால் கோச்செங்கட் சோழராகப் பிறந்து மாடக்கோயில் பல இயற்றிய வரலாறு பெரியபுராணம் முதலியவற்றால் அறியப்படும். அத்தகு மேன்மையுடைய ஆனைக்காவிலே அகிலாண்டநாயகியாருடன் கோயில்கொண்டு அடியார்கள் வேண்டும் வரங்களையெல்லாம் ஈந்தருளும் பரங்கருணைத்தடங் கடலாகிய சிவபிரான்மீது இவ்வந்தாதி இயற்றியவர் சோழநாட்டிலே கச்சமங்கலம் என்னும் நற்பதியிலே வழி வழியாகச்சிறப்புடன் வாழ்ந்துவரும் இந்திரகுலத்தோன்றல்; கள்ளர் பெருமகன்; குறுநில மன்னர் எனத்தகும் பெருநிலக்கிழவர்; ஒப்புரவு, ஈகை, சிவபத்தி முதலிய நற்பண்புகள் வாய்க்கப்பெற்றவர்; கருவிலே கவிபாடும் திருவமைந்தவர்; அத்தகைய இளங்கிளைகளையும் பெற்றவர்; என் இனிய நண்பினர்; திரு. சிங்காரவடிவேல் வன்னியமுண்டார் என்னும் பெயரினர் ஆவர். இவரால் திருக்கச்சமாலை, உயிர்வருக்க மாலை, இரட்டைமணிமாலை, திருப்பழநி வெண்பாமாலை, திருமுருகாற்றுப்படை வெண்பா, அகிலாண்டநாயகி பதிகம், சித்தவெண்பா, தனித்துறைகள் ஆகிய எட்டு நூல்களும் இயற்றப்பட்டுள்ளன. இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரி, தலைமைத் தமிழாசிரியர் திரு. கா. கோபாலாசாரியர் அவர்களால் கடகபந்தமும், திரு வேட்டநல்லூர், திரு. ச. அப்பாச்சாமிக்கவிராசர் அவர்களால் இரதபந்தமும், இளசை, திரு. ம. முருகேசக்கவிராசர் அவர்களால் புகழ்ச்சிப் பத்தும் பாடப்பெற்றவர். இதிலுள்ள செய்யுட்களெல்லாம் சொல்லாலும் பொருளாலும் சிறந்து விளங்குகின்றன. செய்யுளியற்றுதல் மிக அருகியுள்ள இக்காலத்தில் இத்தகைய யமக அந்தாதி இயற்றுவது அரியதோர் செயலாகும்.

இதற்குரைகண்டார் இந்நூலாசிரியரே யாவர். இந்நூற் செய்யுட்களின் அறிதற்கரிய பொருள்களெல்லாம் இவ்வுரையில் ஆடி நிழல்போல் நன்கு விளங்குகின்றன. இந்நூலுரையாசிரியர் அனைத்து நலனும் பெற்று, நெடிது வாழ அம்மையப்பர் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

தமிழ் வாழ்க.

அநுபந்தம்

அந்தாதி, யென்பது சொற்றொடர் நிலையாய் ஒரு செய்யுளின் ஈற்றெழுத்தோ, சொல்லோ, சொற்றொடரோ, அடியோ அடுத்த செய்யுளின் முதற்சீரில் பெற்றுவருவது. செய்யுள்கள் யமகம் திரிபுகளாக அமைக்கப்படும். அந்தாதி பிற்காலத்தெழுந்த புது நூலாயினும், தொல்காப்பியக் கடலுள் தோன்றி நிற்கும் வனப்பெட்டனுள் விருந்தென்னு மிலக்கணத்துள் அடங்கும். "விருந்தேதானே புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்பது தொல்காப்பிய நூற்பாவாகும். புதுவதாகத் தோன்றும் நூல்கள் யாவும் இதனுளடங்கும் எனப் புலவர் புகல்வாராயினர். இத் திருவானைக்காவந்தாதியும் அதற்குரிய இலக்கணங்களை ஏற்று யமகப்பாக்களால் ஆக்கப்பெற்று இலங்குகின்றது. ஏனைய ஒவ்வொரு கருத்தினைக் கொண்டனவாயிருக்க இவ் வந்தாதி பல்வகைக் கருத்துக்களையும் பகர்ந்து பாங்குறுகின்றது. பத்திச்சுவை மலிந்து, சித்தாந்தக்கருத்து, தத்துவங்களினியல், குருலிங்க சங்கமபத்தி நால்வகை வழிகளாற் பெறும் நால்வகைப் பதவிகள், செம்பொருளைக் காணும் உபாய மூன்றினியல் பிறவியறுக்கும்பெற்றி நிலையாமை, தலமூர்த்தி தீர்த்தம், விசேடம் ஆகிய இவைகள் யாவும் மிக விளக்கமாகக் கூறப்பட்டுள. இன்னும் இறையியல் இயம்புங்கால், அட்டமூர்த்தம், இருபத்தைந்து மூர்த்தம், அத்துவாவுரு ஆறு, ஐந்தொழிற்கு மூலமாய ஒன்பானுரு. மூவுரு ஆதியந்தமிலாமை, விருப்புவெறுப்பு, துன்பமின்பம் நட்பிகல் இவையிலாமை அருவுருநிலை, அன்பே சிவமாயது, ஐம்முகம், ஐந்தொழில், ஐந்துருவம், ஐயக்கரம், முதலிய பல தன்மைகளும் பகரப்பட்டுள்ளன. இனி அவ்விறைவன் எழுந்

தருவியுள்ள அட்டவீரட்டம், சத்தவிடங்கத்தலம், பஞ்சபூதத்தலம், சத்ததலம், முதலிய பல தலங்களும் மொழியப்பட்டுள.

இறைவன் தொண்டர்களை ஆட்கொள்ளுமுறை, இறைவனை யடைதற்குரிய மெய்ஞ்ஞானம்பற்றிய வழி, முதலியனவும் கூறப்பட்டுள்ளன. அதற்கு ஆதாரமாக தனியடியார், தொகையடியார், சிலந்தி, யானை, கோச்செங்கணார் முதலியோர் வரலாறுகளும் உரைக்கப்பட்டுள. இவற்றையெல்லா மொருங்குகொண்டெழுந்த இத் திருவானைக்கா அந்தாதி கற்போர்க்கு இனிது பயன்படுமென்றெண்ணுகின்றேன்.

இவ்வந்தாதியினாசிரியர் தமிழ்ப் பாவலர், வளவர் வழித்தோன்றலாகிய கூச்சமங்கலம், திரு. சொ. சிங்கார வடிவேல் வன்னியமுண்டார் அவர்களாவார். இவ்வாசிரியர் வேதாந்த, சித்தாந்தம், தருக்க விலக்கணம், சங்க இலக்கியம், ஐம்பெருங்காப்பியம், சித்தியார், தொண்டர் புராணம், இதிகாச புராணம் இவைகளில் அளவு கடந்த ஞானமுடையவர்என்பது இந்நூலானும் உரையானும் அறியப் படுகின்றது.

இங்ஙனம்,

கரந்தை,
தேதி 15-4-'44

வி. அ. அரங்கசாமி,
விரிவுரையாளர், கரந்தைப்புலவர்கல்லூரி.

பு.சி. புன்னை ... நாத ... லியா
"புலவரகம்" திருநெல்வேலி

திருவானைக்காவந்தாதி.

சிறப்புப் பாயிரம்.

திருவானைக் காவினிலே வெண்ணாவ லுறைநீர்மைச்
செம்பொருட்கே
மருவாருஞ் செந்தமிழின் அந்தாதி மாலைபுகழ்
மலியச்சொற்றா
னுருவாருங் கல்விநிறை செல்வமுயர் குணங்கொடைமிக்
கோங்குசீர்த்தித்
திருவாளன் சிங்கார வடிவே விந்திரகுலத்துச்
செம்மறானே.

திருவாளர்,

நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார்,

தலைவர், புலவர் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

ஆனைக்கா முதலான வைந்தலத்தி
லைம்பூத மாக வேமே
யானைக்கா ஞானமறை தத்துவங்க
டுமொரு மரூபி யாந்து
யானைக் காதலித்துச்சிங் காரவடிவே
லெம்முன் அருமை நாவா
யானைக்கா வன்பினிலந் தாதிசொற்றா
னதன்பெருமை யறையற் பாற்றோ.

திருவாளர்.

சொ. குழந்தையையா வன்னியமுண்டார்,

நூலாசிரியர் இளவல், கச்சமங்கலம்.

மருந்துமுயர் முருந்து முளம் வாடவொளிர் மொழிநகையார்
வயங்குகின்ற
திருந்துபுகழ் வருந்துகளில் கச்சைநகர்க் கணிபுரிசிங் காரவேலன்
பெருங்குணவன் தெறுங்குடவன் இல்வடவன் தமிழ்த்தென்னன்
பிணைத்தான் வேட்டம்
மருங்குகரு பெருந்துணைவை யானைக்கா விறைமீதந் தாதிமாலை.

மேவும் புகழ்பெறு குறடோல் காப்பியம் விள்ளுறு தேவாரம்
நாவில் மணிவா சகமுதல் நறுமலர் தம்மணங் கொண்டுறலான்
சேவி லமர்கரிக் காவிறை மீதுசெய் யந்தா திம்மாலே
நாவில் உரைசெய் கதம்ப கலம்பக மாக நவில்வோமே.

திருவாளர், இளங்காடு,
செ. சிங்காரவேலுச்சேதிராயர்,
தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்

அறுசீரடி விருத்தம்.

கருவானைக் காதன்பர்க் கருள்புரியுங்
கருணைவள்ளல் கருதா ருள்ளம்
மருவானைக் கான்மலரெம் மனத்து வந்
தருள்புரியும் மங்கை பாகன்
தருவானைக் காணுவபோற் றழைத்தோங்கு
தண்டலைசூழ் தலத்தின் மிக்க
திருவானைக் காவிலுறை செம்பொருளி
னம்பதுமச் சேவ டிக்கே.

சென்னிவள நாடென்னுந் திருத்தஞ்சை
நன்னகரைச் சென்னி யாக
மன்னியுறு முயர்கச்ச மங்கலத்தி
லிந்திரகுலம் வயங்க வந்த
பன்னுதமிழ்ப் பெரும்புலவன் சிங்கார
வேலெனும்பேர் படைத்த சீமான்
துன்னுறுசெந் தமிழாலோ ரந்தாதி
நறுந்தொடையல் சூட்டி னனே.

திருவாளர்,
கரந்தை, சு. ப. வெ. கலியாணசுந்தரம் பிள்ளை,
தமிழன்பர், தஞ்சை.

எழுசீரடி விருத்தம்.

தஞ்சையம் பதியைத் தனக்குரித் தாய
    தலைநக ராக்கொடு வயங்கும்
மஞ்சுலாம் பொழில்சூழ் கச்சமங் கலத்தில்
    வாழுமிந் திரகுலா திபனும்
எஞ்சில்சீர் பாவு மிருநிதிச் செறிவும்
    ஏற்றவா றிசைதமி ழறிவும்
விஞ்சுற வோங்கி விளங்குசிங் கார
    வேலெனும் பேர்பெறு புலவன்.

மான்மழு வேந்தி மழவிடை யூர்தி
    மாதுமா பதியென வழுத்தும்
கான்மலர்ப் பொழில்சூழ் கவினுறு மானைக்
    காவில்வெண் ணாவலுற் றுறையும்
பான்மதி சூடும் பவளவார் சடையோன்
    பங்கயப் பதமிசைத் தமிழ்ச்செந்
தேன்மரு வியசீர் திகழுமந் தாதித்
    தெரியலை யினிது சூட்டினனே.

திருவாளர்,
சபாபதிச்செட்டியார்,
தமிழன்பர், மகாராசபுரம்.

கணபதி துணை

திருவானைக்காவந்தாதி

மூலமும் உரையும்

காப்பு

பாக்கி யமக னிலம்பெ ணசைதபப் பைந்த மிழி
லாக்கி யமகவந் தாதி யலங்க லருஞ்சுர மேழ்
போக்கி யமகமன் ரேற்கா வருக்குப் புனைய கங்கற்
ருக்கிய மகன்மா ருழாதி யைங்கரன் ருடுணையே.

இதன் பொருள்:— பாக்கியம் — பொன்னாலும், அகல் நிலம் — அகன்ற நிலத்தாலும், பெண் — பெண்களாலும் உண்டாகிய, நசைதப — ஆசைகள் நீங்க, பைந்தமிழில் — பசிய தமிழினால், யமகவந்தாதி அலங்கல் ஆக்கி — யமகமாகிய வந்தாதி மாலையைச் செய்து, அரும் ஏழ்சுரம் — அருமையாகிய ஏழு இசைகளையும், போக்குஇயம் — வெளியிடும் இசைக்கருவிகள், அகம் — வீடுகள்தோறும், மன் — நிலைபெற்று முழங்கும், தோற்காவருக்கு — திருவானைக்காவையுடைய இறைவற்குப், புனைய — (யாம்) சூட, கம் — பிரமனும், கல் தாக்கிய மகன் - மலைச்சிறகரிந்த யாகாதிபதியான இந்திரனும், மால் — திருமாலும், தாழ் — வீழ்ந்து வணங்கும், ஆதியைங்கரன் தாள் — ஆதிவிநாயகக்கடவுளினது திருவடிகள், துணை — (எமக்குத்) துணையாம், (எ — று)

பாக்கியம், பொன் என்பதின் பரியாயமொழி. உலகம் என்ற மங்கல மொழிக்கு "வையகம் பனிப்ப" (நெடுநல்வாடை) எனவந்த பரியாய மொழிபோல் நின்றது. சுரம் ஏழு அவை:— சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இப்பிரபந்த முதற்கணவாவை எடுத்ததெற்றுக்கெனின் உடலைவிட்டுயிர் நீங்குங்கால், யாதோ ரவாத்தோன்றிற்றோ, அவ்வாவின் வழித்தாய்ச் சென்றுயிர் பிறத்தலின், அவ்வவாவே துன்பங்கட் குறைவிடமாம் பிறவிக்கு,

முதற்காரணமாதலின்; அப்பிறவி நீக்கவேண்டி அவாவை முதற்கணெடுத்ததென்க, "ஆசையுமன்பு மறுமி" னென்றும், "நிராசையின்மேற்றெய்வமுண்டோ" வென்றும், "செற்றுக்களைந்து பசையற்று" லென்றும், "அவா, தவாப்பிறப்பீனும் வித்து" என்றும்,—நவின்றவான்றோர் கருத்துமிதுவே. எடுத்துக்கொண்ட காரியம் முட்டின்றி யினிது முடியும் பொருட்டுக் கடவுள் வணக்கங் கூறப்பெற்றது. என்னை? "வழிபடுதெய்வ வணக்கஞ்செய்து, மங்கல மொழிமுதலாக வகுத்தே, எடுத்துக்கொண்ட விலக்கண விலக்கியம், இடுக்கணின்றி யினிது முடியும்" என்பவாகலின். என் அவாவற்றுப் பத்திமிகத் தமிழில் யமகவந்தாதிமாலை செய்து திருவாணைக்காக் கடவுளுக்குச் சூட ஆதிவிநாயகர் திருவடி எமக்குத் துணைசெய்யுமென்று வினைமுடிவுசெய்க. பைந்தமிழ்—பசுமை நிறத்தின்மேற் செல்லாது இளமையிற் சென்றது. (சுரம் ஏழ்—கருங்காய்பிடியேழ், என்றமை போலநின்றது.)

மங்கலச் சொல்

சீர்மணி பரிதி யானை திருநில முலகு திங்கள்
கார்மலை சொல்எழுத்துக் கங்கைநீர்க் கடல்பூத்தேர்
பொன்
ஏருறு மிவைமூ வாறு மிதிற்பரி யாயப் பேரும்
ஆருமங் கலச்சொல் செய்யுள் ஆய்ந்துமுன் வைக்க
நன்றாம்.

கணபதிவணக்கத்தின்
திருவருட்பயன்

என்னரே யாயினு மாவதொன் றெண்ணுதல்
முன்னரே யுனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை
யுள்ளலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ.

(கந்த புராணம்)

உ

பரமபதிதுணை

திருவானைக்கா வந்தாதி

மூலமும் உரையும்

(நூல்)

திருவானைக் காயத் திரியானைக் காயத்த திண்வரையெ
திருவானைக் காவன் புறுந்தல மூர்த்தியந் தீர்த்த நலத்
திருவானைக் காவம லப்பதி நின்றருள் செய்ய வெழுந்
திருவானைக் காதலித் தூர்ந்தநின் றாளையெஞ்
சென்னி தந்தே

(இ-ள்) திருவான் — இலக்குமியையுடைய திருமாலையும், காயத்திரியான் - கலைமகளையுடைய பிரமனையும், காயத்த - ஆகத்தில் (இடப்பாலும் வலப்பாலுமாக) உடையவனே, திண்வரையெதிர் - வலிய கைலைமலையை நிகர்த்த, உவர — வெள்ளையானை, னைக்காவன்புறும் — குறையாத அன்புவைத்துத் துதிக்கும், தலம் — திருவானைக்காப்பதியாகிய தலமும், மூர்த்தி — சம்புநாயகராகிய மூர்த்தமும், தீர்த்தம் — காவிரி நதியாகிய தீர்த்தமும் (மூன்றும்) நலம் — மேன்மையுறும், திருவானைக்கா அமலப்பதி — திருவானைக்காவாகிய ஞானதலத்தில், நின்று — இருந்து, ஆனைக்காதலித்து — இடபத்தைவிரும்பி, ஊர்ந்த நின் தாளை எஞ்சென்னிதந்து — நடத்திய நின் திருவடிகளை என் தலையில் வைத்து, அருள் செய்ய எழுந்திரு — கிருபைசெய்ய எழுந்தருள்வாயாக. (எ—று)

திண்வரை — கயிலைமலை. வலியகுன்றெடுத்தவென்பது, இராவணன் தூக்கியமையால் கயிலையைக் குறித்தது போல், ஈண்டுத் திண்வரை பூசித்த உவா வெள்ளை யானை யானமையால் கயிலையைக் குறித்தது. தலபுராணத்துள் தலம் மூர்த்தி தீர்த்தவிசேடப் படலங்களால் இம்மூன்றின் விசேடமறியலாகும். ஆன், ஈண்டு விடை, சென்னி — தலை.

தந்தவ ராக மலையாண் டெனையாண்ட தற்ப ரர்சந்
தந்தவ ராகமாக் காவறை தோற்காத் தலர்த மர்க்குத்
தந்தவ ராகமா றேடியுங் காணாத் தனிப்ப தத்தைத்
தந்தவ ராகத் துயிருண் மறைந்தொளிர் சங்க ரரே.

(இ-ள்) தம் தவராக மலையாண்டு — தம்முடைய வில்லாக மலையை வளைத்து, எனையாண்டதற்பரர் — பின் என்னை அடிமைகொண்ட கடவுள், மா சந்தந்தவ ராகம் அறைகா — வண்டுகள் இசைமிகப் பண்களைப்பாடும் சோலைகளையுடைய, தோற்காத்தலர் — திருவானைக்காப் பதியையுடையவர், ஆகத்து உயிருள் மறைந்து ஒளிர்சங்கரர் — உடலினுட்டங்கும் உயிரிடத்து மறைந்து விளங்காநிற்கும் பரம்பொருள்; தமர்க்கு — தந்தொண்டர்களுக்கு, தந்தம் வராகமால் — கொம்பையுடைய பன்றியுருவெடுத்த திருமாலானும், தேடியுங்காணாத் தனிப்பதத்தைத் தந்தவர் — தேடியுங்காணமுடியாத வொப்பற்ற திருவடிகளையளித்தவராவார். (எ—று)

வலியனவற்றை வசமாக்கிப் பழகிப் பின் என்னை அடிமைகொண்டார் என்பது போதர, மலையாண்டு எனையாண்டவென்று சொல்லப்பட்டது. என்னைத் தனக்குத் தொண்டனாகக் கொள்ளுதற்காரணமாகத் திரிபுரத்தின் மேலிட்டு மலையை வளைத்தார். என்னெஞ்சை வளைத்தல் காரணமாகவல்லது தனக்குத் திரிபுரத்தார் பகையை முன்னிட்டுச் செய்ததன்று போலும் என்பது கருத்து. "கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண் டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்" (திருவாசகம்) தேடியுங் காணாத் தனிப்பதம் தந்தவர் என்றது அருமையும் எளிமையுந் தோன்ற நின்றது. தருபவர் — என்பது — தந்தவர் என இறந்த காலத்தாற் தெளிவுநோக்கி கூறப்பட்டது. "வாராக்காலத்து வினைச்சொற்கிளவி — இறப்பினும் நிகழ்வினுஞ் சிறப்பத்தோன்றும் — இயற்கையுந் தெளிவுங் கிளக்குங்காலை" என்பதோத்தாகலின். (இதுகாலவழுவமைதி) உயிருள் மறைந்தொளிர்தல் —

உயிர்தொறு முயிர்தொறு மந்தரி யாமியாய் நிற்றல். "உற்றவார்கையி னுறுபொரு ணுறுமல ரெழுதரு நாற் றம்போற்—பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்," "முத்தனே யுயிர் தொறு முலாய முன்பனே" என அதனையுணர்ந்தோர் கூறியவாற்றானுணர்க. தற்பரம் பொருளென்பது — தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா—என்ற திருவிசைப்பாவால் பெறப்படும். ஆவார் என ஒரு சொல் பெய்துரைக்க.

சங்கனந் தங்கஞ்ச மூர்பணைத் தோற்காத் தனிமு
தன்மச்
சங்கனந் தங்கண் குழலெனக் கொண்டவ டந்த
தென்றே
சங்கனந் தங்கவாண் டோன்வடி வம்பெயர்
சார்ந்தி லன்சற்
சங்கனந் தங்கடந் தான்றொண்டு செய்தல் தவநமக்கே

(இ-ள்) அனந்தம்சங்கு— பல சங்குகள், கஞ்சம் ஊர்—தாமரையில் ஊர்ந்து செல்லும், பணை—மருதம் சூழ்ந்த, தோற்காத்தனிமுதல்—திருவானைக்காவி னுள்ள ஒப்பற்ற முதற்பொருளாயுள்ளவன், மச்சம்கனம்—கயலை யும் மேகத்தையும், தம் கண் குழலெனக் கொண்டவள்— தம்முடைய கண்களாகவுங் குழலாகவுங் கொண்ட தடா தகைப்பிராட்டியார், தந்ததென்தேசம்—அளித்த தென் றமிழ்ப் பாண்டி நாட்டை, கனம்தங்க ஆண்டோன்— பெருமை பொருந்த செங்கோல் புரிந்தவன், வடிவம் பெயர் சார்ந்திலன்—உருவும் பெயருமில்லாதவன், சற் சங்கன்—சான்றோர் தங்குந் தமிழ்ச் சங்கத்தையுடைய வன், அந்தம் கடந்தான்—முடிவில்லாதவனுமாகிய அச் சம்புநாயகருக்கு, தொண்டுசெய்தல் — குற்றேவலைப் புரிதல், நமக்குத்தவம்—நமக்குமேலான தவமாகும். (எ—று)

மச்சம்கனம்—கண்குழலென்பது நிரனிறை—"நிர னிறுத்தமைத்தல் நிரனிறை" என்றார் தொல்காப்பிய

ணரும். தென்றேசம் அரசு புரிதல், மதிக் குலப் பாண்டியனாகி மண்ணுண்டவன். வடிவம் பெயர் இல்லாதவனென்பது 'இன்னவுரு வின்ன நிறமென் றறிவதேலரிது' 'மனக்கோரன் னினக்கென வடிவுவேறிலையே' என்றார் சான்றோரும். தொண்டுசெய்தல் தவ நமக்கு என்றது தவத்தாற்பெறும் தனியிடத்தையும் தொண்டுசெய்தலாற் பெறுதலான் என்க. "தொண்டராகிப் பணிவார்க்குத் தொல்வானீய வல்லான்காண்" என்று அப்பர் அருளியதூஉம் இதுபற்றியென்க.

நமனங்க ணந்தக் கடவூ ருதைத்தவெண் ணுவ லந்தா
நமனங் கனக்கந் தரன்ற டொழினவை நானி லந்த
நமனங் கனம்படை யால்வரும் பற்றினை நைந்து நம்மீ
நமனங் கனந்தரு மெய்யுணர் வெய்த நலந்த ருமே

(இ-ள்) நமன்–இயமனது, அங்கம்கந்த–உடல்கெட, கடவூர்–திருக்கடவூரின்கண், உதைத்த—காலாலிடறிய, வெண்ணாவல் அம் தானமன்—வெண்ணாவலையுடைய அப்புத்தலமாகிய திருவானைக்காநகருக்கு அரசாயுள்ளவன், அம்கனம் கந்தரன்—நீர்கொண்ட மேகத்தைப்போன்ற கண்டத்தையுடையவன், தான் தொழின்—(அவனுடைய) திருவடித் தாமரைகளை வணங்கின், அவை—அவ்வடிகளானவை, நானிலம்—மண்ணும், தனம்—பொன்னும், அனங்கன் அம்படை — காமன் படைக்குரிய பெண்ணும், வரும் — உண்டாகிய, பற்றினைநைந்து—புறப்பற்றினைக் கெடுத்து, நம்ஈன மனம்—நம் கீழ்மையான மனமானது, கனம்தரும்—மேன்மை பொருந்திய, மெய்யுணர்வு எய்த—உண்மை ஞானத்தையடைய, நலம் தரும்—நன்மையான வழியைக் காட்டும். (எ—று)

கடவூர்—அட்டவீரட்டத்துளொன்று, பாலைக்கு நிலமின்மையின், அதையொழித்து முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென நான்கு வகையாகப் பிரிக்கப் பட்டிருத்தலின் உலகு நானிலமென்று சொல்லப் பட்டது. அனங்கன்படை பெண்கள், "படைமங்கையர்"

என்றார் பிறரும். ஈனம்—கீழ்மை, "எப்பொருளெத் தன்மைத் தாயினுமப்பொருள்—மெய்ப்பொருள் காண்ப தறிவு." "கொடும் பாடறியற்க வெம்மறிவெனவே" என்றார் பிறரும். பாலைக்கு நிலமின்மையைத் தொல்காப்பியம் அகத்திணை 2ஆம் சூத்திரத்தானறிக. நானிலம் என்பதை நான் நிலம் என்று பிரித்து நான் என்ற அகப்பற்றும், நிலம் தனம் பெண்கள் என்ற புறப்பற்றும் எனவுரைப்பினுமமையும்.

நலம்பர வங்கரிக் காப்பரஞ் சோதி நவவலைக்கா
நலம்பர வன்னைந் தொழிலன் தொழிலில நாதி யம்பா
நலம்ப ரவயவ நீற்றியன் சீருனி நாவ கம்பந்
நலம்ப ரவமவன் றடர லெவ்வண நல்வ ரமே

(இ-ள்) நலம் பரவு—நன்மையெல்லாமமைந்த; அம் கரிக்கா — அப்புத்தலமாகிய திருவானைக்காவினுள்ள, பரம்சோதி—மேலான ஒளி வடிவானவன், நவவலை—புதிய வலையையேந்திய, கானல் — நெய்த நிலத்து, பரவன்—தலைவன், ஐந்தொழிலன் — ஐந்து வினைகளை யுடையவன், தொழிலில்—தனக்கென ஒரு தொழிலில் லாத, அனாதி — தோற்றமில்லாதவன், அம்பானல் — அழகிய நீலோற்பலத்தை, அம்பர்—அம்பாகவுடைய காமனது, அவயவ நீற்றியன்—உடலை எரித்தவனாகிய இறைவன், சீர்உனி—புகழை நினைந்து, நாவகம்—நாவகத்து, பன்னலம்—துதிக்கமாட்டோம், பரவம் — வணங்கேம், எனின், அவன் தாள்—அவன் திருவடிகளை அடையும், நல்வரம்—சிறந்த வரத்தை, தரல் எவ்வணம்—கொடுப்பது எவ்வாறு?

கடவுள் பரவனாகியது திருவிளையாடற் புராணத்தா லுணர்க. கானல்—நெய்தனிலம், ஐந்தொழில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்பன. "ஐந்தொழில் மருவா நின்றும், தொழிலொன்றில்லான்" என்றார் பிறரும். பரஞ்சோதி—எல்லாப் பொருட்குமப்

பாலாகியவொளி. "சோதியே சுடரே" என்பதனுனுணர்க. அநாதி—ஆதிக்குஆதி, முதல்வனுக்கு முதல்வன். ஆதிமூலத்து ஆதியாதலின் அநாதி எனப்பட்டது. கட்புலனும் வடிவொழித்துக் கருத்துருவை யளித்தமையின் அவயவ நீற்றியன் எனப்பட்டது. "வாழ்த்த வாயும், நினைக்க மடனெஞ்சும் தாழ்த்த சென்னியும்" என்ற சான்றோர் கருத்தான் சீருனிப் பன்னலம் பரவம் என்று கூறப்பட்டது. உன்னல், பன்னல், பரவல், திரிகரணத் தொண்டு. அவை மனமுதலியன. எவ்வணம் ? வினு எதிர் மறைக்கணின்றது. உனி என்பது இடைக்குறை. எவ் வணம்—தொகுத்தல் விகாரம்.

வரம்பரிக் கும்பெண் பரவைக்குத் தூதுவர் மாம துக்க
வரம்பரிக் குங்குமக் கொங்கையை வீழ்த்தும்
வகைதெ ரிந்தும்
வரம்பரிக் குங்கா விரிக்கரிக் காவர் மலைகு னித்த
வரம்பரிக் குண்டையர் எம்பர ரீந்திலர் மாலை யையே

(இ-ள்) வரம்பரிக்கும்—வரத்தினுற் றோன்றிய, பெண்பறவைக்குத் தூதுவர்—பெண்ணிற் சிறந்த பரவை நாச்சியாருக்காகத் தூது சென்றவர், வரம்புஅரிக்கும்—வெள்ளப்பெருக்கால் கரையைக் கல்லும், காவிரி கரிக் காவர்—காவிரியாற்றினையுடைய திருவானைக்காவை யுடையவர், மலைகுனித்தவர்—மேருவை வில்லாக வளைத் தவர், அம்புஅரிக்குண்டையர்—நீர் வடிவினரான திருமாலை ஊர்தியாகவுடையவர், எம்பரர்—எமது மேலான வராகிய அவ்விறைவர், மா மதுக்கவர்அம்பர்—வண்டுகள் தேனைக் கவரும் மலர் அம்பையுடைய மன்மதன், இக் குங்குமக் கொங்கையை வீழ்த்தும் வகைதெரிந்தும்—குங்குமக் குழம்பு அணிந்த தனங்களையுடைய இத்தலைவியை மோக பாணத்தால் தரையிற் கிடத்தும் கூறுபாடுகளைத் தெரிந்தும், மாலையை ஈந்திலர்—தம் மாலையை அளித்தாரில்லை. (எ-று)

(வி-ரை) பரவையென்ற ஒருசொல்பலபொருள் பயப்ப நின்றமையால் பரவையாரைக் குறிக்கப்பெண் என அடை புணர்க்கப்பட்டது. அம்பு அரி—நீர் வடிவமானவனும் அதிபனுமாகிய திருமால். "பாராதியைந்துக்கும் பன்னு மதி தெய்வங்கள் ஆராரயனுதி தேவராம் மாயனுதகத் திருவுடம்பு" என்றமையாலறியலாகும். பூமிக்குத் தலைவனுகிய திருமாலென்பது மொன்று. அம்பு சூழ்தலின் பூமிக்கு அம்பென்னும் பெயரானமை ஆகுபெயர். கடல்வண்ணன்—கடல்நிறத்தான் எனலாம். அம், பரி குண்டை என்று பிரித்து, அழகிய குதிரையை ஊர்தியாக வுடையவனெனினும் பொருந்தும். எல்லாப்பொருட்கும் எட்டானுயினும் எமக் கண்ணியன் என்னுங் கருத்தான் எம்பார் என்று சொல்லப்பட்டது. பெண்ணுக்காகத் தூது சென்றவர் இப்பெண்ணுக்கு மாலையை யளித்திலர் என்பதாம். மாமலை நாட தாமகல்கென வேண்டுதும் (நற்றிணை) துறை—கையுறை ஏற்றல். (௩)

ஐயக் கரவவை யைந்தா முருவினி லாண்டியையி
யையக் கரவடைந் தந்தாரு காவனத் தம்பயிற்சா
யையக் கரவவ ரிற்சென்று கற்போ டபகரித்த
ஐயக் கரவத்திக் காவவெற் காக்க வமையமிதே.

(இ-ள்) ஐ அக்கரவ—ஐந்தெழுத்தையுடையவனே, ஐயைந்தாம்உருவினில்—இருபத்தைந்துமூர்த்தங்களுள், ஆண்டியை இயையக் கரவு அடைந்து—பிச்சையேற்பானைப்போன்று தன்னுரு மறைத்துச்சென்று, அம் தாருகாவனத்து—அழகிய தாருகா வனத்திலுள்ள, அம்பு அயில் சாயை அக்கர்—அம்பினையும் வேலையும் வடிவாலும் தொழிலாலுமொத்த கண்களையுடைய முனிவர் மனைவிகள், அவவர்—அவரவர்கள், இற்சென்று—வீடுகள் தோறும் பலி யேற்கச்சென்று, கற்பொடு அபகரித்த—கற்புடன் கொள்ளைகொண்ட, ஐயம் கர—பிச்சைக் கலத்தைக் கையிலுடையவனே, அத்திக்காவ—திருவானைக்காவையுடையவனே, எற்காக்க அமையம்

இதே—என்னை யடிமைகொண்டு ஆண்டருளக் காலமிதுவேயாகும். (எ-று)

(வி-ரை) ஐயக்கரம்-'கூற்றை யஞ்சவுதைப்பன, அஞ்செழுத்துமே', என்றார் பெரியாரும். கற்போடுஎன்பதில் ஓடு காவலனோடூர் என்றமைபோல நின்றது. ஒடுஓடு என நின்று புணர்ந்தது. 'ஒடுவென் கிளவி உயர்பின் மேற்று' ஆதலின் உயர்பு பற்றி கற்பொடு என உரைக்கப்பட்டது. முனிவர் மனைவிகள் கற்பழிந்தமை கந்தபுராணத்துத் ததீசி உத்தரப் படலத்துட் காண்க. (எ)

மையலம் பங்கணி சோமன் றுதிசி வயநமகூர்
மையலம் பங்கயஞ்செய்யுழுந் தோற்காவரும்பரவேண்
மையலம் பங்கந் துளைக்க மடவார் வசம்படுமெம்
மையலம் பங்கந் தொடரா தளிப்பை மனனுவந்தே.

(இ-ள்) மைஅலம்பு அம்கணி—அஞ்சனந் தோய்ந்த அழகியகண்களையுடைய அகிலாண்டநாயகியும், சோமன்-குபேரனும், துதி—எத்தி வணங்கும், சிவயநம—பஞ்சாக்கரப் பொருளாயுள்ளவனே, கூர்மை அலம்—கூர்மையான கலப்பைகள், செய் பங்கயம் உழும்—வயல்களிலுள்ள தாமரைகளை யுழுது பேர்க்கும், தோற்கா வரும் பர—திருவானைக்காவில் எழுந்தருளிய பரம்பொருளே, வேள்மையல் அம்பு—மன்மதனுடைய காமபாணங்கள், அங்கம் துளைக்க—என் உடலை ஊடுருவ, மடவார் வசப்படும் எம்மை—(அக்காரணத்தால்) பெண்கள் குறிப்பினின்றொழுகும் கீழான எம்மை, அலம்—அதனால்வருந்துன்பமும், பங்கம்—இழிவும், தொடராது-சேராது பாதுகாத்து, மனன் உவந்து அளிப்பை—மனமகிழ்ச்சியுடன் எனக்குஅருள் செய்வாயாக. (எ-று)

(வி-ரை) சோமன்-குபேரன். அம்மை குபேரன் பூசித்தது தலபுராணத்துட்காண்க. சிவயநம-சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை, என்றார் பிறரும். உயர்திணை உம்மைத் தொகை பலரீறு

தொக்கது. வேள்மையல் அம்பு இரண்டுவகை, திரவிய பாணம், பாவபாணம் என்பவை. "அந்தணர விந்தமாம் பூவசோகப்பூப் பைந்தளிர் முல்லை பனிநீலம்—ஐந்தும்—விரைகுழலார் ஆடவரை வேளெய்யும் பூக்கள்—திரவிய பாணமெனவே செப்பு". "இங்கிதஞ் சந்தாபம் எழின் மதனம் மோகனமாம்—மங்கா வசீகரணம் மாரவேள்—தங்கள்-படைபாவையார் மைந்தர் பக்கமயல் செய்யுந்—தொடைபாவ பாணமெனச் சொல்". என்ற வெண்பாக் களாலறிக. எம்மை என்பது தன் போன்றாரையும் உளப்படுத்தியது என அறிக. (அ)

வந்த கமண்டலக் கையயன் மாலனல் மாலமண்ணி
வந்த கமண்டங்க ளோசை யொலியாம் வரன்பதத்து
வந்த கமண்டலம் போற்றவீட் டின்பம் வழங்குமெய்யு
வந்த கமண்டன்பு கொண்டு கரிக்கா வருந்தவர்க்கே.

(இ-ள்) கமண்டலம் வந்த கை அயன்—குண்டிகை யேந்திய கரத்தை யுடைய பிரமனும், மால் — திருமா லும், அனல்—தீயும், மால்—காற்றும், அம்—நீரும், மண் — நிலமும், நிவந்தகம்—உயர்ந்த ஆகாயமும், அண் டங்கள்—அண்டங்களும் அதிலுள்ள சராசரங்களும், ஓசை ஒலியாம் வரன்—ஓசையும் ஒலியுமாகிய மேலான சம்புநாயகரது, பதத்துவம்—உபய திருவடிகள், மெய் உவந்து—உண்மையாக மனமகிழ்ந்து, அகம் மண்டு அன்பு கொண்டு—மனத்தின்கண் நெருங்கிய அன்பைக் கொண்டு, கரிக்கா வருந்தவர்க்கு—திருவானைக்காவுக்கு வருந்தவத்தையுடையோர்க்கு, தகமண்டலம் போற்ற— மேலான உலகிலுள்ளோர் துதிக்க, வீட்டின்பம் வழங் கும் — பேரின்பத்தை யளிக்கும். (எ-று)

(வி-ரை) வீட்டின்பம் வழங்குவது, "போதமும் அழிவில்வீடும் போற்றினர்க்களிக்கவல்லான்"-என்பதனா னறிக. ஏற்பார் மாட்டொன்றுங்கருதாது கொடுத்தலின் வழங்குமென்று சொல்லப்பட்டது. "அயன் மால் நீர் முதலாகவாகியமை, "அரியானையந்தணர்" என்ற

தமிழ் மறையால் அறியலாகும். ஆகாயத்தை சிவந்தகம் என்று கூறப்பட்டது, தன்னை யொழிந்த பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய தன்மையாலென்க. "அனைத்தும் வழிபோம் விண்ணுநீ" என்ற தக்கயாகப்பரணியானும் "அகல்வானத்து வெயில் கரப்பவும்" என்ற மதுரைக் காஞ்சியானும் அறிக. வீடு—உயிர், காமம் வெகுளி மயக்கங்களினின்று விடுபடுவது. (கூ)

தவரந் தரமுத்தி யெய்தினும் வந்துநின் றாண்மலரேத்
தவரந் தரவேண்டு மென்றுதிக்குந் தமிழ்க்கரிக்காத்
தவரந் தரங்குனி யத்த ரருளிம்மி தானில்லையேல்
தவரந் தரங்கந் தமைப்போல் வருநஞ் சனனத்தையே.

(இ-ள்) தவர்—தவஞ்செய்து மெய்யுணர்வெய்திய வர்கள், அந்தரம் முத்தி எய்தினும்—சிதாகாசமாகிய முத்தி வீட்டை யடைந்தாலும், தமிழ்க் கரிக்கா வந்து—தமிழ்நிலைபெற்ற திருவானைக்காவிற்கு இன்னுமொரு முறை வந்து, நின் தாள் மலர் ஏத்த—நினது திருவடி மலர்களைத் துதிக்க, வரந்தர வேண்டும்—வரமளித்தருள வேண்டும், என்று துதிக்கும்.—என்று அம்முத்தியடைந் தோரும் வரம்பெறுந் தன்மையனும், அம்தரம் தவர் குனியத்தர்—அழகிய மேருமலையை வில்லாக வளைத்த கையினையுடையவனும் ஆகிய சம்பு நாயகரது, அருள் இம்மிதான் இல்லையேல்—அனைவரிடத்தும் செல்லுமருள் இம்மியளவாவது இல்லையானல், தரங்கம் தமைப்போல் வரும்—கடலலைபோல் ஓயாது வரும், நம் சனனத்தைத் தவரம்—நம் பிறவியை நீக்க மாட்டோம். (எ-று)

(வி-ரை) 'வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்றனை அர்ச்சிப்பர்'(சித்தியார்)'கூடுமன்பினிற்கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்', 'மாண்டு பிறக்குந் துயர் போய் வைகுந்தம் புக்கவரும் மீண்டு தொழக் காதலிக்கும்', என்றார் பிறரும். தரம்—மலை. இம்மி—மத்தங்காய், புல்லரிசியளவு "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்றெரிவார்"

என்றவிடத்து தினைபனை என்றாற் போல நின்றது. குறைந்ததோர் எண்ணுமாம். தவருதல் — தப்புதல். எதுகை நோக்கி இடையினமாயிற்று. "பிறந்தோருறுவது பெருகிய துன்பம்" (மணிமேகலை) மாணுப்பிறப்பு என்றார் வள்ளுவரும். தமிழ்—இனிமையெனலுமாம். (ய)

சனந்தர னல்வர்தந் தேசிகன் சம்புத் தவன்கனிய
சனந்தர னவா யயின்றவற் குக்கதி தந்தருளீ
சனந்தர னட்டோர் வரம்பெறுந் தோற்காத்
தலந்தொழிற்பா
சனந்தர னடா தொழியு மரணநஞ் சங்கடமே.

(இ-ள்) சனந்தரன் நால்வர் தம் — சனந்தரன் முதலாகச் சொல்லப்பட்ட நான்மறை ஆறங்க முதற் கற்ற கேள்வி வல்லரர்கள் நால்வருடைய, தேசிகன்— தொல்லாணை நல்லாசிரியரானவன், சம்புத்தவன்—சம்பு மாமுனிவன், கனி அசனம் தர-வெண்ணாவற்கனியைஉண வாக வைத்துப் பூசிக்க, நா வாய் அயின்று அவற்குக்கதி தந்தருள் ஈசன் — நாவையுடைய வாயினுற் சுவைத்து உண்டு அச்சம்பு முனிக்கு வீடு அளித்த கடவுள், அந்தரம் நாட்டோர். வானின்கண் வாழும் திருமால் முதற்றேவர் கள், வரம்பெறும்—வணங்கிவேண்டிய வரத்தையடை யும், தோற்காத்தலம் தொழின்—திருவானைக்காப்பதி யை வணங்கினுல், பாசம் நம் தரம் நாடாது—பந்தபாசம் நம் பக்கலில் சேராது, மரண நம் சங்கடம் ஒழியும்— நம் மரண வேதனை நீங்கும். (எ-று)

(வி-ரை) நால்வர்—சனந்தரன், சனகன், சனாதன், சனற்குமாரன்; இவர்கள் கல்லாலின் கீழிருந்து இறை வனுல் நல் ஞானம் உணர்த்தப்பெற்றவர்கள். கனியசனந் தால் தலபுராணத்துட் காண்க. "சென்மமு மரணமு மின்றித் தீருமே"—கம்பர். தேசிகர்—ஞான குரு. தலச் சிறப்புக் கூறியவாறு. (யக)

கடம்பணி னானம் புனைந்தா னிகர்முலைக் கன்னிபங்கா
கடம்பணி னாதனத் தாதே னுணமுகைக் கட்டையளி
கடம்பணி னானீக்கும் தோற்காவ வாண்டருள்
கைத்தெமைவி
கடம்பணி னானா ரிடஞ்சென்று கேட்பேன் கழறரவே.

(இ-ள்) கடம்—குடமானது, பணி — அணிகளையும், நானம்—கத்தூரியையும், புனைந்தால் நிகர் முலைக் கன்னி பங்கா — அணிந்தாலனைய தனங்களையுடைய உமையின் ஒரு கூறாயுள்ளவனே, கடம்பு அணிநாதன் அத்தா—வெண்கடம்புமாலையை யணிந்த முருகனுக்குத் தந்தையாகவுள்ளவனே, தேன் உண — தேனையருந்த, முகைக்கட்டை—அரும்புகளின் முறுக்கை, அளிகள் தம் பணினால் நீக்கும் தோற்காவ — வண்டுகள் இசை பாடி அவிழ்க்கும் தடாகங்களையுடைய திருவானைக்காப்பதியை யுடையவனே, ஆண்டருள்—என்னை அடிமை கொண்டு கிருபை செய்வாய், கைத்து எமை விகடம்பணின்—எம்மை வெறுத்து நீ வேறாகச் செய்யின், கழல் தர—நின் திருவடிகள் தரும் பிறவிப்பிணியறும் வீட்டினை, நான் யாரிடஞ் சென்று கேட்பேன் — வேறுயாவரிடம்போய் கேட்பேன்; ஒருவரிடமும் செல்லேன். (எ-று).

(வி-ரை) கடம்பணி நானம் எனற்பாலது எதுகை நோக்கிக்கடம்பணி னானம்என்றாயிற்று. மற்றவையுமன்ன. வண்டுகள் தம் பண்ணினால் முகைக்கட்டை யவிழ்த்தல். "கவின்முகைக் கட்டவிழ்ப்பத் தும்பி யூதும்" (பரி) என்பதனானறிக. விகடம்—வேறாக நினைத்தல். கழல் -தானி ஆகுபெயர். பணினால்-தொகுத்தல்விகாரம். (௰௨)

தரங்க மலமணி தாருதந் தூளத் தரணி பொன்னனந்
தரங்க மலர்க்கண னார்தரி னும்பெறுந் தன்மையலேன்
தரங்க மலர் மொக்குள் போலவை மாயுந் தவமுதிர்பத்
தரங்க மலம்பெறுந் தோற்காவ வீனைமெய்த்
தானத்தையே.

(இ-ள்) தவம் முதிர் பத்தர் அங்கு அமலம் பெறும் தோற்காவ — தவத்தைச் செய்து முதிர்வு அடைந்த அடியார்கள் அவ்விடத்து வந்து மெய்ஞ் ஞானத்தை யடையும் திருவானைக்காவையுடையவனே, தரம்—சங்கநிதி, கமலம் — பதுமநிதி, மணி — சிந்தாமணி, தாரு—கற்பகத்தரு, தந்து-இவைகளைக்கொடுத்து, ஆள—யான் ஆட்சி புரிய, தரணி — மண்ணுலகத்தையும், பொன் அந்தரம்—விண்ணுலகத்தையும், கம் ஊர்—பிரம உலகத்தையும், மலர்க்கணன் ஊர்—வைகுந்தத்தையும், தரினும் — எனக்குக் கொடுத்தாலும், பெறும் தன்மையலேன் — யான் பெற்றுக்கொள்ளுமியல்பிலேன், அலர் தரங்கம்—நீர் அலையிலுண்டாகும், மொக்குகள் போல்—நீர்க்குமிழிபோல, அவைமாயும்—அவைகளெல்லாந் தோன்றியழியும், (ஆகையால்) மெய்த்தானத்தை ஈவை—என்றும் அழியாத நின் முத்தியுலகை எனக்கு அளிப்பாயாக.

(வி-ரை) சங்கநிதி பதுமநிதி வைகுந்தம் முதலியவை தொழின்மாய் சிற்பங்களின் வீவன ஆதலால் வேண்டேனென்றும், மெய்த்தானம் பூதமெலாமுகினும் மறுகாநெறி ஆனமையால் வேண்டுமென்றுங் கூறப்பட்டது. சிந்தாமணி முதலியவை—கருதியது கொடுப்பவை. தாரு—கேட்டவற்றைக் கொடுப்பது. தரம், கமலம், சங்கம், பதுமங்களின் பரியாய நாமம். தரம்—சங்கு. கம் — பிரமன். அலர் — நீர். மலர்க்கணன்—திருமால். மெய்ஞ்ஞானத்தாலன்றித் தவத்தால் வீடெய்தாதெனக் கருதித் தவமுதிர் பத்தர்கள் வந்து மெய்யுணர்வையடையும் திருவானைக்காவென்க. "தவத்தாற் சுவர்க்கமாம்—ஞானத்தால் வீடாக நாட்டு".'பிரம ஞான மொன்றுமே முத்திக்கேது — ஞானமலதுகதி கூடுமோ' என்றார் பிறரும். திருவானைக்காவிற்கு ஞானக்ஷேத்திரமென்றோர் பெயருளது ஈண்டுக் கவனிக்கத்தக்கது. தரினும்—உம்மை இழிவு சிறப்பும்மை. மலர்க்கணன்—விகாரம். (௰௩)

நத்தனங் கட்டந்து பூசித்த தோற்கா நகர்விடப்பா
நத்தனங் கட்ட தலத்துவீ ரம்புரி நாதன்மெய்யீ
நத்தனங் கட்டனர் மண்யா னெனதென் னசை
யெனுங்க
நத்தனங் கட்டற நாவே வழுத்தவ னமத்தையே.

(இ-ள்) நத்தன்—திருமாலானவன், அம் கண் தந்து பூசித்த—அழகிய கண்ணையிடந்தர்ச்சித்த, தோல் கா நகர்—திருவானைக்காவிலுள்ள, விடப்பானத்தன்—நஞ்சை உணவாக உண்டவன், அட்ட தலத்து — இம் மண்ணுலகில் எட்டுத் தலமாகிய இடங்களில், வீரம்புரி நாதன்—வீரத்தைக் காட்டிச் செயல்களைப்புரிந்த இறைவன், மெய் யான் என்—தானல்லாத உடம்பை யானென்றும், ஈனத்தனம் கட்டனர் மண் எனதென்— இழிந்தபொன்னும் சூசுகத் தனத்தையுடைய பெண் களும் நிலமும் ஆகிய தன்னோடியையில்லாத இப் பொருள்களை எனதென்றுஞ் சொல்லும், நசையெனும்— ஆசையென்கின்ற, கனத் தனம் கட்டு அற—பலத்த நம் பாசக்கட்டு நீங்க, நாவே அவன் நாமத்தை வழுத்து— நாவே அவ்விறைவன் புகழினைச் சொல்லித்துதிப்பாயாக. (எ-று).

(வி-ரை) திருமால் கண்ணையிடந்து பூசித்தமை— "செம்மலர் ஆயிரந் தூய்க் கருமாறிருக்கண்ணணியும், மொய்ம்மலரீர்ங்கழல்" என்றகோவையாராலறிக. அட்ட தலத்து வீரம்புரிதல்:— "பூமன் சிரங்கண்டியந்தகன் கோவல் புரமதிகை—மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழூர்—காமன் குறுக்கை யமன் கடவூரிந்தக் காசி ணியில்—தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே" என்ற பாவானுணர்க. இழிந்தோர்கண் ணுண்டாம் பொருளினை ஈனத்தனம் எனப்பட்டது. "பொய்யா நாவதனாற் புகழ்வார்கள் மனத்தினுள்ளே மெய்யே நின்றெரியும் விளக்கே யொத்த தேவர்பிரான்" என்ற தமிழ் மறையால் நாவே வழுத்து என்று சொல்

லப்பட்டது. "யானென தென்னுஞ் செருக்கறுப்பான்", "யானெனதென்ப திருந்திடுகாறும் ஞானமுறுன்", "நீர்நும தென்றிவை வேர்முதன் மாய்த்திறைசேர்மின்", என்பன சான்றோர். மெய்மொழிகள். அரிமத்தன கட்டாவது முத்திநெறியிற் புகவொட்டாது தடுத்து மனைவி யர்தியரிடத்து நேசமிகச் செய்வது. மெய்மையிற் செல்லாது தடுத்து பிற்றலிற் கட்டெனப் பட்டது. ணகரம் டகர மாயது, "ணனவல்லின வரட்டறவும்" என்ற நூற்பாவான் என்க. வழுத்து—விகுதிகுன்றிய எவல்வினை. நாவே அவன் நாமத்தை வழுத்து எனக்கூட்டுக. (௰௪)

மத்தனப் பஞ்சடை யான்கரிக் காவுமை வாமனரி
மத்தனப் பஞ்சவன் முன்னரி மாசெய் வலன்வனத்தா
மத்தனப் பஞ்ச நகையழ லாற்புர மாய்த்தவன்வா
மத்தனப் பஞ்சடி யாடுதி தாளெம் மனம்வைகுமே.

(இ-ள்) மத்தன்—உன்மத்தன், அப்பு அம் சடை—கங்கையை அழகிய சடைமுடியில் வைத்த, ஆன் கரிக்கா—திருவானைக்காவை யுடைய, உமைவாமன்—உமாதேவியை ஒரு கூற்றிலுடையவன், அரிமத்தனப் பஞ்சவன்முன் — அரிமர்த்தனப்பாண்டியன் முன்னிலையில், நரி மா செய்வலன் — நரிகளைக் குதிரைகளாகச் செய்யும் வன்மையுடையான், வன தாமத்தன் அப்பு அஞ்ச—துளப மாலையையுடைய திருமாலாகிய கணையானது பயங்கொள்ள, நகை அழலால் புரம் மாய்த்தவன் —புன்னகையாகிய தீயால் திரிபுரத்தையழித்தவன், வாம தனப் பஞ்சு அடியாள் — அழகிய தனத்தையும் செம்பஞ்சூட்டிய திருவடிகளையுமுடைய அகிலாண்ட நாயகி, ஆதி — பரவும், தாள் — அவ்விறைவனது திருவடிகள், எம்மனம் வைகும்—எம்மனத்தின்கண் இடையறாது தங்கும். (எ-று)

(வி-ரை) பாண்டியரைப் பஞ்சவரென்றது, "பழியொடுபடராப் பஞ்சவ"வென்றும், "செருமாண் பஞ்சவ

ரேறே'' என்றுங் கூறுவனவற்றாலறியலாகும். பாண்டி நாடு ஐவகை நிலங்களும் உடையதாதலின் பாண்டியனுக்குப் பஞ்சவனென்னும் பெயருண்டாயிற்றென்பர். தருமன் முதலிய ஐவர் வழிவந்தவர் என்னுங் கொள்கை பற்றியுமென்பர். நரிபரியாக்கியமை திருவிளையாடலா லுணர்க. அப்பு—வலித்தல் விகாரம். வலன்—விகாரம்.
(டுரு)

வையம் படைத்தரு வோட்டுமா லங்க மறைதத்துவம்
வையம் படைத்தவன் சொற்பொருட் கெட்டா [வரமதிப்பா
வையம் படைத்த முடியவ வானைக்கா மன்னுமுக்க
வையம் படைத்தலை வாதுடைப் பாவெம் மலப்பவமே.

(இ-ள்) வை அம்பு அடைத்தரு ஓட்டுமால்—கூரான கணையைத் தழைகளையுடைய மராமரத்தின் வரிசை மேலேவும் திருமாற்கும், அங்கம்—ஆறங்கங்கட்கும், மறை—நான்கு வேதங்கட்கும், தத்துவம்—தத்துவங் கட்கும், வையம் படைத்தவன்—பிரம்மனுக்கும், சொல்—சொல்லுக்கும், பொருட்கு—பொருளுக்கும், எட்டா வர—எட்டாத பரனே, மதி—சந்திரனையும், பாவை அம்பு—பெண்ணாகிய கங்கையையும், அடைத்த முடியவ—தாங்கிய சடாபாரத்தை யுடையவனே, ஆனைக்கா மன்னும்—திருவானைக்காவில் நிலைபெற்றிருக்கும், முக்கவை அம் படைத்தலைவா — மூன்றாகக்கவைத்த அழகிய சூலப் படைக்குத் தலைவனே, எம்மலப்பவம் துடைப்பாய் — எமது மலங்களாலுண்டாகும் பாவங்களை நீக்கியருளுவாயாக (எ-று).

(வி-ரை) ''கணைதரு வோட்டுதல்'' இராமாயணத் துட்காண்க. அங்கம்—மந்திரம், வியாகரணம், நிகண்டு, நிருத்தம், சோதிடம், சந்தோபிசிதம் என்பவை. மறை—இருக்கு, எசுர், சாமத்தொடு, அதர்வணம் என்பவை. தத்துவம்—பூதங்கள், கன்மேந்திரியம், ஞானேந்திரியம், புலன்கள், மனம் முதலிய அந்தக்கரணங்கள். மூலப்பகுதி

புருடன் முதலாகச் சொல்லப்படுவன. "அரியதத்து வமையைத்தின் பேதமும்" என்றார் பிறரும். சொற்பொருளுக்கெட்டாமை," "சொல்லும் பொருளு மிறந்த சுடரை" சொற்பதமுங் கடந்து நின்ற சூழலாய்" என்றார் பெரியாரும். வேதம் நான்கில், அதர்வணத்துள் உயிர்கட்குக் கேடு சூழும் மந்திரங்களும் பயிறலின் அம்மூன்றுடன் கூறப்படாததாயிற்று. இதுபற்றி "மும்மறையாலும் வணங்கப்படுகின்ற முக்கணக்கன்" என்றார் பெரியாரும். "மூன்று மாறு நெடு முதல் குறுகும்" என்பதனல், மூன்றுகவை — முக்கவை என்றாயிற்று. மலம்—ஆணவம், கன்மம், மாயை. கங்கையைப் பெண்ணென்றமை, "ஐங்கரனைச் சங்கரனைக் கங்கை மானை" என்ற காசிகாண்டத்தாலறிக. (கசு)

பவனலங் கட்ட குருலிங்க சங்கமப் பத்தியினுற்
பவனலங் கப்பெற்ற வொன்பதிற் றேழொன் [பதின்மர்க்கருள்
பவனலங் கத்தமிழ்த் தோற்காத் தொழினமைப் [பற்றறவேழ்
பவனலங் கண்டவன் பாராக்கு வான்றம் [பழந்தமர்க்கே.

(இ-ள்) பவன்-எல்லாவற்றையும் பிறப்பிக்கும் சிவன், அலம் கட்ட—பிறவித்துன்பம் நீங்கிய, குரு—குருபத்தியினுலும், லிங்கம்—இலிங்கப்பத்தியினுலும், சங்கமம்—அடியார்பத்தியினுலும், பவம்-பாவங்கள், நலங்கப்பெற்ற-கைக்கப்பெற்ற, ஒன்பதிற்று ஏழ்-அறுபத்துமூவருக்கும், ஒன்பதின்மர்-ஒன்பதின்மருக்கும், அருள்பவன்-கிருபை செய்பவன், அலங்கத் தமிழ்த் தோற்கா — திருநீற்றுத் திருமதில் சூழ்ந்து தமிழ் வீற்றிருக்குந் திருவானைக்காப் பதியைத், தொழின்—நாம் ஒரு முறை வணங்கினல், பற்றற—இருவகைப் பற்றும் நீங்க, நமை-நம்மைத், தம் பழந்தமர்க்கு-தம் பழவடியார்க்கு, ஏழ்பவம் நலங்கண்ட அன்பார் ஆக்குவான்—எழு பிறவியினும் நன்மையைக் கொண்ட அன்பராகச் செய்துவைப்பன் (எ-று).

(வி-ரை) அறுபத்துமூவர்-தனியடியர். ஒன்பதின்மர்—தொகையடியர். ஒன்பதிற்று என்றமை, "ஒன்பானிறுதியுருபுநிலைதிரியா" என்ற தொல்காப்பியவிதிப்படி. "ஒன்பதிற்றுத்தடக்கை" (பரிபாடல்) என்றார் பிறரும். எழுவகைப் பிறவியாவன, "ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம், நீர்ப்பறவை நாற்காலோர் பப்பத்தாம்-சீரிய, பந்தமாம் தேவர் பதினா லயன்படைத்த, அந்தமில்சீர்த் தாவரநா லைந்து" என்ற வளையாபதியாலறிக. ஒருவற்குப் பிறவியேழுள வென்பது, ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து, "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்" "எந் தொல் பிறவி, ஏழுமெழுதா வகை சிதைத்தோன்" "எழுமையுந் தான்புக்கழுந்து மளறு" என்பனபோன்றதொடர்களானறிக. தம்மடியார்க்கன்பனுக்குவது, "இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்தவெம்பெருமான்" என்பதனாலறிக. (கஎ)

தமரங் கலறச் சமனெமைப் பற்றுஞ் சமயமியத்
தமரங் கலக்கடல் போலிசை நாவலந் தானகுருந்
தமரங் கலந்த பெருந்துறை யாய்நின் றரக்கஙிச்சித்
தமரங் கலர்தா ளருளியாட் கொள்வை தகவலிந்தே.

(இ-ள்) இயத்தமரம்—வாச்சிய வொலிகள், கலக்கடல்போல்இசை—மரக்கலங்களையுடைய கடலைப் போல இசைக்கும், நாவலந்தான — சம்புகேச்சுரத்தையுடையவனே, குருந்த மரம் கலந்த பெருந்துறையாய்—நிறைமலர்க்குருந்த மேவியசீர்த் திருப்பெருந்துறையையுடையவனே, தரக்கு — புலிவடிவினராய வியாக்கிரபாதர், அகி—பாம்புருவான பதஞ்சலியார், சித்தம்—ஆகியஇருவர் உள்ளத்திலும், அரங்கு—பொற்சபையினும், அலர்-தாண்டவஞ்செய்கின்ற, நின் தாள்—நினது திருவடிகளை, தமர்அங்குஅலற — சுற்றத்தார் ஆண்டு கதற, சமன் எமைப்பற்றும்சமயம்—கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறலொருவன் பிணிக்குங்காலை, அருளி—காட்டியருளி தக-

மேன்மையுற, வலிந்து ஆட்கொள்வை—வலிந்துதானே வந்து ஆட்கொள்வாயாக. (எ-று.)

(வி-ரை) தரக்கு—புலி, அகி—பாம்பு, "கொல்லத் தானமனார் தமர்வந்தக்கால், இல்லத்தார் செயலாவதென்" என்பது தேவாரம். வலிந்து ஆட்கொள்வது, இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாரை ஆட்கொண்டமை போல்வது. சமன்—கூற்றுவன், கூற்றுவன் வலியார் மெலியார் என்றிராது யாவரிடத்தும் ஒப்பச்சேறலின் சமன் எனப்பட்டானென்க. (கஅ)

கவனப் பரிச்செங்கட் சோழன் சிலம்பி கரிபுரமே
கவனப் பரிதுதி சாமகண் டன்கரிக் காநரைப்புங்
கவனப் பரின்றமிழ் போன்மென் றமிழு முகந்தவனு
கவனப் பரிதியின் பற்றகர் பூத கணத்தவனே.

(இ-ள்) கவனப்பரி — ஐங்கதி மண்டலம் வீதி கோணமே முதலாங் குதிரைகளைக் கொண்ட, செங்கட் சோழன் — கோச்செங்கட் சோழனுக்கும், சிலம்பி—சிலம்பிப் பூச்சிக்கும், கரி—வெள்ளையானைக்கும், புரம் மேகம் வனப்பு அரி—மேகவண்ணனாகிய திருமாலுக்கும், துதி—வணங்கும், சாமகண்டன் சாம இசை பொருந்திய கழுத்தை யுடையவன், கரிக்கா நரைப்புங்கவன் — திருவானைக்காவிலுள்ள வெள்ளை இடபவாகனன், உகவனப் பரிதியின்—கொட்டச் சூரியனின், பல்தகர் பூதகணத்தவன்—பல்லைத் தகர்த்த பூதப்படையை உடையவன், அப்பர் இன்றமிழ் போன்ம்— திருநாவுக்கரசர் இனிமையான தேவாரத்தைப்போல, என்றமிழுமுகந்தவன்—என் புன்றமிழினும் ஆர்வங்கொண்டவனவன் (எ-று).

(வி-ரை) ஐங்கதி "விக்கிதம் வற்கிதம் வெல்லுமுபகண்டம், மத்திமஞ்சாரியோடைந்து," மண்டலம், வீதி, சாரிகோண முதலியவைகளின் விரிவை சாலிகோத்திரம், உன்னயம் முதலாம் பரியிலக்கணங் கூறும் நூல்களிற் கண்டுணர்க. ஈருதியில்லாமை, "துஞ்சு நாட்டுறந்து

தோற்றமுமில்லாச்சோதி'' என்றும், புங்கவம் — இடபம். ''புங்கவ மூர்வேனும்'' (பரிபாடல்) என்றும், என்றமிழ் உகந்தவனென்பது, சிறியவனது புன்மொழியும் வடிதமிழ் தெரியுமவர் முதுசொல்லெனச் சூட்டினர் என்றும்,சூரியன் பல்தகர்த்தது ''பகல் குன்றப் பல்லுகுத்தோன்'' என்றும், உரைத்த சான்றோர் கருத்தால் உணர்க. மறைக்காட்டில் திறக்கப்பாடுங்கால் பத்தாம் பாடலில் கதவுதிறந்தமை அப்பரின் செய்யுள்நயங்கருதிப் போலும். (கக)

கணக்கா விரிந்தவை யாறம்பர் தஞ்சைமா காளநுதற்
கணக்கா விரிஞ்சன் றுதிதமிழ்ச் சங்கங் கலந்தமுதற்
கணக்கா விரிபவங் கங்கைநீ ராடிக் கழிக்குமந்தக்
கணக்கா விரிக்கரிக் காவா கதியருள் கையனெற்கே.

(இ-ள்) கணக்கா விரிந்த-கூட்டமாகிய சோலைகள் சூழ்ந்த, ஐயாறு—திருவையாறு, அம்பர்—திருவம்பர், தஞ்சை-திருத்தஞ்சை, மாகாளம்-திருமாகாளம் முதலிய திருப்பதிகளிலெழுந்தருளிய, நுதற்கண் அக்கா—நுதல் விழிநாட்டத்திறையோய், விரிஞ்சன் துதிதமிழ்ச் சங்கம்-பிரமதேவனும் துதிக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் கண், கலந்த முதற்கணக்கா—தங்கிய முதலாசிரியனே, கங்கை நீராடி இரிபவம் கழிக்கும்—கங்காநதியில் தீர்த்தமாடித் துணுக்குறத்தக்கத் தீவினைகளைப்போக்கும், அம் தக்கணக் காவிரி—நீர் ஒழுக்குறுத் தென்காவிரி நதியையுடைய, கரிக்காவா—திருவானைக்காவையுடையவனே; கையன் எற்குக்கதியருள்-கயவனாகிய எனக்கு வீட்டினையருளுவாயாக. (எ-று)

(வி-ரை) கணக்கன் என்பது — ஆசிரியற்காயது. ''கல்வியிற்றிகழ் கணக்காயர் கம்பலை'', சமயக் கணக்கர், கணக்காயனார் மகனார் என்பவற்றாலுணர்க. இறைவன் முதற்புலவனென்பது, ''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி'' என்ற தமிழ் வேதத்தாலறியலாகும்*. காவிரி—

(* கணக்கு—நூல்; நூல்களை ஆய்பவர், கணக்காயர் ஆவர்.)

இருமருங்கினும் சோலை விரிதற்குக் காரணமாக இடை நடுவே யொழுகும் யாறு. காவேரியெனவருவது, "திங்கள் மாலை........நடந்தாய் வாழி காவேரி" என்ற (சிலம்பு) தொடராலறியலாகும். இரிபவம்-பிரமகத்தி முதலியவை. கங்கை வந்து தெற்கின்கண்ணுள்ள காவிரியில் நீராடித் தன் பாவங்களைப் போக்கு மென்க. இறைவன் இயற்றமிழில் விருப்புள்ளவனென்பது பெறப்பட்டது. (உ௰.)

கைத்தனந் தாரலர் பாற்சென் றிரந்து கமலமென்மு
கைத்தனந் தாரற் குழலியர்க் கீந்து கலந்துமனங்
கைத்தனந் தாரணிப் பற்றறுத் தாள்வைதோற்
காவகபங்
கைத்தனந் தாரங் கொளத்தந்த தொன்மறைக்
கானகனே.

(இ-ள்) தோற்காவக—திருவானைக்காவையுடையவனே, பங்கைத் தன் தாரங்கொளத் தந்த — இடப்பாகத்தைத் தன் மனைவியாகிய உமாதேவியார் தங்க வளித்த, தொன்மறைக் கானக — பழமையாகிய திருமறைக்காட்டை யுடையவனே, கைத்தனந் தாரலர்பால்-யாம் கைப்பொருளை யீயாத இழிந்தோரிடத்து, சென்று-கால் தேய நடந்து, இரந்து — அவர்களைப் பல்காலும் கேட்டி யாசித்து, கமலமென்முகைத் தனம் தார் அல் குழலியர்க்கீந்து—அப்பொருளை தாமரையின் மெல்லிய அரும்புபோன்ற தனமும் மாலையணிந்த இருண்ட கூந்தலுமுடைய பெண்களுக்குக் கொடுத்து, கலந்து—அவர்களைச் சேர்ந்து, மனம் கைத்தனம் —(அதனாலுண்டாகிய துன்பத்தால்) மனம் வெறுத்துவிட்டோம், தாரணிப்பற்று அறுத்தாள்வை—பூமியின்கண் பலவிதமாக வரும் அவாவை எனக்கு நீக்கி என்னை அடிமை கொண்டருள்வாயாக. (எ-று)

(வி-ரை) தாரணி—ஆகு பெயர். தார் அல் — அல் தார்-இருளின் நீட்சியையொத்த வெளிணுமமையும்.

பங்கைத் தன் தாரங்கொள என்றது, பிருங்கி முனிவன் வண்டுருவமடைந்து இறைவனை மட்டும் வணங்க அது கண்டு இறைவி ஒரு கூற்றினைத்தான் வாங்கினள் என்ற வரலாறு பற்றியென்க. ஈயாமை இழிவென்பது "ஈயே னென்றலதனினுமிழிந்தன்று" என்ற புறப்பாட்டா லறிக. (உக.)

நகத்தா ரணிபுன் றொழில்செயு மெம்மையு நாணிவிற்க
நகத்தா ரணியா ரயன்சிரங் கண்டி நசித்தசெங்கை
நகத்தா ரணிக்கரிக் காவெண் குணத்தார் நலிவிடப்போ
நகத்தா ரணிப்பணி கொண்டது விந்தையிந்
நாட்டகத்தே.

(இ-ள்) நாணிவில் கனகத் தாரணியார்—நாணை யுடைய வில்லாகப் பொன்மலையையுடையவரும், அயன் சிரம்—பிரமன் தலையிலொன்றை, கண்டிநசித்த—திருக் கண்டியூரில் கிள்ளியருளிய, செங்கை நகத்தார்—சிவந்த கையிலுள்ள விரனகத்தையுடையவரும், அணிக்கரிக்கா-அழகிய திருவானைக்காவிலுள்ள, எண் குணத்தார்—எட்டுக் குணத்தையுடையவரும், நலிவிடப் போனகத்தார்-யாவரையும் கொல்லும் விடத்தை உணவாகக் கொண்டவருமாகிய அவ்விறைவர், தாரணிநக—பூமியிலுள்ளோர் நகைக்க, புன்றொழில் செய்யும் எம்மையும்-ஈனத்தொழில் செய்யும் என்னையும், இந்நாட்டகத்து—இவ்வுலகின்கண், அணிபணிகொண்டது விந்தை—அண்மையில் ஆட்கொண்டது வியப்பாகும் (எ-று).

(வி-ரை) கண்டி—அட்ட வீரட்டங்கள் புரிஇடங் களுளொன்று, எண்குணம்—தன் வயத்தனாதல் முதலி யன, "எட்டுக் கொலாமவரீறில் பெருங்குணம்" "எண் குணத்தான் தாளை" என்றார் பெரியோரும். உலகை—நாடு என்ற வழக்கு, தவநெறிகாட்டிலில்லை—என்ற மந் திரத்தாற்றெளிக, விடம் போனகம் ஆயது பாற்கடல் கடைந்த கதையான் உணர்க. கிள்ளியருளிய என்றது எண் மைப்பொருளைக் காட்டிற்று. தாரணிநகஎனமாறுக.

புன்றொழில் செய்யும் எம்மையும் என்றது இழிவுச் சிறப்பு. (உஉ)

கத்தமை யாரணத் தான்மற் றளவையாற் காணரும்பா
கத்தமை யாரத்த ஞஞ்சுத ஞங்கரிக் காவபற்று
கத்தமை யாரமிட் டேத்தன்ப ரீட்டங் கதிபெறச்செய்
கத்தமை யாரங் களத்தவெற் காப்பை கழல்கடந்தே.

(இ-ள்) கத்து அமை ஆரணத்தான்—ஒளியொடு கூடிய கருத்தாமொழியாகிய ஆகம அளவையானும், மற்றளவையான்—ஏனைய காட்சி கருதல்ஆகிய அளவைகளானும், காணரும் — காணவொண்ணாத, பாகத்து அமையார் — இடப்பாகத்துள்ள உமையம்மையாருக்கு, அத்தனும் சுதனும் கரிக்காவ—தந்தையும் மகனுமாகிய திருவானைக்காவை யுடையவனே, பற்றுஉக—அகப்புறப் பற்றுக்கள் நீங்க, தமை ஆரம் இட்டு ஏத்து அன்பர் ஈட்டம்—தன்னை மாலை யணிந்து துதிக்கும் அடியார் கூட்டம், கதிபெறச்செய்கத்த — வீடடையச் செய்து வைக்கு மிறைவனே, மையார் அம் களத்த — இருண்ட அழகிய கண்டத்தையுடைய நீலகண்டனே, கழல்கள் தந்து எற்காப்பை—திருவடிகளைத்தந்து என்னைக் காப்பாற்றுவாயாக (எ-று).

(வி-ரை) அளவைமூன்று. அவை காண்டல், கருதல், உரை என்பன. சிவதத்துவத்தினின்றும் சத்திதத்துவம் தோன்றலின் அம்மையார் அத்தனு மென்றும், சத்திதத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் சுதனு மென்றும் கூறினர். "இமவான்மகட்குத் தன்னுடைக்கேள்வன் மகன்றமப்பன்" "என்ற திருவாசகத்தாலறிக. பற்றுகுதல், காரணமாகிய இருவகைப் பற்றுமொழிந்த அந்நிலையில் அவற்றின் காரியமாய பிறவியறும் என்றதாம். "பற்றுக பற்றற்றான்.......பற்று விடற்கு" என்ற வள்ளுவர் வாய்மொழியும் காண்க. அகப்புறப் பற்றுக்கள் உம்மைத்தொகை. நீலகண்டன் பெயர் மாத்திரையாய் நின்றது. பச்சிலை பழம்போதேனும் பறித்

திட்டுப் பத்தி செய்வோர், "இச்சையால் மலர்கடுவி யிர வொடும் பகலுந்தம்மை, நச்சுவார்" "கலம்பகம்புனைந்த, அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவாம். என்றார் பெரியாரும். வீடளிக்குங்கால் நின்னினுஞ் சிறந் தது நின்றாளிணை யாதலால் பிறவியறுக்குங் கழல்கள் தந்து எற்காப்பை என்று கூறினர். நற்றாள் என்றதூஉம் காண்க." (உங)

தந்த நயனக மோங்தெரு டோற்காச் சலவுருவ
தந்த நயனடு வேங்கப் பருத்த தனவரிசைத்
தந்த நயனவெண் முத்தயி லொத்த தளிரியல்கள்
தந்த நயனச்சும் பாவியெற் கீகழற் றாமரையே.

(இ-ள்) தம் தநயனகம் — தன் மகனிடம், ஓம் தெருள் — பிரணவப்பொருளைக் கேட்டுத்தெளிந்த, தோற் காச் சல உருவ — திருவானைக்காவில் நீருருவாயுள்ள வனே, தந்து அனைய — நூலை யொத்த, நடுவு ஏங்க — இடைதுவள, பருத்த தனம் — பெருத்த கொங்கைகளை யும், வெண்முத்து அயில் ஒத்த — வெண்மையான முத்துக் களையும் வேலையும் ஒத்த, வரிசைத் தந்தம் நயனம் — வரிசையான பற்களையும் கண்ணையுங்கொண்ட, தளிரியல் கள் — தளிரின் தன்மையமைந்த பெண்கள், தந்த நயம் — கொடுத்த இனிமையாகிய காம இச்சையை, நச்சும் — விரும்பும், பாவியெற்கு பாவியாகிய எனக்கு, கழல் தாமரை ஈ — தாமரை போன்ற நின் திருவடிகளை அளிப் பாயாக. (எ-று)

(வி-ரை) தம் தநயன் — குமாரக் கடவுள், தந்த நயனம் வெண்முத்தயில் ஒத்த என்பது நிரனிறை. "ஒத் தது வென்றதென்றொரு பொருட் குவமை, வைத்தன வரமொரு தொடர்பினும் வருமே.". (மாறனலங்காரம்) தளிர்போன்ற மெல்லிய உடலையுடையார் எனப் பொருள் படுதலின் உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை. ஈ என்பது இழிந்தோன் கூற்று

"ஈ யென்கிளவியிழிந்தோன் கூற்றே" என்பது தொல்காப்பியம். (உச)

தாமரை யானந்து கண்ணு தரங்களந் தந்தமுத்துத்
தாமரை யானனத் தாடவத் திற்கிடந் தந்துடலந்
தாமரை யான வருள்வடி வாங்கரித் தானமராத்
தாமரை யானவை யேற்குநின் றொழச்
சார்வினையே.

(இ-ள்) மரை—மானும், ஆல்—ஆலிலையும், நந்து-சங்கும்போன்ற, கண்—கண்களும், உதரம்—வயிறும், களம்—கண்டமும், முத்துத்தந்தம் — முத்துக்களைப் போன்ற பற்களும்; தாமரை ஆனனத்தாள்—தாமரை போன்ற முகத்தையுடைய உமாதேவியார் செய்த, தவத்திற்கு—தவத்திற்காக, இடந்தந்து — இடப்பாகத்தை யளித்து, உடலம் தாம் அரையான--உடலினுல்தாம் ஒரு கூறுயுள்ள, அருள் வடிவாம்--அருளுருவான, கரித்தான—திருவானைக்காவை யுடையவனே, மராத் தாமர்-வெண்கடம்பு மாலையணிந்த முருகக்கடவுளுக்கு, ஐயா—தந்தையாக உள்ளவனே, நவையேற்கு — குற்றமுடைய எனக்கு, நின்தாள் தொழச் சார்வினை தா—நின் திருவடிகளை வணங்குந் தொழிலை எனக்கு அளிப்பாயாக. (எ-று.)

(வி-ரை) மரை ஆல் நந்துகண் உதரம் களம் என்றது நிரனிறை. தாமரை யானனம்—திருமுககமலம் என்பதிறுைறிக. மரா—வெண்கடம்பு. "மராத்துருள் பூந்தண்டார்" என்றார் பிறரும். நவை—ஐம்பெருங் குற்றங்கள் போன்றவை. சார்வினைதா, "சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன்" (தேவாரம்) என்றமையின் கூறப்பட்டது. இக்கவி பூட்டுவிற் பொருள்கோள். "எழுவாயிறுதி நிலைமொழி தம்முட், பொருளோக் குடையது பூட்டுவில் லாகும்" என்பது விதி. உடலம் அம்விகுதி பெற்றது. அருள்தொடர்பு

பற்றுதே யாவர்மாட்டுஞ் செல்வது. அன்பின் வழியது. அருளெனல் "அருளென்னும் அன்பீன்குழவி" என்ற தொடரான் அறிக. சார்வினைதா—பற்றுக் கோட்டினைத் தந்தருள் எனலுமாம். (உரு)

வினைய னகர வொளிர்ஞான ஞாயிறே விண்மயிற்க
வினைய னகருங் குழல்பங்க வேட்கு விழித்தநுதல்
வினைய னகற்றோர் புகழதி கைப்புர வெய்யவரா
வினைய னககரிக் காவவென் றென்று விளிப்பதுவே.

(இ-ள்) வினை அல் நகர—அடியார்களின் வினையாகிய இருள்நீங்க, ஒளிர் ஞானஞாயிறே-விளங்காநின்ற ஞானகதிர்களையுடைய ஞாயிறே, விண்மயில் கவினை அன—மேகத்தையும் மயிலின் அழகினையுடைய தோகையினையுமொத்த, கருங்குழல் பங்க—கரிய கூந்தலையுடைய உமைகூறனே, வேட்குவிழித்த நுதல்வில் நயன—மன்மதனுக்காகத் திறக்கப்பட்ட ஒளி பொருந்திய நெற்றிக்கண்ணையுடையவனே, கற்றோர் புகழ்—சான்றோர் புகழும், அதிகை—திருவதி கையில், புரம் வெய்யவர் ஆவி னையனக—முப்புரங்களுடன் அக்கொடியவர் உயிரைஅழித்த இறைவனே, கரிக்காவ-திருவானைக்காவையுடையவனே, என்று-என்று, விளிப்பது-அழைத்துத்துதிப்பது எந்நாளோ? (எ-று)

(வி-ரை) வினையல் "இருள் சேரிருவினை" என்றமையின் கூறப்பட்டது. இருளுக்கேற்ப கெடுத்தலொப்புமை கருதி ஞாயிறு என்று கூறப்பட்டது. குழலுக்கு மேகமும் மயிலும் உவமை இதனை, "ஐதுவீழ்குபெய லழகு கொண்டருளி, நெய்கனிந்தருளிய கதுப்பு," என்றும், "கணங்கொள் டோகையிற் கதுப்பிகுத் தசைஇ" என்றும் வருவனகொண்டுணர்க. மேகத்தைக்கண்டாடும் மயிலின் தோகையையொத்த கரிய குழல் என்பது மொன்று. மயிற்குக் கவின்தருவது தோகையாதலின் அது கவின் எனப்பட்டது. தோகையெனப் பெயருண்மையும் காண்க.

கருங்குழல்—பண்புத்தொகை. என்று விளிப்பது என உலகோரை நோக்கி இரங்கிக் கூறியதெனவுணர்க. (உசு)

துவக்கரை யம்பரச் செம்பொருள் காவிரித் தோயவலை
துவக்கரை யத்த மெறிகரிக் காவெஞ் சுடரனல்வி
துவக்கரை யக்கரர் தாள்கள்பா வித்துத்
தொழினறுமில்
துவக்கரை யன்றல் வகைத்தோற்ற மேழ்பவந்
தொக்கனவே.

(இ-ள்) துவக்கு அரை அம்பரச் செம்பொருள்—புலித்தோலை ஆடையாக அரைக்கசைத்த செம்பொருளாயுள்ளவர், தோயம் அலைதுவம் கரை அத்தம் எறி காவிரிக் கரிக்கா—நீர் அலைகள் இரண்டு கரைகளிலும் பொன்னைவீசும் காவிரியாற்றினையுடைய திருவானைக் காவிலுள்ள, வெஞ்சுடர் விது அனல் அக்கர்—ஞாயிறு திங்கள் தீ எனும் முச்சுடரையும் கண்களாகவுடையவர், ஐயக்கரர்—ஐந்தெழுத்தையுடையவர், தாள்கள்—அவருடைய திருவடிகளை, பாவித்துத்தொழின்—கருதி வணங்கினல், இல் துவக்கு—குடும்பப் பந்தக் கட்டும், அரையல்—அதனல் வருந்துவையலும், நால் வகைத்தோற்றம்—நால்வகைத் தோற்றமும், ஏழ்பவம் தொக்கன—அதனல் வரும் எழுவகைப் பிறவியில் சென்றவை போகக் கூடி நிற்பவையும், அறும்—நீங்கும்.
(எ-று)

(வி-ரை) உயிருடம்பினீங்குங் காலத்து அதனல் யாதொன்று கருதப்பட்டது அஃது அதுவாய்த்தோன்றுமென்பது எல்லா வாகமங்கட்குந் துணிபாகலின் வீடெய்துவார்க்கு மற்றைய நினைவை விட்டுக் கேவலப் பொருளையே கருதுதல் வேண்டுதலான் தாள்கள் பாவித்துத் தொழின் என்று சொல்லப்பட்டது. "எதுபாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய் எந்தை" என்றார் பிறரும். நித்தமாய்த் தூய்தாய் நோன்மையாய் யாவையுங் கலந்து நிற்கின்ற முதற் பொருள் விகாரமின்றி

என்ஞான்று மொருதன்மைத்தாதல் பற்றி யதனைச் செம்பொருள் எனச் செப்பப்பட்டது. உபாயம் மூன்று. கேள்வி, விமரிசம், பாவனை என்பன. கேள்வி—ஆசிரியனிடத்துக் கேட்டல், விமரிசம்—கேட்ட பொருளைச் சிந்தித்தல். பாவனை—கேள்வியினாலும் சிந்தித்தலினாலும் தெளிந்த பொருளில் மனம் அசைவற இருத்தல். இவை மூன்றனுலும் முறையே அஞ்ஞானமும், ஐயமும், விபரீதமும் ஒழிதலால் வீட்டிற்கு நிமித்த காரணமாய் முதற்பொருளை யுணர்தற்குக் கேள்வி முதலியவை துணையாயினவென்க. அத்தம் அலை எறிதல், "மலைத்தலைய கடற்காவிரி, புனல்பரந்து பொன்கொழிக்கும்'' (பட்டினப்) என்பதனாலறிக. தோற்றம் பிறவியென்பன, "நாணிலநீர் பைமுட்டை நால்வகை யோனிசுரர், மானிடநீர் வாழ்பறவை மாகிருமி—ஞானமிலர், மண்பட்ட தாவரமென் றேழாய் வரும்பவநா, றெண்பத் திநான்காயிரம்.'' என்றவெண்பாவாலறிக. உபாய மூன்றனுள் இதனால் பாவனை கூறப்பட்டது. துவக்கு-புலித்தோல். அத்தம்-பொன். (உஎ)

கனந்த கரத்த முமிழ்பர சேந்துங் கரனலைக
கனந்த கரச்சங் கெறிகா விரிக்கரிக் காவிறைவன்
கனந்த கரந்திமிர்ந் தானிகர் கார்குழற் கன்னி
தன்பங்
கனந்த கரந்தகன் றுடொழிற் போநங் கருவகன்றே.

(இ-ள்) கனம் தக—பெருமை பொருந்த, ரத்தம் உமிழ் பரசு ஏந்துங் கரன்—பகைவர் குருதி மாந்தி உமிழும் மழுப் படையை ஏந்திய கையையுடையவன், அலைக கனம் தகர சங்கு எறிகாவிரி—அலைகள் விண்ணுலகம் சிதையச் சங்குகளை வீசும் காவிரி சூழ்ந்த, கரிக்கா இறைவன்-திருவானைக்காவுக்குத் தலைவன், கனம் தகரம் திமிர்ந்தால் நிகர்—மேகமானது மயிர்ச்சாந்தணிந்தாலொத்த, கார்குழல் கன்னிதன் பங்கன்—கரிய கூந்தலையுடைய உமை கூறன், அந்தகர் அந்தகன்—காலகாலன்,

தாள்தொழின்—திருவடிகளை வணங்கினால், நம் கருவகன்று போம்—நம்முடைய பிறவி நீங்கிவிடும். (எ-று)

(வி-ரை) ககனம்—விண், ஆகுபெயர் இடத்து நிகழ் பொருளைச்சுட்டியது. மேகமுதலியவற்றைக் குறித்தலின் கனம் தகரம் திமிர்ந்தாலென்பது இல்பொருளுவமை. "அவனியிலில்லா வன்னதோர் பொருளை, உவமை செய்துரைக்கு மபூதவுவமையும்" என்பது விதி. தகரம்—மயிர்ச்சாந்து. "தகரக்குழலார் தன்னொடு" (மணிமேகலை) என வருவதுகொண்டுணர்க. கரிக்கா இறைவன், கன்னி தன்பங்கன் அந்தகரந்தகன் ஆகிய இறைவனது தாள்கள் எனக்கூட்டுக. பிறவியைப்போக்குமியல்பு தாளுக்கே யுண்மை "நற்றாள்தொழா அரெனின்" என்ற தொடரானறிக. சங்கெறி காவிரி என்பது யாற்றின் வளங்கூறிய வாறு. மறைகளாற் பரசும் பெற்றித்தாகலின் பரசு எனப்பட்டது. "பழமறை பரசும் தூய பரசு" என்றமை காண்க. (உ-அ)

கன்றுக் கணங்கழை மெல்லும் பணைக்கரிக் காவகம்ம
கன்றுக் கணங்கரிக் கெட்டொணு வெம்பர
கன்னியனங்
கன்றுக் கணங்களி பூவம் பவத்தையிற் காயமனங்
கன்றுக் கணங்கடை நாளாய் நினைப்பள் களியிகந்தே.

(இ-ள்) கன்று ஆ கணம்—கன்றையுடைய பசுக்கூட்டங்கள், கழை மெல்லும் பணை—கரும்பை யருந்தும் மருத நிலம் சூழ்ந்த, கரிக்காவ — திருவானைக்காவை யுடையவனே, கம்—பிரமனுக்கும், மகன்—இந்திரனுக்கும், தாக்கணங்கு அரிக்கு-திருமகளுறையும் திருமாலுக்கும், எட்டொணு—காண்பரிய, எம்பர—எமது கடவுளே, கன்னி—எம்முடைய தலைவி, அனங்கன்—காமன், தாக்கு அணங்கு அளிபூ அம்பு அவத்தையின்—எறிந்து இன்னல் விளைக்கும் மலர்ப்பாணக் கொடுமையினால், காயம்மனம் கன்று-உடலும் உளமும் வாடி, களி இகந்து—மகிழ்ச்சி நீங்கப்பெற்று, கணம் கடை நாளாய்

நினைப்பள்—கணப்பொழுதை ஊழிக்காலமாகக் கருதித் துன்புறுவள். (எ-று)

(வி-ரை) கன்று—"ஆவோடைந்துங் கன்றெனற் குரிய" என்பது தொல்காப்பியம். தாக்கணங்கு—"தாக் கணங்குறையுந் தடந்தாமரை" என்ற சிந்தாமணியும் இப் பொருளது. தாமரையிதழைப் பலவாக வடுக்கி ஊசியைத் தடிக்குங்கால் அவ்விதழ்களில் எட்டிதழ் அறுபடுங்கால வளவு கணமெனப்படும் "ஊழியிற் பெரிதாம் நாழிகை" என்றார் பெரியாரும். பிரிந்தோர்கருதும் நிலை ஊழி எனப்பட்டது. மகம்—யாகம். யாகத்திற்குத் தலைவன் இந்திரன் ஆதலின் மகன் எனப்பட்டான். பூவம் பவத்தையாவது ஈண்டு சுப்பிரயோகத்தை அதன் குணம் "பெருகுசுப்பிர யோகந்தான் பேச்சொடு நினைவு மாகும்" என்பதனாலறிக. தலைவனைப் பிரிந்த தலைவி யின் ஆற்றாமை கண்டு தோழி ஆற்றாது வருந்தல் என்னுந்துறை. (உசு)

கந்தனை யானற் குழல்பங்க வன்புருக் கத்தபொனன்
கந்தனை யான நரவரி தாழ்கரிக் காவகுடைக்
கந்தனை யான்னத் தந்தியைத் தந்தோய் கதிவருஞ்சு
கந்தனை யானந்த மாயெற் களிப்பதெக் காலத்திலே.

(இ-ள்) கந்தம் நையா நற் குழல் பங்க—இயற்கை மணமரு நல்ல கூந்தலையுடைய உமைகூறனே, அன்பு உரு கத்த—அன்பே உருவாய பழம் பொருளே, பொனன் கந்து அனையான நரவரி—இரணியன் தூணே தாயான நரசிம்மமூர்த்தி, தாழ் கரிக்காவ—வணங் கும் திருவானைக்காவையுடையவனே, குடைக் கந்தனை ஆனனத் தந்தியைத் தந்தோய்—குடைக்கூத்தையுடைய குமரக்கடவுளையும் யானைமுகக் கடவுளையும் அளித்த வனே, எற்குக் கதிவருஞ் சுகந்தனை ஆனந்தமாய் அளிப் பது எக்காலத்து — எனக்கு வீட்டுலகில் உண்டாம் நலத்தை மகிழ்ச்சியுடன் கொடுப்பது எந்தக்காலத்தில் என்பதைச் சொல்லுவாயாக. (எ-று.)

(வி-ரை) கந்தம் நையாக் குழலென்றது "செறியயிற் றரிவை கூந்தலின் நறியவு முளவோ நீயறியும் பூவே" என்ற குறுந்தொகை யடியால் பெறப்படும். குழல் ஐம்பால் வகையிலொன்று. அவையாவன குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன. காம நுகர்வில் இறைவன் பெண்ணுக்குப் பங்களித்தானெனல் உலகோர் இல்வாழ்க்கை நடாத்தற்கென்றுணர்க. இஃது "பெண்பாலுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடுவர்காண்" என்ற திருவாசகத்தான் பெறப்படும். அன்பு — தொடர்பு பற்றிச் செல்வது, அருள் — தொடர்பிலார் மாட்டுஞ் செல்வது. அன்பு முதற்கண் தோன்றும் பண்பென்பது, அன்பென்பது அருட்கு முதலாகி நிகழும் நேயம் என்றும், அருளென்னு மன்பீன் குழவி என்றும் வருவனவற்றானுணரப்படும். அன்பானினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்தவடிவோடு விரைந்து செல்லுமுண்மை கருதி அன்புருக் கத்த எனப்பட்டது. பொனன் அனையான கந்து நரவரி என மாற்றி, இரணியன் வரங்கள் பெற்ற அத்தன்மைக் கேற்ற முறையான் தூணிற்றோன்றிய நரசிம்மமூர்த்தி என உரைப்பினுமமையும். அரி தூணிற்றோன்றியது "இடிமுரசியம்ப, வெடிபடா வொடிதூட் டடியொடு" என்ற பரிபாடலானுணர்க. "அறுமுகத்தோனுடல் குடை மற்றதற்குப், பெறுமுறுப்பு நான்காமெனல்" என்பதனால் குடைக் கூத்துண்மை யுணர்க. கந்தன் — ஆறுருவுமோருருவா யமைந்தவன். அனை — இடைக்குறை. (௩௰)

கால னமனஞ் சுழல்மன் பதையீர் கரியனவன்
கால னமனடை தாழ்கரிக் காவிற் கலைமதிதேய்
கால னமனலங் கண்ணொளி யாம்பரற் காண்மினந்த
கால னமனஞ்சச் செய்துமை வைப்பன் கதிப்பதத்தே.

(இ-ள்) கால் அன மனம் சுழல் — காற்றைப்போலச் சுழலும் உளமுடைய, மன்பதையீர் — உலகிலுள்ள மக்

களே, கரியன்—திருமாலும், அவன்கால்—அவன்வழித் தோன்றிய அயனும், அனம் மன் நடை — அன்னம் போன்ற நடையையுடைய அகிலாண்டநாயகியும், தாழ் கரிக்காவில்—வணங்கும் திருவானைக்காவின்கண், கலை மதி தேய் காலன் — கலைகளையுடைய சந்திரனைத் தேய்த்த திருவடிகளையுடையவனும், அம் அனலம் கண் ஒளியாம் பரன் — நீரும் நெருப்பும் கண்ணும் ஒளியு மாகிய இறைவனை, காண்மின்—கண்டு வணங்குங்கள், அந்த காலம் — இறக்குங் காலத்து, நமன் அஞ்சச் செய்து—இயமனை பயமுறச் செய்து, கதிப்பதத்து— வீட்டுலகின்கண், உமைவைப்பன்—உங்களை நிலைபெறச் செய்வான். (எ-று.)

(வி-ரை) கால் அன மனஞ் சுழல்—“ உலவுமனம் வைத்துறுதி கேண்மின் ” என்றார் சிந்தாமணியினும். மன்பதை — “ மன்பதை சவட்டுங் கூற்றம் போல ” என்பது பதிற்றுப்பத்து. மால் கரியன் என்பது “ நீனிறவுருவினெடியோன் ” என்ற பெரும்பாணாற்று றுணர்க. அம் அனலம் கண்ணொளியாம் பரன்—ஐம் பெரும் பூதங்களும், கண்முதலிய பொறிகளும், ஒளி முதலிய புலன்களும் ஆகிய பரன். நாலபூதமாகியது “ காற்றிற் பெருவலியிருவராகி, மண்ணகத்தைவர் நீரி னால்வர் தியதனின் மூவர் விண்ணகத்தொருவர் வீழி மிழலையுள் விகிர்தனாரே ” என்ற தேவாரத்தானறிக. கண்ணொளியாகியமை—“ சுவைமை யிசைமை தோற்றம் நாற்ற மூ, றவையும் நீயே, அவை யவை கொள்ளுங் கருவியும் நீயே ” என்பது பரிபாடல். (௩௧)

பதங்க னலவனங் காலகமண் தீவேட் பவபுரம்வெம்
பதங்க னலக்கிரி வாங்கும் கரிக்காப் பரஞ்சுடர்செம்
பதங்க னலஞ்சொலள் பூசித்த முன்னைப்
[பழம்பொருணம்
பதங்க னலந்தி வணவருண் முத்திப் பதியெமக்கே.

(இ-ள்) பதங்கன்—ஞாயிறும், அலவன்-திங்களும், அம்—நீரும், கால்—காற்றும், கம்—வானும், மண்—நில மும், தீ—நெருப்பும், வேட்பவ-இயமானனுமாகியவனே, புரம் வெம்ப—திரிபுரம் வேவ, தங்க நலக்கிரி வாங்கும் கரிக்காப்பரஞ்சுடர்—பொன்னாகிய சிறந்த மேருவை வளைக்கும் திருவானைக்காவினுள்ள பரஞ்சுடரே, செம்பதம் கனல் அம்சொலள்—சிவந்த அடிகளையும் கரும்பு போன்ற இனிய சொல்லையுமுடைய அகிலாண்டநாயகி, பூசித்த—பூசனைசெய்த, முன்னைப் பழம் பொருள்நம்ப—அநாதியாய் வரும் பழம்பொருளாகிய இறைவனே, அனல் அந்தி தங்கு வண—செந்தீயையும் செவ்வானத்தையு மொத்த நிறத்தையுடையவனே, முத்திப்பதி எமக்கு அருள்—முத்தி வீட்டை எமக்கு அருள்வாயாக. (எ-று)

(வி-ரை) இறைவற் கட்டமூர்த்தங்களுளவென்பது "அட்டமூர்த்தியண்ணாமலை கைதொழு," "அட்ட மூர்த்திதன் வெண்காடடை நெஞ்சே," "அட்டமூர்த்தி யதாகிய வப்பரோ" என்ற தேவாரங்களானுணரப்படும். அட்டமூர்த்தங்கள் மண்புனல் அனல்வளி மாவிசும் பெறாஅ, வெண்மதி செஞ்சுடர் வேட்போனொடாஅ, எண்வகைநிலைஇய எவ்வகைப்பொருளும், "எண்கூறவ னொரு பேருரு" (தக்கயாகப்பரணி) என்றதனா லுணரப்படும். பரஞ்சுடர்—தூய்மையதா மைதீர் சுடர், எல்லாப்பொருளுக்கு மப்பாலாகிய வொளி. முன்னைப் பழம்பொருள்—எப்பொருட்கு முதற்பொருளாய்த் தனக் கொரு முதற்பொருளின்றியிருக்குஞ் செம்பொருள். "முன்னைப் பழம்பொருளே" என்றார் பெரியாரும். கனல்—கன்னல் என்ற சொல்லின் விகாரம். பூசனை—நித்திய பூசை. சிறப்பொடு பூசனை என்ற குறட்பாவில் நித்தியத்தொடு கூடியநைமித்திகம் என்றார் என்ற உரை காண்க. வண—வண்ணம் என்பதன் விகாரம். நம்ப அனல் அந்தி தங்குவண என மொழி மாற்றுக. (கூஉ)

பதிகம் பரிக்குங் குழற்சசி காந்தன் வெண்பங்கயத்தள்
பதிகம் பரிவர மெய்தத் தவஞ்செய் பழங்கரிக்காப்
பதிகம் பரிந்து தொழுதெழ வெற்குப் பணிமலைச்சா
பதிகம் பரியத்த கத்த முடிவாம் பதந்தனக்கே.

(இ-ள்) முடிவாம் பதம் தனக்குக் கத்த—முடிவாக உள்ள வீட்டிற்கு நிமித்த காரணனே, மலைச்சாப—மேருமலையை வில்லாக வுடையவனே, திகம் பரி அத்த-உமையாள்கூறனே, பதிகம் பரிக்கும் குழற்சசி காந்தன்-மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய இந்திராணியின் காதலனாய இந்திரனும், வெண் பங்கயத்தள் பதி—வெண்டாமரையிலுள்ள கலைமகளுக்குத் தலைவனாகிய பிரமனும், கம்பு அரி—சங்கையுடைய திருமாலும், வரம் மெய்தத் தவஞ்செய்—வரத்தையடையத் தவஞ்செய்யும், பழங்கரிக்காப்பதி—பழைய திருவானைக்காப் பதியை, கம்பரிந்து தொழுதெழ—அன்புற்று வணங்கித்தொழாநின்று துயிலெழ, எற்குப் பணி—எனக்குக் கட்டளையிடுவாய். (எ-று)

(வி-ரை) தொழுதெழுதல்—நின்பதியைத் தொழாநின்று துயிலெழ எனக்குப் பணிப்பையென்பது, துயிலெழுங் காலத்தல்லது முன்னுணர்வின்மையின் உணர்வுள்ள காலத்து மறவாது நின்பதியை நினைக்கவென்பதாம். "சொற்றுணை மாலைகொண்டு தொழுதெழுவார்," "தொழுதெழுவார் வினைவள நீறெழ," "கொழுநற்றொழுதெழுவார்" என்பனவும் அப்பொருண்மேலெழுந்தன. "பத்தியாலேத்திநின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார்" என்ற தேவாரத்தானுணர்க, "பதியிறை கேள்வனாராம்" என்பது நிகண்டு. (௩௩)

தனக்கஞ்ச னங்கையெம் மன்னை பூசித்தவெந் [தந்தைசிங்கா
தனக்கஞ்ச னட்டோ னுணர்வு வலிமனஞ் [சார்விலன்கீழ்

தனக்கஞ் சனகனினைவித்தெனெஞ்சகஞ் சார்ந்தவன்ச
தனக்கஞ் சனற்கந் துதிதிரு வானைக்காச் சங்கரனே.

(இ-ள்) கஞ்சம் தனம்—தாளம் போன்ற தனத்தை யுடைய, நங்கை — அகிலாண்ட நாயகியாராகிய, எம் அன்னை—எம் தாயார், பூசித்த—வணங்கிய, எம் தந்தை—எமக்குத் தமப்பனுயுள்ளவன், சிங்காதனக்கஞ்சன் அட்டோன்—சிம்மாதனத்திருந்த கஞ்சனைக்கொன்ற திருமாலாலும், உணர்வு—அறிவாலும், வலி—அகங்காரத்தாலும், மனம்—மனத்தாலும், சார்விலன்—சார்ந்து அறியவொண்ணுதவன், கீழ்தனக்கு அஞ்சு அனகன்—கீழ்களுக்கு அஞ்சுகின்ற பாமன், சதனக் கஞ்சம்-தாமரையகத்தையுடைய, கம்துதி — பிரமன் துதித்து வரம் பெறும், திருவானைக்காச் சங்கரன்—திருவானைக்காவிலுள்ள சம்பு நாயகன், நினைவித்து என் நெஞ்சகம் சார்ந்தவன்-திருத்தும் பெற்றியுண்மையின் என்னெஞ்சத்துத் தானே புகுந்து தன்னை யான் நினையும்வண்ணம் செய்தவனுவான். (எ-று)

(வி-ரை) கஞ்சம்—தாளம், எம்மன்னை எம் தந்தையென்றது "ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" (தேவாரம்) என்பதனையுட்கொண்டென்க. உணர்வு முதலியவை யறிய வொண்ணுமை "வலியினு மனத்தினு முணர்வினுமெல்லாம், வனப்பு வரம்பறியா மரபினேயே" (பரிபாடல்) என்ற விடத்துங்காண்க. வலியுடைய அகங்காரத்தை வலியென்று கூறினர். கீழ்—அறிவாற் கீழ்மைப்பட்டோர். நினைவித்தென்னெஞ்சகஞ் சார்ந்தவனென்பதற்கு ஒருகாற் றன்னை நினைவேனுகவுஞ் செய்து அந்நினைவே பற்றுக் கோடாகத்தான் என்னெஞ்சகத்துச் சார்ந்தவனெனினமையும். சதனம் வீடு, "சதனமேவருந்தபோதனன்" என்றார் பிறரும். (௩௪)

கரவிலங் காமக் கலமா மெனையெங்ஙன் காப்பை
[சொல்சா
கரவிலங் காதிபற் காய்ந்தோய் துரியங் கடந்தவகால்

கரவிலங் காகப் பயந்தவ தாழுங் கடவுளர்ந
கரவிலங் காத்திரு வானைக்கா வெண்புயக் கண்ணுத
[லே.

(இ-ள்) சாகர இலங்காதிபன் காய்ந்தோய்—கடல் சூழ்ந்த இலங்கையரசனை இராவணனை கையிலையின் கீழகப்படச் சினந்தவனே, துரியங்கடந்தவ — துரியம் துரியாதீதத்தைக் கடந்தவனே, காலாக—பிள்ளையாக, கரவிலங்கு பயந்தவ — யானைமுகனைப் பெற்றவனே, தாழுங்கடவுளர்—வணங்குந்தேவர்கள், நகர விலங்கா—அடிபெயர்த்து வைக்க இடம்பெறாது நெருங்கும், திருவானைக்கா—திருவானைக்காவினுள்ள, எண்புயக் கண்ணுதலே — எட்டுப்புயத்தையும் நெற்றிக் கண்ணையுமுடையவனே, கரவு இலம் — வஞ்சனைக்கே வீடும், காமக்கலம்—காமச்சாரக்கேற்றுங் கப்பலுமாகிய, எனை—என்னை, எங்ஙன் காப்பை-எவ்வாறு காப்பாற்றுவை, சொல்—எனக்குச் சொல்லுவாயாக. (எ-று)

(வி-ரை) இராவணனைச் சினந்தமையை "இலங்கையர்கோன் மலைக்கீழ்விழச் செற்ற" என்றார் கோவையாரினும். துரியங்கடந்தவ வென்பது, "துரியமுமிறந்த தூயோன் றூய்மையருளினன்," "துரியங்கடந்த பரநாத" என்பனவற்றானறிக. எண்புயம், "எண்டோள் வீசி நின்றாடும்பிரான்" என்பதனாலறிக. கரவுஇலம், காமக்கலம், என்பன இடும்பைக்கோ கொள்கலம், குற்றக்கொள்கலம், ஆங்காரப் பொக்கிசம் என்றாற்போலவாம். எங்ஙன் என்னும் வினா எதிர்மறைக் கணின்றது. நகரவிலங்கா வென்பது, "தெருவினுங், கால் உறநிற்றா, தாளொடு தாண்முட்ட, நீளொளி மணிவீதி நிரந்தரித் தனசனமே" என்றார் பிறரும். காமக்கலம்—காமத்திற்கு இருப்பிடம், காமமே அணியெனினுமாம். துரியம்—பேருறக்கம், துரியாதீதம்—உயிர்ப்படக்கம். இலம்—தொகுத்தல் விகாரம். (கரு)

கண்டன வந்தரி கூற னெமுள்ளங் கவர்கள்வன்முட்
கண்ட னவந்தரும் பூக்கம ழானைக்காக் கந்தழிகார்க்
கண்ட னவந்தருக் கற்றவன் றாளலாற் கண்கரத்திற்
கண்டன வந்தன யாவுந் தொலையுங் கனவெனவே.

(இ-ள்) கண் தனம் அந்தரி கூறன்—இடம் பரந்த தனங்களையுடைய உமாதேவியார் பங்கன், எம் உள்ளங் கவர் கள்வன்—எம் மனதைக் கவர்ந்த கள்வன், முள் கண்டல் நவந்தரும் பூ—முள்ளையுடைய தாமரைகளின் புதிதாகிய மலர்கள், கமழ்—வாசனை வீசும், ஆனைக் காக்கந்தழி—திருவானைக்காவிலுள்ள கடவுள், கார்க் கண்டன்—திருநீலகண்டன், அவம் தருக்கு அற்றவன்—வீண்தொழிலும் செருக்குமில்லாதவன், தாள் அலால்—அவனுடைய திருவடிகளையல்லாமல், கண்கரத்தில் கண்டன வந்தன யாவும்—கண்களினும் கைகளினும் கண்டனவும் கிடைத்தனவும் ஆகிய எல்லாப்பொருளும், கனவென தொலையும்—பொய்த் தோற்றம் போலத் தோன்றிக் கெடும். (எ-று)

(வி-ரை) கண் ருசுகமுமாம். திரோபவமுடைமையால் இறைவனைக் கள்வனென்று சொல்லப்பட்டது. இப்பெற்றியால் சம்பந்தரும் "என்னுள்ளங்கவர் கள்வன்" என்றார். திரோபவம் — மறைவு. "நில்லாதவற்றை நிலையினவென்றுணரும் புல்லறிவாண்மை கடை." கந்தழி — ஒருபற்றுக் கோடுமின்றி அருவாகித்தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருள். அவம்—"அவத்திற மொழிகென் றவன்வயினுரைத்தபின்", பெற்ற தோற்றப் பெற்றிக ணிலையா" என்றார் தண்டமிழ்ச்சாத்தனாரும். தோன்றின மறையும் மறைந்தன தோன்றும் என்றார் பிறரும். கனுக்காணும் நிலையினைக் கருத்திறுத்த இயலாது, கெடுமாறுபோன்று அந்நிலையேகெடுமென்க. (௩௬)

கனகமலைத்தவென் னெஞ்சமும் வாயுநீங் காவிடைவா
கனகமலைதங் கருணைதில் லைகச்சி காளத்திகோ

கனக மலைக்குமஞ் செய்கரிக் காப்பர காண்டிபனு
கனக மலைச்செய்நம் பாவெனி லச்சொற் கதிதருமே.

(இ-ள்) நகம் கல் மலைத்த—மலையின் பாறைகளையுங் கடிந்த, என்னெஞ்சமும்—வலிய என்னுள்ளத்தின்கண்ணும், வாயும்—வாயினிடத்தும், நீங்கா—இமைப்பொழுதும் நீங்கப்பெறாத, விடைவாகன-காளையூர்தியையுடையவனே, கமலை தங்கு—திருமகள் வாழும், அருணை—அண்ணாமலையினும், தில்லை—சிதம்பரத்திலும், கச்சி—காஞ்சிபுரத்திலும், காளத்தி—காளத்தியிலும், கோகனகம் அலைக்கும் அம்செய் கரிக்கா பர—தாமரையை அலைக்கும் நீருடைய வயல் சூழ்ந்த திருவானைக்காவினும் ஐம்பெரும் பூதவடிவாயுள்ள மேலோனே, காண்டிபன் ஆகம் நக—அருச்சுனன் உடல் மலர்ச்சியையடைய, மலை செய் நம்பா—மற்போரைச் செய்த இறைவனே, எனின்-என்று சொன்னால், அச்சொல் — அங்ஙனம் கூறிய உரையே, கதி தரும்—நமக்கு வீட்டையளிக்கும். (எ-று)

(வி-ரை) நகம் கல் மலைத்த என மாறுக. உம்மை எண்ணும்மை. அருணை முதலியவை—"வாயுதிருக் காளத்தி மண்கச்சி விண்புலியூர், தேயு திருவருணை செந்தமிழார்—தோயத், திருவானைக் காவைந்தும் சிந்திக்கின் முத்தி, தரும் பஞ்சபூதத் தலம்," என்ற வெண்பாவா லறிக. "இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க" என்றார் பிறரும். வாக்கினால் வருநிலை கூறிற்று. (௩௭)

திருமனஞ் சற்கருள் வோன்றென் னனுந்தமிழ் [தங்குசங்கத்
தருமனஞ் சஞ்சல நீங்க வகப்பொரு டந்தவன்பூத்
தருமனஞ் சங்கமப் பங்கவன் தோற்காத் [தலத்துமுன்னோன்
தருமனஞ் சம்பதம் பத்தர்க்கு முத்திச் சகந்தருமே.

(இ-ள்) தருமன் அஞ்சற்கு அருள்வோன்—இந்திரனுக்கும் பிரமனுக்கும் அருள் செய்பவன், தென்னனும்-உக்கிரப் பெருவழுதியும், தமிழ் தங்கு சங்கத்தரும்—தமிழ் நிலைபெற்ற கடைச்சங்கப் புலவர்களும், மனம் சஞ்சலம் நீங்க—அவர்களுடைய உளம் துன்பந்தவிர்ந்து கரையேற, அகப் பொருள் தந்தவன்—களவியலை அருளியவன், பூதரும் அனம்-உலகையீன்ற அன்னம்போன்ற நடையையுடைய உமையம்மை, சங்கமப் பங்கவன்-கலந்த ஒரு கூறுடலையுடையவன், தோற்காத்தலத்து முன்னோன்—திருவானைக்காவிலுள்ள பழைமையானவன், தருமன் அஞ்சு அம் பதம்—கூற்றுவன் பயமுறும் அவன் திருவடிகள், பத்தர்க்குமுத்திச் சகந்தரும்—வணங்குமடியார்களுக்கு வீட்டுலகை யளிக்கும். (எ-று)

(வி-ரை) தரு—கற்பகதரு. தருமன் பிரமற்கருளியது தலபுராணத்துட் காண்க. "திசைநிலைக்கிளவியினுமாகுநவும்" என்பது தொல்காப்பிய விதியாதலின் பாண்டியனைத் தென்னன் என்றார். களவியலருளியது "உலகியல் நிறுத்தும் பொருண் மரபொடுங்க, மாறனும் புலவரும் மயங்குறுகாலை, முந்துறும் பெறுமறை முளைத்தருள் வாக்கால், அன்பினைந்திணை யென்றறுபது சூத்திரம், கடலமுதெடுத்துக் கரையில்வைத் ததுபோற், பரப்பின்றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத், தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்." (கல்லாடம்) என்பதனாலுணர்க. மனச் சஞ்சலம் எனற்பாலது மனஞ் சஞ்சலம் என மெலிந்து நின்றது. சங்கமம்-கலத்தல். வீடளிப்பது அடிகளாதலின் பதம் தரும் என்றார். "நற்றாள் தொழாஅரெனின்" என்பதுங்காண்க. (௩அ)

கந்தர மானன்மல் மாறுதி யெங்கரிக் காவகவா
கந்தர மானத்த வண்ட மணுவுமாங் கத்தவிடக்
கந்தர மானநீர் கொன்று யெனலிமின் காயங்கன
கந்தர மானந் தனனல ரெய்வதாற் கைதவமே.

(இ-ள்) சுந்தரமானன்—இந்திரனும், மல்மால்—மல்லினாடலையுடைய திருமாலும், துதி—புகழாநின்ற, எம் கரிக்காவக—எமது திருவானைக்காவையுடையவனே, ஆகம் தரம் மான் அத்த-மலைமகள் விளங்கும் உடற்கூற்றையுடையவனே, அண்டம் அணுவுமாம்கத்த—அண்டமும் அணுவுமான இறைவனே, விடக்கந்தா-கறைமிடற்றண்ணலே, மான நீர் கொன்றாயெனல்—பொருந்த நீர் காமனை அழித்தாயென்று சொல்லல், இமின்—இந்த மின்போன்ற இடையையுடைய பெண்ணின், காயம் கனகம் தா—மெய் பசலைபூப்ப, மால்நந்தனன்—வேள், அலர் எய்வதால்—மலர் அம்புகளைச் சொரிவதால், கைதவம்—பொய்யேயாக வேண்டும். (எ-று)

(வி-ரை) தரம்-மலை, "நின் மேனி பொன்னிற்பசந்து புலம்புவதெவன்," வேள், "பொன்றினானெனல் பொய்யென வேண்டுமால்" என்ற பிரமாணங்களாலறிக. அவுணற்கடந்தமல்லினாடலும்(சிலப்பதிகாரம்). மல்-திருமால் கூத்தினுளொன்று, அஃதாவது வாணாசுரனை வேறற்குத் திருமால் மல்லனாய்ச்சென்று பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்து நின்றாடியது. அண்டம் அணுவாகியமை சித்தினதுருவா யகண்டமுந் தானும்" என்றார் பிறரும். செவிலி வருந்தல். (௩௬)

தவன னலவ னுருத்திர ரெண்மர் தசவெண்மர்பா
தவன னலம்புவிண் மண்மா விருவர்கந் தார்முடிவந்
தவன னலனவை யாமவ னெற்குத் தருங்கதிப்பு
தவன னலக்கத வாரெயிற் ரோற்காத் தலத்தவனே.

(இ-ள்) எற்குத் தருங்கதி புதவு அன—எனக்கு முடிவிலளிக்கும் வீட்டின் கதவையொத்த, நலக் கதவு ஆர் எயில் சோல்காத்தலத்தவன்—நன்மையான கதவமார்ந்த மதில் சூழ்ந்த திருவானைக் காப்பதியையுடைய இறைவன்; தவனன்—ஞாயிறும், அலவன்—திங்களும், உருத்திரர்—உருத்திரர்களும், எண்மர்—வசுக்களும்,

தச வெண்மர்-பதினெண் கணங்களும், பாதவன்—இந்திரனும், அனல் அம்பு விண் மண் மால்—தீ முதலிய ஐம் பெரும் பூதங்களும், இருவர்—மருத்துவரும், கம்—பிரமனும், தார் முடிவந்த வனன்—முடியிற்றுளபமாலையைச் சூடிய திருமாலும் ஆகிய இவர்களில், அலன்—அல்லாதவனும், அவையாமவன் அப்பொருள்களாயவனும் சிவனாவான். (எ-று)

(வி-ரை) சூரியர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் ஆகமுப்பத்து மூவர் ஆவர். "விரவிய வமரர் சித்தர் விஞ்சையர் பசாசர் பூதர், கருடர் கின்னரரியக்கர் காந்தர்வரசுரர்தைத்தியர், உரக ராகரச வாச ரந்தார் குருவோர் யோகர், கிருதர் கிம்புருடர் விண்ணிகிறைகண மூவருமே." இவர்கள் தச வெண்மர். நின்கணின்று பிரிந்துநின்றால் நிலைபேறடைந்த பருதி முதற்றிருமாலீறுகச் சொல்லப்பட்ட பொருள்கள், தோற்றத்தின்கண் நின்னின் வேறுபடுவதால் 'அலன்' என்றும், மேற்சொன்ன பொருள்கள், ஒடுக்கத்தின்கண் நின்னொடு மேவலமைந்தமையால், 'அவையாமவன்' என்றுங் கூறப்பட்டது. "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்றசுடர்," அகல்வான் மற்றைய பூதங்களைப் பற்றியிருந்தே பற்றற்றிருத்தல் போன்று, இறைவன் எல்லாப் பொருளையும் பற்றியிருந்தே பற்றற்றிருக்கின்றான். யாவையுமாம் ஏகத்தொருவனென்பதூஉம் அப்பொருளது. "பலவயினானு மெண்ணுத்திணை விரவுப் பெயர், அஃறிணை முடிபின செய்யுளுள்ளே," என்பது தொல்காப்பிய விதியாதலின், இச்செய்யுளில் திணை விராய் எண்ணப்பட்ட பெயர்கள் அவையாமவன் என அஃறிணைச் சொற்கொண்டு முடிந்தது. பாதவம்-கற்பக தரு, தசம்—பத்து. "தச நான்கெய்திய" என்றும், வனம்-துளபம், திருமாற்கு "வனமாலை சூடி" என்றும் வருபவைகளாலறிக. அவை என்பது தன் முன்னுள்ளவற்றையும் சிறிது சேயவற்றையும் அவற்றினும் சேயவற்றையுங் குறிக்கும். (சஙு)

வனவா ரணவுடல் பொன்றப் புகழுடல்
[வாய்க்கும்வண்ணம்
வனவா ரணவுரி யங்கரிக் காநிர் மலதிருபு
வனவா ரணங்கு மணமக னிந்திரன் வாணிதலை
வனவா ரணந்துதி நின்கழல் வைப்பையெம்
[மாலகத்தே.

(இ-ள்) வனவா—நீர் வடிவானவனே, வனவாரண வுரி—அழகிய யானைத்தோலைப் போர்த்த, அம்கரிக்கா நிர்மல—அப்புத்தலமாகிய திருவானைக்காவிலுள்ள மலமற்றவனே, திரு—இலக்குமிக்கும், புவன ஆரணங்கு—பூமிதேவிக்கும், மணமகன்—தலைவனாகிய திருமாலும், வாணி தலைவன் — கலைமகள் தலைவனாகிய பிரமனும், இந்திரன் — தேவேந்திரனும், அ ஆரணம் — அழகிய மறைகளும், துதி—புகழாநின்ற, நின் கழல்—உன் றிருவடிகளை, அரணவுடல் பொன்ற—குற்றங்களுக்கு அரணாகவுள்ள பூத உடல் அழிய, புகழுடல் வாய்க்கும் வண்ணம்—புகழுடம்பு பொருந்தும் வகையாக, என்மால் அகத்துவைப்பை — என்மயக்கங் கொண்ட மனத்தின் கண் வைப்பாயாக. (எ-று)

(வி-ரை) அரணவுடல்-கம்பாலாக்கையிட்டுத் தசை கொண்டு வேய்ந்த அகமாகிய பூதவுடல், "ஒருவன திரண்டு யாக்கை யூன்பயினரம்பின் யாத்த, உருவமும் புகழுமென்றாங் கவற்றினும் காத்து வந்து, மருவிய வுருவமீங்கே மறைந்துபோம் மற்றயாக்கை, திருவமர்ந் துலகமேத்தச் சிறந்துபி னிற்குமன்றே" "புகழுருவ நிறுத்த வைத்துப் பொறியுருவஞ் சரணடைந்த புறவுக் கீந்து" "மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே" "நத்தம் போற்கேடு முளதாகுஞ் சாக்காடும்" "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது நிற்பதொன்றில்" "தனக்கொரு சாதலின் றிப், பூதல மிறக்குங்காறும் புகழுடம்பிருக்கும்" என்று வரும் பிரமாணங்களானறிக. (சங)

கத்திகை யங்கத்த கண்மணிப் பாவையெங்
[கத்தவன்பா
கத்திகை யங்கக னம்பார் தொழுங்கரிக் காவமடிக்
கத்திகை யங்கசன் றேமல ரம்பைக் கழைவிலுகைக்
கத்திகை யங்கனை மாமைக் கவின்கெட [illegible]
[காப்பைவந்தே.

(இ-ள்) கத்திகையங்கத்த—அரி அயன் இவர்களுடைய என்பு மலையையுடையாய், கண்—எனது கண்ணே, மணி—என் கண்ணின் மணியே, பாவை—மணியினுள்ள பாவையே, எம்கத்த—எமதிறைவனே, அன்பாகத் திகை அம் ககனம் பார்தொழுங் கரிக்காவா—அன்புடன் திசையினுள்ளோர் அழகிய வானினுள்ளோர், பூமியினுள்ளோர்களுடன் வணங்குந் திருவானைக்காவையுடையவனே, மடிக்கத்திகை — தாழையாகிய உடைவாளைக் கையிலுடைய, அங்கசன்—மன்மதனானவன், தேமலர் அம்பைக் கழைவிலுகைக்கத்—தேனையுடைய மலர் அம்புகளைக் கரும்பு வில்லில் வைத்து எய்ய, திகை-அதனால் மயக்குற்ற, அங்கனை—எந் தலைவியின், மாமைக் கவின்கெட—பசலையின் அழகு நீங்க, வந்து காப்பை—வந்து இவளைக் கூடிக் காப்பாற்றுவாயாக. (எ-று)

(வி-ரை) கண்மணிப்பாவை யெங்கத்த வென்பது, "கண்ணே கண்ணிற் கருமணிய மணியாடுபாவாய்" என்ற தமிழ் மறையாலுணர்க. திகை, திக்கு, மடி, தாழை, திகை அங்கனை வினைத்தொகை. திகை, ககனம், பாரென்பன ஆகுபெயர். மாமைநிறம்-காருரித்த ஆம்பற் றண்டு போன்று காமத்தால் பசந்தநிறம். "நீர்வளராம்பற் றூம்புடைத் திரள்கா ருரித் தன்ன மதனின் மாமை." (நற்றிணை) "பொய்கையாம்பலருரி மென்கால் சிறத்தினு சிழற்றுதன் மன்னே, இனிப் சத்தன்றென் மாமைக் கவினே" (ஐங்குறு) என்பன வற்றாலறிக. தலைவன் முயங்கிய வழி இந்நிறம் நீங்குதலுடையது. "விளக்கற்றம் பார்க்கு மிருளே

போற் கொண்கன், முயக்கற்றம் பார்க்கும் பசப்பு"
(குறள்.) தோழி வருந்தல் என்னுந்துறை. (சஉ)

வந்தனை யற்றரை யாற்பவம் பொன்னால் மயலெனும
வந்தனை யற்றரு பெண்ணா லெனக்கண்டு மாற்றியுந்த
வந்தனை யற்றடைந் துய்யதோற் காவலம் வந்து
நின்றாள்
வந்தனை யற்ற மறிந்து நான் செய்ய வரமருளே.

(இ-ள்) வந்தனையல் தரையால்-வந்த துன்பங்கள் மண்ணால், பவம் பொன்னால்-வந்த பாவங்கள் பொன்னால், மயல் எனும் அவம்—மயக்கமென்கிற வீணான காரியம், தனையன் தரு பெண்ணால்-மக்களைப் பெறும் பெண்ணால், எனக் கண்டும்-என்று தெரிந்தும், மாற்றியும்—இம் மூப் பற்றினையும் நீக்கியும், அற்று—பற்றற்று, தவந்தனை-தவத்தை, அடைந்துஉய்ய—எய்திப்பிழைக்க, தோற்கா-திருவானைக்காவை, வலம் வந்து—வலஞ்சுற்றி வந்து, நின் தாள் வந்தனை—நின் திருவடியின் வழி பாட்டினை, அற்றம் அறிந்து நான் செய்ய—கால மறிந்து நான் புரிய, வரம் அருள்—வரத்தை யளிப்பாயாக. (எ-று)

(வி-ரை) வந்தனையல் தரையால் என்பது-பாரதத்தாலறிக. பவம் பொன்னால் என்பது—செல்வப் பெருக்கினால் செருக்குற்றுச் செய்காரியந்தவிர் செயலறியாமல் விகற்பித் தெழுகின்ற பாவத்தொழிலை, "அறநிரம்பிய வருளுடையருந்தவர்க்கேனும், பெறலருந்திருப்பெற்ற பின் சிந்தனை பிறிதாம்." என்றும், "செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார், சொல்வனவறிந்து சொல்லார்" என்றும் வருவனவற்றாலறிக. இதனை அறு வகைக் குற்றத்திலொன்றாகிய மதத்தினுள்ளடக்குவர் சான்றோர்கள். இதுபற்றிச் "செருக்குஞ் சினமுஞ் சிறுமையுமில்லார்" என்றார். பெண்களால் வரும் அவம் இராமாயண முதலிய நூல்களிற் கண்டுணர்க. தவம் "நீஇராடல் நிலக்கிடைகோடல், தோலுடுத்தல் தொல் லெரியோம்பல், ஊரடையாமை யுறுசடைபுனைதல்,"

காட்டிஅுணாவு கடவுட் பூசை, ஏற்றதவத்தினியல்பென மொழிப. " அவை-எண் வகையோகாங்கங்களினொன்றாகிய நியமத்துள்ளே யடங்கும். அற்று என்பது யானெனதென்னும் அகப்பற்று புறப்பற்றுக்கள் அறவென்பதைக் குறிப்பிட வென்க. யானெனதென்பதிருந்திடுகாறும் ஞானமருன்'' வந்தனை செய்வது, "ஆன பயபத்தி வழிபாடு பெறுமுத்தி'' என்றார் பிறரும். (சுங)

வரம்பாக னங்கைக் கருள்வோய் புரமட வன்னிவல
வரம்பா கனக ரகிமணுண் டேர்படை வானர்கற்ற
வரம்பாக னஞ்சன் சுடருருள் வேதமாவாய்ந்தவவோம்
வரம்பா கனலா தெமைக்கா கரிக்கா வளரொளியே.

(இ-ள்) வரம்பாகம் நங்கைக்கருள்வோய்-மேலான இடப்பாகத்தை உமையவட்கு அளிப்போய், புரம் அட-திரிபுரத்தை எரிக்க, வன்னி வலவர் அம்பு—தீயையும் திருமாலையும் அம்பாகவும், ஆகம் நகர் அகி—உடலான் நகரும்பாம்பை, நாண்—நாணாகவும், மண்—பூமி, தேர்—தேராகவும், படைவானர்-சேனை தேவராகவும், கல்தவர்-மலைவில்லாகவும், அம் பாகன் அஞ்சன்—அழகிய தேர்ப் பாகன் பிரமனாகவும், சுடர்—சந்திராதித்தர், உருள்—சக்கரமாகவும், வேதமா வாய்ந்தவ-வேதங்களைக்குதிரையாகவுமுடையவனே!, ஓம் வரம்பா—ஓங்காரத்தின் முடிவான பொருளே, கரிக்காவளர் ஒளி—திருவானைக்காவிலுள்ள பரஞ்சோதியே, கனலாது எமைக்கா-வெகுளாது எம்மைக்காப்பாற்றுவாயாக. (எ-று)

(வி-ரை) புரம்—திரிபுரம், இரும்பு, வெள்ளி, பொன் என்ற மூன்று மதில்களையுடையமூன்றுநகரங்கள், வித்துவமாலி, தாருகாக்கன், கமலாக்கன் ஆட்சிக்குட்பட்டன. அவ்வசுரர்களோடு கினைத்தவிடம் செல்லுவன. வானர்—தேவர் "மான் முதல்வானர், என்றார் மாணிக்கவாசகரும். அகி—பாம்பு, "ஆதியந்தணன் அறிந்து பரிகொளுவ'' (பரிபாடல்,)"மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்''(முருகாற்) என்பவையாலுணர்க. "வரம்பா நீயே வரம்பிற்றிவ்வுலகம்'' என்றார் பிறரும். (சுச)

வளச்சந் திரவிலான் வன்றொண்டர்க் காகவிண்
வாய்த்தவழ்த
வளச்சந் திரவின் முகத்தாள் பரவை மனத்துனிது
வளச்சந் திரவி னடந்தோ னருகணை வார்பொழிற்று
வளச்சந் திரவி தொடுங்கரிக் காத்தொழு மானவரே.

(இ-ள்) வளம் சந்திரம் விலான்—செழித்த பொன் மலையை வில்லாகவுடையவன், வன்றொண்டர்க்காக—சுந்தர மூர்த்திக்கு; விண் வாய் தவழ்—வானின்கண் ஊர்ந்து செல்லும், தவளச்சந்திர வில் முகத்தாள்-வெண் மதிபோன்ற ஒளி பொருந்திய முகத்தையுடையவளாகிய பரவை மனத்துனி துவள—பரவை நாச்சியாரின் உள்ளப் பிணக்கு நீங்க, சந்து இரவில் நடந்தோன்—தூதாக இரவிற் சென்றவன், பொழில் தாவளச் சந்து—சோலையிடத்துள்ள சந்தன மரங்கள், இரவி தொடும்—ஞாயிற்றைத் தீண்டும், கரிக்காத்தொழும் மானவர்—திருவானைக்காவை வணங்கும் சான்றோர், அருகு அணைவார்—இறுதியில் சம்பு நாயகர் பக்கல் சார்வர். (எ-று)

(வி-ரை) சந்திரம்-பொன், துனி-முதிர்ந்த கலாம், புலவி-இளைய கலாம், "துனியும் புலவியு மில்லாயிற் காமங், கனியும் கருக்காயு மற்று" என்றதும் காண்க. பரவையார்க்குப் பெரும் பிணக்கெய்தியமையின் இறை சந்து செய நேர்ந்தது. புலவி சந்து செயவில்லாது தலைவர் களால் நீக்கிக் கொள்ளப் படுவது. "புலவி நீக்கிப் புணர் முலை மாதர்" என்றார் பிறரும். இஃது சாமீபம். கிரியை நெறியினின்று பெறுவது. கிரியையினால் பெறும் பேறு திருவானைக்காத் தொழும் பயனாற் பெறுதலின் சாமீபமாயிற்று. (சரு)

மானம் புரந்தவிண் புல்லரை மூவெழு வள்ளல்
[மண்ணம்
மானம் புரந்தர னென்னுநம் வாய்செம்மை
[வால்கருமை

மானம் புரந்தட நீள வொளிக்கணர் மால்மனஞ்சொல்
மானம் புரந்தபத் தோற்காக் கடவுள்சீர் வாழ்த்திலதே.

(இ-ள்) மானம் புரந்த—குற்றத்தைக் கொண்ட, வீண்புல்லரை—வீணாகிய அற்பரை, மூவெழுவள்ளல்—இருபத்தொரு வள்ளலே, மண்ணம்மான்—மண்ணுலக வரசனே, புரந்தரன்—விண்ணுலகவரசனே, என்னும் நம்வாய்—என்று புகழும் நம் வாயானது, செம்மை—சிவப்பும், வால்—வெண்மையும், கருமை—கருப்பும், தடம்—அகலமும், நீளம்—நீட்சியும், ஒளி—ஒளியையு முடையதும், மான்—மான் போன்ற மருட்சியும், உரம் அம்பு-வலிய அம்பை வடிவாலுந் தொழிலாலும் ஒத்ததுமாகிய, கணர்—கண்களையுடைய மங்கையரின், மால்—காம மயக்கமானது, மனம் சொல்மா நம்புரம்—நம்முடைய பெரிய மனம் வாக்குக் காயங்களின் தொழிலாலும், தப—பற்றப்படாது ஒழிய, தோற்காக் கடவுள் சீர் வாழ்த்திலது-திருவானைக்கா இறைவனது சிறப்பைச் சொல்லி வாழ்த்தேன் என்கின்றது. (எ-று)

(வி-ரை) மானம்—இலச்சை எனினுமமையும். "மானமே யளவிலச்சை விமானமே பெருமை குற்றம்" (நிகண்டு). மூவெழுவள்ளல் என்றது முதல், இடை, கடையெழுவள்ளல்களை. களன்முதலியோர் முதலெழுவள்ளல். கன்னன் முதலியோர் இடையெழுவள்ளல். பாரி முதலியோர்கடையெழுவள்ளல். மான் அம்பென்று கண்ணிற்குவமங் கூறியதோடு இலக்கணமுங்கூறப்பட்டது. என்னை? "கண்ணிற்கியல்பு கசடறக்கிளப்பின், வெண்மை கருமை செம்மையகலம், நீளம் ஒளியென நிகழ்த்துவர் புலவர்" என்றாராகலின். தடம் — அகலம், வால் — வெண்மை இவற்றை நிகண்டாலுணர்க. செம்மை—கண்களிற் செம்மையாற்றோன்றும் வரி. வாக்குங் காயமும் மனத்தின்வழிச் செல்லுதலன்றித் தான்எண்ணியவாறு செல்லுதற்கியலாமை பற்றி, மனம் வாக்குக் காயமென்று மனத்தை முன்னர்க் கூறினார். பரஞான முணர்

பவர்க் குன்னுதலுரைத்தல், கிரைத்திடு தொழில்க ளொன்றும் வேண்டாது நீத்து வாளாவிருத்தல், என்றமையால் பெண்களின் காமப்பற்றை மனத்தா லுன்னல், வாக்காலுரைத்தல், காயத்தால் பரிசித்தல் ஆகிய தொழிலைச் செய்தலும் ஞானமுணர்வார்க்குக் கூடாமையின் ஒளிக்கணர்மால் மனம் சொல் புரம் தபவென்று சொல்லப்பட்டது. கடவுளரென உயர் திணையாய் நில்லாது கடவுளென்பது தெய்வமென்னும் பொருட்டாய் அஃறிணை முடிபுகொள்ளும் உயர்திணை யாய் நிற்றலின் அஃறிணைப்பாற்பட்டு ''உணரக்கூறிய'' என்னுந் தொல்காப்பியப் புறநடைச் சூத்திரத்தான் முடிந்தது. புல்லர்—அற்பஅறிவுடையவர். ''புல்லாள னாக'' வென்றார் சிந்தாமணியினும். கண் அகன்று நீளவளருமென்பது, அகலல்குரேள்கண்ணென மூவழிப் பெருகி, என்றாராகலின் என்க. (௬௬)

இலங்கைக் கவயவ மீடாகி விக்க லெழுந்துதமர்
இலங்கைக் கவந்தக னெய்துமு னெண்ணுவை [யென்னெஞ்சமே
இலங்கைக் கவதிசெய் தோன்றுதி தோற்கா [வியவுளம்ப
இலங்கைக் கவந்தவெம்பூதப்படைநம் இறைவனையே.

(இ-ள்) நெஞ்சமே-மனமே, இலங்குஐக்கு-விளங் கிய கபத்திற்கு, அவயவம் ஈடாகி-உடல் ஒத்து நின்று, விக்கலெழுந்து-விக்குள் மேலெழுந்து, தமர் இலம்கைக்க-சுற்றத்தார்களும் மனைவிமக்களும் வெறுத்துக்கைவிட, அந்தகன் எய்துமுன்—சமன் வருமுன்னம், இலங்கைக்கு அவதி செய்தோன்துதி—இலங்கையை அழித்த இராம பிரான் துதித்து வரம்பெறும், தோற்காஇயவுள்—திரு வானைக்காவிலுள்ள கடவுளும், அம்பு அயில் அம்கை-கணையையும் வேலையும் அழகிய கையிலுடைய, கவந்த வெம் பூதப்படை-கவந்தங்களையும் கொடிய பூதங்களையும் படையாக உடைய, நம் இறைவனை—நமது இறைவனாகிய சம்புநாயகனை, எண்ணுவை—நினைப்பாயாக. (எ-று)

(வி-ரை) ஐ—கபம் "அறிவழிந்திட்டு ஐ மேலுந்தி" (தேவாரம்) "ஐயாறு வாயாறு பாயாமுன்" (பதினொரா) என்பவைகளாலுணர்க. "ஐயனார் மிடறடைப்பூண்டு" என்றார் பிறரும். ஈடாகி விக்கலெழுந்து என்பதை ஈடாக விக்கலெழ எனத்திரிக்க. விக்கலெழ இலம் கைக்கவென்பது, "நாச்செற்று விக்குள்" என்றும், "மனைவியர்மக்களீர் செத்தபோது செறியார்" என்றும் வருபவைகளாலுணர்க. இயவுள் — கடவுளென்பது "பெரியோரேத்தும் பெரும்பெய ரியவுள்" என்ற முருகாற்றுணர்க. கவந்தம் — கபந்தமென்ற வட சொல்லின் திரிபு. இதற்குத் தலையற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடலென்று பொருள். தலைக்குறைஎன்பது தமிழ்ச் சொல். (சுஎ)

வனந்தரு மன்றிரு வானைக்கா வந்து வனசருந்தெய்
வனந்தருமண்டி யரவொலிசெய்துவணங்குமுன்னோய்
வனந்தரு மண்ணாதி எண்கூ றவவெம் வயிற்சினக்க
வனந்தரு மன்செலுத் தாதரு ணிற்பணி மாதவமே.

(இ-ள்) தருவனம் மன் — மரங்கள் மிகுதியாக நிலைபெற்ற, திருவானைக்கா வந்து — திருவானைக்காப் பதியை யடைந்து, வனசரும்—பிரமனும், தெய்வ நந் தரும்—திருமாலும், மண்டி அரவொலி செய்து வணங் கும் முன்னோய் — நெருங்கி அரவெனும் ஒலியோடு விழுந்து வணங்கும் பழைமையானவனே, வனம்தரும்— நீரினின்றுந்தோன்றிய, மண்ணாதி எண்கூறவ — மண் முதலாகச் சொல்லப்பட்ட எட்டுக் கூறுயுள்ளவனே, எம் வயின் — எம்பால், சினக்க வனந்தருமன் செலுத் தாது—வெகுண்டு விரைவான கொடுஞ் செய்கையை நமன் புரியாது, நிற்பணி மாதவம் அருள்—நின்னைத் துதிக்கும் பெரிய தவத்தை எனக்கு அருளுவாயாக. (எ-று)

(வி-ரை) அரவொலி செய்தல் "அன்பனே யரனே யென்றரற்றுவார்க்கின்பனும்" (தேவாரம்) மண்ணாதி யெண்கூறு, "வெண்சுடர் செஞ்சுடராகிய விண்ணொடு,

புவிபுனல் அனல்கால் மதிபுல வோனென முழுது நிறைந்த முக்கட் பெருமான்'' என்ற கல்லாடத்தாலறிக. நீரினின்றும் நிலந்தோன்றியமையால் வனந்தருமண் என்று சொல்லப்பட்டது. (94-ம் கவி விசேடவுரையைப் பார்க்கவும்) கோபம் நீட்டித்து நிற்பது சினம், ''சாற்று முள் ளூறுவிருப்பந் தடைப்படிலெழுஞ் சீற்றம்'' என்ற தனுல் சினம் வருவழியுணர்க. (சஅ)

தவரா கனகங் குனித்தவர் வெண்கொம்பின் றாலமுழு
தவரா கனகத்த ரின்றமிழ்ப் பண்சுவைத் தண்பயன்
[வாய்ந்
தவரா கனகநீ ரார்ந்ததோற் காப்பரர் தாசரையெய்
தவரா கனகமண் பெண்ணசை யெய்துமெய்த்
[தானமன்றே.

(இ-ள்) தவராக நகம் குனித்தவர் — வில்லாக மலையை வளைத்தவர், வெண் கொம்பின் தாலம் உழுத வராகன்—வெண்மையான கொம்பினல் பூமியையுழுத வராக உருவுடைய திருமாலின், அகத்தர்-மனத்தை இடமாகக்கொண்டவர், இன்றமிழ்ப் பண்சுவைத்தண் பயன்வாய்ந்தவர்—இனிய தமிழ்ப்பண்ணின் இசையி லுண்டாகிய சுவையின் குளிர்ந்த பயனுயுள்ளவர், ஆகம் நக நீறு ஆர்ந்த தோற்காப்பரர்—உடல் விளங்க நீறணிந்த திருவானைக்காப்பரம்பொருள், தாசரை— அவருடைய தொண்டர்களை, கனகம் மண் பெண் நசை யெய்த வரா — பொன் நில மாதராசை யென்ற மூவா சையும் அடையப்பெருது, மெய்த்தானம் எய்தும்— முத்தி வீட்டை அடையச் செய்யும். (எ-று)

(வி-ரை) ''இருநில முருகெழு கேழலாய் மருப்பிணுழு தோய்'' என்பது பரிபாடல். அகம்-மனம். இன்றமிழ்ப் பண்சுவைத் தண்பயன் வாய்ந்தவர் என்பது, ''பண்ணும் நீ சுவையும் நீ'', ''பண்ணிடைத் தமிழொப்பாய்,''

"ஏழிசையாய் இசைப்பயனாய்," "பண்ணின் பயனாம் நல்லிசையும்" என்ற சான்றோர் உரைகளாலறியலாகும். புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற்போலத் தொண்டர்களது வினை நீறுகும்வண்ணம் தானீறணிந் தார் என்க. இது "தொழுதெழுவார் வினைவள நீறெழ நீறணியம்பலவன்" என்ற கோவையாராற் பெறப்படும். இறைவன் இசைத்தமிழே உருவானவனென அறிக.(சுகூ)

தானந் தவந்தழை தோற்காப் புகழினைத் [தான்சொலிவாய்த்
தானந் தவந்தலர் நின்பதம் போற்றேற்குஞ் சாரவருள்
தானந் தவந்தருங் கண்டத்த ளாரா தனைசெய்சச்சி
தானந்த வந்தணன் மாதவற் கெட்டாத் தலைப்பதனே.

(இ-ள்) நந்து அவம் தரும்கண்டத்தள் — சங்கின் அழகைக் கெடுத்த கண்டத்தையுடைய அகிலாண்ட நாயகி, ஆராதனை செய் சச்சிதாநந்த—வழிபாடு புரியும் மெய்ப்பொருளே, அந்தணன் மாதவற் கெட்டாத் தலைப் பதனே—பிரமன் திருமால் தேடியுமறியாத்தலையடிகளையு முடையவனே, தானம்—இல்லறத்தார்க்குரிய தானமும், தவம்—துறவறத்தார்க்குரிய தவமும், தழை-பெருகும், தோற்காப் புகழினைத்தான்சொலி - திருவானைக்காவின் கீர்த்தியைச் சொல்லி, வாய்தால் நந்த—மெய்மை கூறும் நாவானது தழைய, வந்து நின்பதம் போற்றேற்கும்-வந்து தாமரையையொத்த நின்கழலைத் துதியாத எனக்கும், சாரவருள்தா—நின்னருகில் வந்து வணங்க அருளைத் தருவாயாக. (எ-று)

(வி-ரை) தானம் மூன்று-தலை இடை கடை என்பன. இது தலைத்தானமென்க. "தானத்தாற் போகந்தவத் தாற் சுவர்க்கமாம்," "தானந்தவமிரண்டுந் தங்கா வியனுலகம்" என்றும், புகழ்சொல்வது, "பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்றும் வருவனவற்றாலுணர்க. தால்நந்த-இறைவன் புகழினைக் கூறலின் நாத்தழை

கின்றது. அயனுமரியும் தலையும் பதனுமென்பது-கிரனிறை. மாதவற்கு மெட்டாத் தலைப்பதன்-மேலான வீட்டினையெனில், "ஐயுங்கண்ணு மல்லாப்பொருள்வயின், மெய்யுருபு தொகா விறுதியான" என்பது விதியாகலின் ஐ இறுதியில் தொக்கதென்க. (ரும)

பதனந் துவளிடை யென்று புலம்பும் பரிபுரப்பூம்
பதனந் துவந்த களத்தள்கண் காட்டும் பணியிளந்தா
பதனந் துவதைத் தவிர்த்தவெம் மான்றொண்டர்
[பத்தனில்லூன்
பதனந் துவக்கரைத் தோற்காப் பரன்புரப்
[பன்றொளியே.

(இ-ள்) பணி இளம் தாபதன் நந்துவதை தவிர்த்த எம்மான்-தன்னை வணங்கும் இளையனான மார்க்கண்டன் இறப்பை நீக்கியருளிய எமது இறைவன், தொண்டர் பத்தன் இல் ஊன்பதன்-சிறுத்தொண்டநாயனார் இல்லத்தில் பிள்ளைக்கறிச் சோற்றை வேட்டவன், அம்துவக்கு அரைதோற்காப்பரன்—அழகிய புலித்தோலை அரைக்கசைத்த திருவானைக்காச் சம்புநாயகனது, புரப்பன்றொளி-யாவரும் புகழும் அவன் மெய்யின்றொளியை, பதனந் துவளிடை யென்று புலம்பும்-பத்திரம் வாடுமிடையென்று புலம்புவதைப்போல் ஒலிக்கும், பரிபுரப்பூம்பதம்-சிலம்பணிந்த அழகிய அடியும், நந்து வந்து களத்தள்-கோனனிசங்கம் வந்து குடியிருந்தனைய கண்டத்தையுடைய தலைவியின், கண்காட்டும்-கண்கள் காட்டாநின்றன பாகனேபார். (எ-று)

(வி-ரை) பதம்-சோறு "அவிழ்ப்பதங் கொள்கென்றிரப்ப," என்பதனலறிக. வினைமுற்றி மீளுந் தலைமகன் தலைவியின் சினக்குறிப்பைத் தேர்ப்பாகனேடுரைத்தல். இஃது 'முல்லையின்பாற்படும், இறைவன் உடலொளியாம் செம்மையை, தலைவன் வருங்காலம் நீட்டித்தமையால் சினந்த தலைவியின் கண்கள் காட்டினவென்க. சினக்குறிப்புணர்த்தல். (ருக)

பன்ன கவினப் படைநர சீயன் பணிகரிக்காப்
பன்ன கவினல் விடக்கண்ட னெம்மைப் பயந்தளியப்
பன்ன கவினம்ப னாதியைச் சிந்திக்கிற் பஃறுதிகள்
பன்ன கவினவி லத்தாலுக் கீவன் பழக்கத்தையே.

(இ-ரை) பல்நகம் இனப்படை நரசீயன் பணி-பல்லையும் நகத்தையும் படைகளாகவுடைய நரசிம்ம மூர்த்தி வணங்கும், கரிக்கா-திருவானைக்காவையுடைய, பன்னக இனல் விடக்கண்டன்-வாசுகி கக்கிய துன்புறுத்தும் நஞ்சைக் கண்டத்து நிறுத்தியவன், எம்மைப் பயந்து அளிஅப்பன்—எம்மையீன்று காப்பாற்றியவன், நகவில் நம்பன்-மலையை வில்லாகக் கொண்டவிறைவன், ஆதி-எல்லாப் பொருளுக்கு முதலாகியவன், சிந்திக்கின்-(அவனை) நினைத்தால், பஃறுதிகள்பன்ன-பல துதிகளைச் சொல்ல, கவின் நவில-அவன் புகழாகிய வாழ்த்துக்களைச் சொல்ல, பழக்கத்தை தாலுக்கு ஈவன்-அப்பழக்கத்தை எந்நாவுக்கு அளிப்பன். (எ-று)

(வி-ரை) நகவில்-"இமயவில் வாங்கிய யீசன்" (கம்பர்) என்றும், ஆதி-"அம்பலத்தாதி" என்றும் சான்றோர் கூறியமைகாண்க. சிந்திக்கிற் கல்வியறிவு வளரும். அதன் பயனை "எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்-மொழித்திறத்தின் முட்டறுப் பானாகும்-மொழிதிறத்தின், முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடு பெறும்" "கற்பக் கழிமடமஃகு மடமஃக" (நான்மணிக்கடிகை) இவற்றானறிக. உபாய மூன்றனுளிதனால் விமரிசங் கூறப்பட்டது. (ருஉ)

தையனந் தாதர்ச் சனேபுரி தோற்காத் தலத்த [னென்சிந்
தையனந் தாதகித் தாரா னிடஞ்சந்து சார்ந்தபைந்தத்
தையனந் தாதளி வ்லலை வருமனந் தாழ்ந்திருத
தையனந் தாதரிக் குங்கள மின்னே தளர்கவன்றே.

(இ-ள்) தையல் நந்தாது அர்ச்சனைபுரி-அகிலாண்ட நாயகி குறைவில்லாது வழிபாடுபுரியும், தோற்காத்தலத்தன்-திருவானைக்காப்பதியையுடையவன், என்சிந்தையன்-என் உள்ளத்தை விட்டகலாதவன், அம்தாதகித்தாரான்-அழகிய ஆத்திமாலையையணிந்தவன், இடம்-பக்கலில், சந்து சார்ந்த பைந்தத்தை-தூது சென்ற பசிய கிள்ளையும், அனம்-அன்னமும், தாதளி-மகரந்தம் பூசிய வண்டும், வல்லைவரும்-விரைவில் வந்து சேரும், தையநந்து ஆதரிக்குங் களம்மின்னே-நெருங்கச் சங்குகள் விரும்பும் கண்டத்தையுடைய தலைவியே, தளர்வு அகன்று-வாட்டந்தீர்ந்து, மனந்தாழ்ந்திரு-நீ நின்னெவ்வங்களைந்து மனவமைதியடைந்திருப்பாயாக. (எ-று)

(வி-ரை) தோற்காத்தலத்தன், என் சிந்தையனென்பன-திருவானைக்காத் தலமாகிய நல்ல விடத்தும், என் சிந்தையாகிய தீய விடத்தும் ஒப்பத் தங்குபவன் என்றதைக் குறிப்பன. கிள்ளை முதலிவற்றைத் தூது விடுதல் மரபென்பது, ''இயம்புகின்ற காலத்தெகினமயில் கிள்ளை, பயம் பெறுமே கம்பூவை பாங்கி-நயந்தகுயில், பேதை நெஞ்சம் தென்றல் பிரமரமீ ரைந்துமே, தூதுரைத்து வாங்குந் தொடை'' மின்-உவமவாகுபெயர். பாங்கிதெருட்டல் என்னுந்துறை. (ருங)

அகவி னலற்றுக யாமுள மாம்வகை யாண்டவசெய்
யகவி னலர்புர நட்பிக றுன்பின்பி லத்தகனு
யகவி னலங்க வளைத்தவ மூவ ரறை தமிழ்த்தா
யகவி னலக்கரிக் காவவென் றுலறு மாய்கருவே.

(இ-ள்) அகம் இனல் அற்றுக — மனத்துன்பம் நீங்க, யாமுளம் ஆம்வகையாண்டவ — நாமுளமாயுமிலமாயு மாறிவாராது ஒருபடியே உளமாம் வண்ணம் அடிமைகொண்டவனே, செய்யகவின் அலர் புர — செவ்வண்ணமான திருமேனியை யுடையவனே, நட்பு இகல் துன்பு இன்புஇல் அத்த — நட்பும் பகைமையும், துன்ப

மும் இன்பமும் இல்லாத செம்பொருளே, கல் நாயக வில் நலங்க வளைத்தவ—மலைகளிற் சிறந்த மேருவை வில்லாகக் குழைய வளைத்தவனே, மூவரறை தமிழ்த்தூயகவி நலக் கரிக்காவ — சைவ சமயாசிரியர்களால் அருளப்பட்ட தேவாரத்தைக் கொண்ட நன்மை தரும் திருவானைக் காவையுடையவனே, என்றால்—என்று கூறி வணங்கினால், ஆய் கரு—தாய்க் கருவானது, அறும்—நீங்கும். (எ—று)

(வி-ரை) யான் உளனும் வகை யென்றது யாம் உளமாம் வகையென்றது என்னையெனின், அவராண்டவன்பர் பலராகலின் அங்ஙனம் பலராகக் கூறப்பட்டது. மூவர்—திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள், தமிழ்த் தூயகவி—திருநெறித் தமிழ் மறை. நட்பிகல் இல்லாமை—நொதுமல். "பகைவரிவரிவர் நட்டோரென்னும் வகையுமுண்டோ நின்மரபறிவோர்க்கே, மாற்றோருமிலர் கேளிருமிலர்" என்பது பரிபாடல். உயிர்களின் இயல்பால் நினக்குப் பகையும், நட்பும் உளபோலத் தோன்றுவதல்லது நின்னியல்பால் அவைஉளவல்லவென்றவாறும். கருத்தோன்றிய காலத்து கருவுற்றவர்க்கு கருவுடையார் தாயாதல்பற்றித் தாய்க் கருவெனப்பட்டது. (நச)

கருமங் கதவா ணவமாயை மூன்றுங் கழலவம்பா
கருமங்க தஞ்சம் புகுமெமைக் காகரிக் காவகந
கருமங் கதப்பணி யாய்சைவ சித்தாந்த காவியம்ப
கருமங் கதனுட் பொருளை விரித்தெங் கருத்தமைத்தே.

(இ-ள்) கரிக்காவக — திருவானைக்காவையுடையவனே, நகரும் அங்கதப் பணியாய்—ஊரும்பாம்பை அணியாகக் கொண்டவனே, கருமம் — காமியமும், கத ஆணவம்—கோபமுள்ள ஆணவமும், மாயை-மாயையும், மூன்றும்—ஆகிய இம்மூன்று மலங்களும், கழல—என்னைவிட்டு நீங்கவும், அம்பா கரு மங்க—தாய்க்கரு குறையவும், சைவசித்தாந்த காவியம் பகரும் அதன் உட்

பொருளை விரித்து அங்கு எங்கருத்தமைத்து—மெய் கண்ட சாத்திரங்கள் கூறும் அதனுடைய உட்கருத்தை விரிவாக அறிவுறுத்தி அவ்விடத்திலேயே என் உளத்திற் பதியும்படி செய்து, தஞ்சம் புகும் எமைக்கா— புகல் புக்க எம்மைக் காப்பாற்றுவாயாக. (எ-று)

(வி-ரை) ஆணவ மாயை கன்மமென்னு மூன்று மொழிந்தவழிப் பிறப்பொழியவும், மீட்டு அம்பாகருமங்க ளன்றது எற்றுக்கெனின், மும்மலங்களு மவனருள் கொண்டு தன்னாலொழிக்கப்படுவன. கரு அவனாலேயே ஒழிக்கப்படுவதாகலின் பிரித்துக் கூறப்பட்டது. அம்பா-தாய், "அம்பாவாடலினாய் தொடி" (பரிபாடல்) என்பதனால் தெரியலாகும். சைவசித்தாந்த மொன்றே தத்துவங்கட்கெல்லாம் சிவத்தைப் பொருளாகக் கொண்டுள்ளது. காவியமென்றது ஈண்டு நூலென்னும் பொருட்டு. அமைத்து கழல மங்க காவென்க. தஞ்சம் – எளிமை. எளிமையால் புகல் எனப்பட்டது. (௫௫)

அமையங்க னந்தக் கலந்தும் விகாரமி லத்தனெல்லை
அமையங் கனல்வடி வாயவன் தோற்கா
[வடைந்தறிந்தாம்
அமையங் கனப்பதந் தாழ்ந்திறந் துண்டாத
[லற்றனம்யாம்
அமையங் கனவா மிகபரப் போகமவைகளினே.

(இ-ள்) அமை அங்கம் நந்தக் கலந்தும்-உமாதேவியார் உடலில் பாதி தழையக் கலந்தும், விகாரமில் அத்தன்—விகாரமில்லாத கடவுள், நெல்லை அமை அங்கு அனல் வடிவு ஆயவன்—திருநெல்வேலியிலுள்ள மூங்கிலடியில் தீ வடிவாக முளைத்தவன், தோற்கா அடைந்து-அவனது திருவானைக்காவிற்குச் சென்று, ஆம் அமையம் அறிந்து-ஆகும்காலமறிந்து, கனப்பதம் தாழ்ந்து-அக்கடவுளின் மேலான திருவடிகளை வணங்கி, இறந்து உண்டாதல் அற்றனம்-மாண்டு பிறக்கும் பெருந்துயர் நீக்கினோம்,

யாம் கனவாம் இகபரப்போகம் அவைகளின் அமையம்—
இனிகனவைப்போல் வரும் பொய்யாகிய இவ்வுலக அவ்
வுலகப் போக விருப்பினில் அமையமாட்டோம். (எ-று.)

(வி-ரை) விகாரமிலாமை—காமவிகாரமில்லாமை,
“ உமையொடு பாகத் தமைதர நாளும் பெற்றும் விகா
ரஞ்சற்று மிலாதவன் ” என்றார் பிறரும். மூங்கில்-திரு
நெல்வேலி கோயில்மரம். அமையம் அறிந்து தாழ்தல்—
“ அகலிடந்தாவிய வானோன் அறிந்திறைஞ்சும் ”
(கோவையார்), பொழுதறிந்து நுவல—என்பவையாற்
பெறப்படும். அமையம்—தனித் தன்மைப்பன்மை எதிர்
மறை வினைமுற்று. அமை — அம்மை என்றதன்
விகாரம். (ருசு)

அவையம் பலன்பொரு ளாவெனை வந்தா
[ளரன்கரிக்கா
யவையம் பலதர மூர்ந்து வருவெற்ப வங்கசன்வீ
யவையம் பலம்பொருள் நோய்கண்டு சில்லோ
[ரறைந்த புன்சொல்
அவையம் பலலரா வாகுமுன் வைத்தா ரரண்மனையே.

(இ-ள்) அவை அம்பலன்—சான்றோர்கள் துதிக்கும் பொன்னம்பலத்தையுடையவன், பொருளா எனைவந்து ஆள் அரன் — தானே வந்து நாயேனைப் பொருளாக மதித்து ஆண்டருளிய கடவுள், கரிக்கா-அவனது திருவானைக்காவின், அ—அழகிய, வையம்—தேரை, பலதரம் ஊர்ந்துவரும் வெற்ப-பன்முறை ஊர்ந்து வருகின்ற வெற்பனே, அங்கசன்—மன்மதனது, வீய—மலராகிய, வையம்பு—கூர்மையுள்ள பாணங்களின், அலம்பொருள்—துன்பம்பொருத தலைவியின், நோய்கண்டு-காமநோயைக் கண்டு, சில்லோர் அறைந்த புன்சொல் அவை அம்பல்-சிலர் சொன்ன குறிப்புச் சொற்களான அவைகள் அம்பலாயிற்று, அலரா ஆகுமுன்—அவ்வம்பல் அலராக மாறுமுன், அரண்மனைவைத்தார் — தலைவியைக் காவலிடத்துய்த்தனர், இனியிவண் வருவதையொழிவாயாக.(எ-று)

(வி-ரை) அவை — சான்றோர் என்பது "அவை யிருந்த பெரும் பொதியில்" என்ற மதுரைக் காஞ்சியா னும், அதன் உரையானும் விளங்கும். "எட்டுவகை நுதலிய அவையத்தானும்" என்பது தொல்காப்பியம். "அழுக்கா றிலாமை யவாவின்மை தூய்மை ஒழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை இழுக்காத நற்புலமையோடு நடுவு நிலைமையே, கற்புடைய வெட்டுறுப்புக்காண்", "குடிப் பிறப்புடுத்துப்பனுவல் சூடி", "குடிப்பிறப்புக்கல்வி" என்பனவற்றால் சான்றோர் எண்குணங்கள் அமைந்தோ ராவர். தலைவன் தேரூர்ந்து வருதல், "தேரும் யானையுங் குதிரையு பிறவு மூர்ந்தன ரியங்கலுமுரியரென்ப" (தொல்கா) என்றமையாற் பெறுதும். வீ—மலர் "வீயுகு துறுகல்" என்ற குறுந்தொகையாலறியலாகும். அம்பல்-சிலரறிந்து புல்லிய மொழிகளால் சொல் நிகழாதே மறை யாக முகிழ்முகிழ்த்தல். அலர்-அலரே பலருமறிந்து அலர் தூற்றுதல் "அம்பலு மலருங் களவு வெளிப்படுத்தலின் அங்கதன் முதல்வன் கிழவனாகும்" என்பதோத்தாகலின். உம்மால் சிலரறிந்த வம்பல் பலரறிந்து அலராகவாகுமுன் தலைவியைக் காவலிடத்துய்த்தனர்; ஆதலின் இனி இவ் வாறொழுகாது வரைவொடு வருவாயாக வென்பதாம். தோழி தலைமகற்கு இற்செறிப்பறிவுறீஇ வரைவு கடாதல். (ருள)

அரங்க நகப்பாண் டரங்கங் கொடுகொட்டி
[யாடுமெங்கோன்
அரங்க நகரரிக் கெட்டா வருவுரு வத்தன்மலம்
அரங்க நகர வினைபுவி மாக்கா ளடைகவிண்ட
யரங்க நகமதிற் றேற்கா வதியு மவனையின்றே.

(இ-ள்) அரங்கம் நக—அவை விளங்க, பாண்டரங் கம் கொடுகொட்டி—பாண்டரங்கம் கொடுகொட்டி என்ற கூத்துக்களை, ஆடும் எங்கோன்—கூத்தாடும் எமது கடவுளாகிய தலைவன், அரங்கம் நகர்—திருவரங்க நகரி லுள்ள, அரிக்கு—திருமாலுக்கும், எட்டா—காண

வொண்ணுத, அருவுரு அத்தன்—அருவான உருவத்தை யுடைய இறைவன், மலம் அரங்க—மும்மலங்களும் நீங்கவும், வினைநகா—நம்மிருவினை அகலவும், புவிமாக்காள்-பூமியிலுள்ள மாக்களே, விண்டு அயர் அம் கனகமதில்-மேகம் உறங்கும் அழகிய பொன்னாலாகிய மதில்சூழ்ந்த, தோற்காவதியும் அவனை இன்றே அடைக—திருவானைக்காவிலுள்ள சம்பு நாயகனை இப்பொழுதே சென்று கூடுவீராக. (எ—று)

(வி-ரை) பாண்டரங்கம் தேர்த்தட்டரங்கத்தில் பாரதிவடிவாய இறைவன் வெண்ணீறணிந்தாடியது. கொடுகொட்டி சிவகிருத்தத்துளொன்று. திரிபுரவவுணர் வெந்த வெண்பலிக் குவையாகிய பாரதியரங்கத்தில் இறைவன் வெற்றிக்களிப்பால் கைகொட்டிநின்றாடியது. புரிமெரிய இரங்காதாடலின் கொடுமையுடைத்தாதல் நோக்கி கொடுகொட்டி என்னும் பெயர்த்தாயிற்று. கொடுங்கொட்டி கொடுகொட்டி யென்றாகியது விகாரம். "உமையவள் ஒருதிறனாக ஓங்கிய இமையவன் ஆடிய கொட்டிச்சேதம்" (சிலம்பு) என்றதூஉம் காண்க. அரங்கினமைதி "எண்ணிய நூலோர், அரங்கத்து" என்ற சிலப்பதிகாரவடிகளால் அறியலாகும். அருவுருவத்தன் சார்பினுற்றோன்றுது தானருவாய், என்பதனாலறிக. மலமற்றால் வினையறுமென்பது, 'பழவினைகள் பாறும் வண்ணம்,' 'சித்தமலமறுவித்து,' என்பவற்றாலுணர்க. மக்களை மாக்களென்றது மன உணர்ச்சியின்மை குறிப்பிடற்கென்க. 'மாவு மாக்களுமையறிவினவே' 'மக்கடாமேயாறறிவுயிரே, (தொல்கா) என்பவற்றாலறிக. விண்டு—மேகம். பாரதியரங்கம்—சுடுகாடு. இறைவன் நாடகத்தமிழில் விருப்புள்ளவனென்பது பெறப்பட்டது. பாண்டு—வெண்மை. (ருஅ)

வளைய னலங்க நுசுப்பைச்செய் கொங்கையர்
வளைய னலங்கனுற் செற்றகொற் றக்கே [வாகினிய
[வலப்பொருள்சி

வனைய னலங்கஞ்செய் கூலிக்கு நீறளி வண்கரிக்கா
வனைய னலக்கரன் றுடொழிற் போம்வினை
[வல்விலங்கே.

(இ-ள்) வல்லைய-சூதாடு கருவிவடிவங்கண்டுவருந்த, நுசுப்பை நலங்கச்செய் கொங்கையர்—இடையைக் குழைய ச் செய்யும் முலைகளையுடைய பெண்களை, வாகினியவனை-படையாகவுடைய மன்மதனை, அனல் அங்கணூற் செற்ற கொற்றக் கேவலப் பொருள்-தீயாகிய நுதல்விழி நாட்டத்தலெரித்த வெற்றியையுடைய தனிமைப் பொருளானவர், சீவன் ஐயன்—நித்தமாகிய பசுக்களுக்குப் பதியாயுள்ளவர், அலங்கஞ்செய் கூலிக்கு நீறணி வண் கரிக்காவன்—மதிலமைக்கும் வேலையாள் கூலிக்குத் திருநீற்றைக்கொடுக்கும் வண்மை நிறைந்ததிருவானைக்காவையுடையவன், ஐயம் நலக்கரன்—பிச்சையேற்கும் சிறந்த கையையுடையவன், தாள் தொழின்—அவனுடைய திருவடிகளை வணங்கினால், வினைவல் விலங்குபோம்—வினையாகிய வலிய தளை நீங்கும். (எ-று)

(வி-ரை) வல்லைவருத்தப்படச்செய்து இடையை வணக்குந்தனமென்க "சூதலங்தொல்க விம்மித் திரண்ட முலைத் தோகையரே" (தஞ்சைவா) என்றதூங் காண்க. வாகினி—படை. சீவன் ஐயன்-பசுபதி. கூலிக்கு நீறளித்தல்—தலபுராணத்துட் காண்க. வினைவல் விலங்கு உருவகம். (ருக)

விலங்கை யனங்கனைக் காய்ந்த கரிக்கா விருப்பனர
விலங்கை யனத்தம் புரியா தடர்த்தவன் வீணருக்கு
விலங்கை யனவிந்து நாதாந்தன் றெண்டர்
[விலகுவர்கால்
விலங்கை யனயவிற் பற்றுக் கிளையார் விழிவலைக்கே.

(இ-ள்) வில் அம்கை அனங்கனை—கரும்பு வில்லைக் கையிலேந்திய காமனை, காய்ந்த—சினந்தழித்த, கரிக்கா விருப்பன்—திருவானைக்காவில் விருப்புள்ளவன், நர

விலங்கை அனத்தம் புரியாதடர்த்தவன்—குருதி வெறி கொண்டு உலகையழிக்க முயன்ற நரசிம்ம மூர்த்தியைக் கெடுதி செய்யாது நல்வழியில்நடக்க அடக்கிவைத்தவன், வீணருக்கு விலங்கும் ஐயன்-பாவிகளுக்குத் தூர விலகும் இறைவன், அம் விந்து நாதாந்தன்—அழகிய விந்து நாத மாயுள்ளவன், தொண்டர்—அவனது அடியார்கள், கால் விலங்கையன இல்பற்றுக்கு-காற்றளை போன்ற இல்லறப் பற்றினின்றும், இளையர் விழிவலைக்கு விலகுவர்—பெண் களின் விழியாகிய வலையினின்றும் தப்புவர்; ஏனையோர் தப்பாரென்றபடி. (எ-று)

(வி-ரை) நர விலங்கையடர்த்தவன்—சரபவடிவான இறைவன். இல்பற்று—"மனைவி, தாய், தந்தை, மக்கள் மற்றுள சுற்ற மென்னும்," வினையுளே விழுந்தழுந்தி, 'ஒக்கல் வாழ்க்கை தட்குமாகாலே,' எனவருபவையா லுணர்க. பற்றுக்கு, வலைக்கு உருபு மயக்கம். "விந்து நாதமுங் கடந்த ஞான வாரிதியே," என்றமையால் விந்து நாதந்தன் என்று சொல்லப்பட்டது. இல்பற்றுக்கு இளை யார் விழி வலைக்கு என்பதற்கு இல்லறப் பற்றுக்கேது வாகிய பெண்கள் விழியாகிய வலையினின்றும் எனினு மமையும். (சுஙி)

வலையங் கடகச்செங் கண்மால் கரிதந்து வாய்ச்சிலம்பி
வலையங் கடமுலை யாட்கரு டோற்கா வரன் மனக்க
வலையங் கடங்க வருந்தொல் பிறவி வகையெனுஞ்ச
வலையங் கடலற வீடளிப் பன்றெழு மாந்தருக்கே.

(இ-ள்) வலையம் கடகம் செங்கண்மால்—வாகு வல யத்தையுங் கங்கணத்தையுமுடைய கோச்செங்கட் சோழ ருக்கும், கரி-வெள்ளை யானைக்கும், தந்து வாய்ச்சிலம்பி-நூலைவாயிலுடைய சிலம்பிப்பூச்சிக்கும், வல் கடம் ஐயம் முலையாட்கு—சூதாடு கருவியோ குடமோ என ஐயுறும் படியான தனங்களையுடைய அகிலாண்ட நாயகிக்கும், அருள்—கிருபை செய்த, தோற்காவரன்—திருவானைக்

காவையுடைய இறைவன், தொழும் மாந்தருக்கு-தன்னை வணங்கும் தொண்டர்கட்கு, மனக்கவலை அங்கு அடங்க-உள்ளக் கவலைகணீங்க, வரும் தொல்பிறவியெனுஞ் சவலையம்கடலற—வரும் பழைய பிறவியாகிய வினை கடல் நீங்க, வீடளிப்பன்—வீட்டினை அளிப்பன். (எ-று)

(வி-ரை) கோச்செங்கட்சோழன்— 'செங்கண்மால் புல்லரையட்டகளத்து' என்ற களவழி கொண்டவரு மிவரே. வாயால் நூல் விண்டு கோயில் சமைத்தமை பற்றி தந்துவாய்ச்சிலம்பியென்று கூறப்பட்டது. 'சிலம்பி வாயினால் வலந்த மருங்கில்.' என்றார் பெரும்பாணாற்றி னும். 'தனக்குவமையில்லாதான்றாள்....ம ன க் க வ லை மாற்ற லரிது' என்றும்பரும் பரவு மொருதமிழ் வேத முரைத்தலான், மனக்கவலை அடங்க என்று கூறினார். பிறவி வகை ஏழு—தேவர், மனிதர் முதலியவை. பிறவித் துன்பம் மூன்று. அவை — தன்னையும், பிறவுயிர்களையும், தெய்வத்தையும் பற்றி வருவனவாம். அதனால்—பிறவி வகை என்றதூஉம் இது கருதி என்க. பிறவியைக் கட லென்றது. 'பிறவிப் பெருங்கடல்' 'பிறவியென்னும் பெருங்கடல்' என்பவையால் பெறப்படும், வல்கடம் ஐயுறும் என்றது தடுமாறுவமம். (சுக)

தருக்கந் தரந்தோய் கரிக்காவ னுளாறிற் சார்ந்தகிரா
தருக்கந் தரமுத்தி யீந்தவற் கொப்பொரு சாமியென்று
தருக்கந் தரவரு வீரவம் விட்டவன் றொழுதுந்
தருக்கந் தரம்பெறச் செய்தெய்து வேண்டுந்
[தனிவரமே.

(இ-ள்) தரு கந்தரந்தோய்—மரங்கள் மேக மண்ட லத்தையளாவும், கரிக்காவன்—திருவானைக்காவையுடை யவனும், சார்ந்த கிராதருக்கு—தன்னடியைச் சேர்ந்த கண்ணப்பருக்கு, நாள் ஆறில்—ஆறு நாட்களில், அம் தரம் முத்தி ஈந்தவற்கு—அழகிய மேலான முத்தியை அளித்தவனுமாகிய அக் கடவுளுக்கு, ஒப்பு ஒரு சாமி

யென்று—ஒப்பான கடவுள் ஒருவர் உண்டென்று, தருக்கம் தரவருவீர்—வாதுசெய்ய வருஞ் சமயவாதிகளே, அவம்—அது வீணான காரியம், விட்டு-அவ்வீண் வாதங்களை நீக்கி, அவன் தாள்தொழுது—அச்சம்பு நாயகனது திருவடிகளை வணங்கி, உம் தருக்கு அந்தரம் பெறச்செய்து—உமது செருக்கிற்குப் பற்றுக்கோடில்லாமற் செய்து, வேண்டும் தனிவரம் எய்தும்-நீங்கள் விரும்பிய ஒப்பற்ற வரத்தையடைவீராக. (எ-று)

(வி-ரை) 'தொண்டு செய்து நாளாறிற் கண்ணிடந்தப்பவல்லேனல்லேன்' என்றார் பிறரும். சார்ந்தவர்க்கருளுதல் 'தன்னடைந்தார்க்கின்பந் தருவன்' (தேவாரம்) அவம் 'அவஞ் செய்வாராசை' (குறள்) தருக்கு 'தருக்கினர் கெடுவர்' (கம்பர்) என்பனவைகளால் உணர்க. கண்ணப்பர் வரலாற்றைத் தொண்டர் புராணம் இனிது விளக்கும். (சுஉ)

வரந்தர வாநின் றிருவடி காட்டியான் வாழவிரு
வரந்தர வாய்மண் ணரகெய்த வேண்டு வரமவர
வரந்தர வாயி றுகைக்கும் கரிக்கா வனத்தமைக
வரந்தர வாக நமனுயிர் பற்ற வருந்தினத்தே.

(இ-ள்) இருவர்—அயனும் அரியும், அந்தரவாய்-துறக்கத்தாரும், மண்—மண்ணுலகத்தாரும், நரகு-பாதலத்தாரும், அவரவர் வேண்டும் வரமெய்த-அவரவர்கள் தமக்கு வேண்டிய வரத்தையடைய, அந்தர வாயில் துகைக்கும்—கோயிற் கோபுர வாயிலிற் காத்திருக்கும், கரிக்காவனத்த — திருவானைக்காவில் நீருருவாயுள்ளவனே, மைகவர் அம் தரம் ஆகம் நமன்—மேகஞ்சூழ்ந்த அழகிய மலைபோன்ற மார்பையுடைய தருமனானவன், உயிர் பற்ற வருந் தினத்து— என் உயிரைக் கவர வரும் நாளில், நின் திருவடி காட்டி — உன் திருவடித் தாமரையை என் கண்முன் காட்டி, யான் வாழ வரம்தரவா—யான் பிழைக்கும் வண்ணம் கதியளிக்கும் வரத்தை யருள்புரிய வருவாயாக. (எ-று)

(வி-ரை) இறைவன் யாவர்க்கும் வரமளிக்குந் தன்மையனாதலின் அயன் அரி மூவுலகோரும் அவரவர் வேண்டும் வரமெய்த, கோயில் வாயிருக்கைப்பதனையும், பொறியுணர்வல்லதில்லாத் தனக்கும், திருவடி காட்டி, வரந்தரவா வென்பதனையுங் குறித்தனர். 'தாட்டாமரை காட்டி' என்றார் பெரியாரும். வாய்—இடம். 'மலர்க் காந்தள்வாய்நாற' என்பதும் காண்க. மலையை மேகம் சூழ்வது—'வானமாமலைவாய் சூழ்பு' என்பதனுலுணர்க. அந்தரம், மண், நரகு என்பன ஆகு பெயர். (கூக)

தினமனங் கற்கு நடைபங்கர் தாளாற் சினம் பெறமோ
தினமனங் கங்கந் தலைகரத் தாற்கணுற் சித்தசற்கா
தினமனங் கண்கரிக் காத்திசை நோக்கித்
[தொழுதெழின்வா
தினமனங் கண்ட மயக்கட்டுச் சேர்ப்பர் சிவபதத்தே.

(இ-ள்) அனம் தினம் கற்கும் நடைபங்கர்-அன்னப் பறவைகள் நாளும் வந்து கற்கும் நடையையுடைய உமை கூறன், சினம்பெற மோதி தாளால் நமன் அங்கம்—கோபமுறக் காலால் உதைத்து இயமன் உடலையும், நம் தலை—பிரமன் தலையிலொன்றையும், கரத்தால்—கையினுலும், கண்ணால்-நுதல்விழியாலும், சித்தசன்-மன்மதனையும், காதின—அழித்த, மன்—இறைவன், அம்கண் கரிக்கா—அழகிய இடமமைந்த திருவானைக்காவின், திசை நோக்கி தொழுது எழின்—திக்கு நோக்கி வணங்கினுல், வாதில் நம் மனங்கண்டமயக்கு அட்டு-சமய வாதங்களில் நம் மனங்கண்ட மயக்கத்தையொழித்து, சிவபதம் சேர்ப்பர்—அச்சம்பு நாயகர் தன் சிவபதமாகிய வீட்டுலகில் சேர்த்து வைப்பர். (எ-று)

(வி-ரை) அனம் கற்கும் நடை ஆகுபெயர். திசை நோக்கித் தொழுதெழல்-'தெய்வம்பேணித் திசைதொழுதனிர் சென்மின்', 'திசை நோக்கித் தொழுகின்றான்' 'திசைநோக்கி மெய்பூசனை', என்பனவற்றாலறியலாகும்.

வாதில் மனங்கண்டமயக்கம்-உலகமும், உயிரும் கடவுளு மாகிய பொருள்கள், 'ஒன்றே பொருளென்னின் வேறென்ப வேறென்னினன்றென்பவாறு சமயத்தர்' என் பதனாலறிக. ஆறுசமயமாவன-வியாசம், சைமினி, பதஞ் சலி, கபிலம், கணாதம் அட்சபாதம் என்பவை. வேதத்துக் குட்பட்ட சமயமேயன்றிப் புறமாய சைனம், பௌத்தம், சார்வாகம், உலோகாயதம், முதலாகிய பாசமயங்களையும் கொள்க. 'உவலைச்சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம், சவலைக்கடல்' என்றார் மணிவாசகப் பெருமானாரும். சாயுச்சியம். (௬௪)

தத்து வரிக்கரி யார்க்கற நஞ்சனந் தானயில் மெய்த்
தத்து வரிக்கண் வயற்கரிக் காவர் சவலனைமை
தத்து வரிக்கண் ணகிலாண்ட நாயகி தாழ்பதஞ்சித்
தத்து வரிக்கக் கரஞ்செயச் செய்விப்பர் தம்பணியே.

(இ-ள்) உவரிக்கரியார்க்கு தத்து அற-கடல் வண்ண னாகிய திருமாலுக்குத் துன்பம் நீங்க, நஞ்சு அனம் தான் அயில்மெய்த்தத்துவர்-நஞ்சமாகிய உணவைஉண்டருளிய உண்மையான வல்லமையையுடையவர், இக்கு அண்வயல் கரிக்காவர் — கரும்பு வயல்சூழ்ந்த திருவானைக்காவை யுடையவர், தத்துவரிக்கண் அகிலாண்டநாயகி தாழ்பதம்- செவ்வரி பொருந்திய கண்களையுடைய அகிலாண்டவல்லி வணங்கும் தன்னுடைய திருவடிகளை, சவலன் எமை— ஒன்றுக்கும் பற்றாதவனாகிய எம்மை, சித்தத்துவரிக்க— சித்தத்துப் பதிக்கவும், கரம்-என்கைகள், தம்பணிசெய— தம்முடைய தொண்டுகளைச் செய்யவும், செய்விப்பர்— செய்துவைப்பர். (எ-று)

(வி-ரை) நஞ்சுஅனம் அயிலுறுமென்பது அது செய் யுந் தன்மையனென்னும் பொருட்டாதலின், நிகழ் காலத்தாற் கூறப்பட்டது. தத்துவர்-' தன்னொப்பில்லாத் தத்துவன் காண்' என்ற தமிழ் மறையாலுணர்க. என் னைத் தம்பதம் சித்தத்துவரிக்கக் கரம் தம்பணிசெய்யச் செய்து வைப்பர் என்க. தம் என்பவற்றைப் பதத்துக்கும்

கூட்டுக. சித்தத்து வரித்தல் தியானசமாதியுள்ளடங்கும். பணிசெய்தல் கிரியையினுள்ளடங்கும். (௬௫)

பணியம் பரப்பணி யம்பர பத்தர்கள் பற்றறுக்கும்
பணியம் பரநின் பதாம்புய மன்றிப் பரசுரரைப்
பணியம் பரவ மவர்தளி நோக்கிலம் பார்வையினாற்
பணியம் பரவை யெனவொலி தோற்காப்
[பரம்பொருளே.

(இ-ள்) பணி அம்பரம்—பாம்பையும், திசையையும், பணி அம்பர — அணியாகவும் ஆடையாகவுமுடையவனே, பத்தர்கள் பற்றறுக்கும் பணி அம்பர—தொண்டர்களது இருவகைப்பற்றையும் நீக்கும் தொழிலையுடைய அப்புலிங்கமானவனே, பண் இயம் பரவையென வொலி தோற்காப் பரம்பொருளே-இசையோடு கூடிய வாச்சியங்கள் கடலைப்போல் ஒலிக்குந் திருவானைக் காவையுடையவனே, நின்பதாம் புயம் அன்றி—நின் திருவடிகளையல்லாமல், பரசுரரை-வேறு தேவர்களை, பணியம்-வணங்கமாட்டேம், பரவம்—துதிக்கமாட்டேம், பார்வையினால் அவர்தளி நோக்கிலம் — கண்ணால் அத்தேவர்கள் கோயில்களையும் பார்க்கமாட்டோம். (எ-று)

(வி-ரை) பத்தா.......பணி அம்பர என்றது "அவரவரேவலராளனும் நீயே" என்ற பரியாடலாலறிக. பதாம்புயம்-வடமொழிச்சந்தி "புத்தியை வாங்கி நின் பதாம் புயத்திற் புகட்டி" என்றார் பிறரும். பார்வையால் நோக்கிலம் என்பதனால் பணியம் பரவமென்பனவற்றிற்குத் தலையால் நாவால் என்பன கூட்டியுரைக்க "உன்னையல்லாலொருதெய்வமுள்கே"னென்றும் "உள்ளேன் பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே" என்றும் வருவனவற்றாலறிக. இயம்பரவையென வொலித்தல், "மாகாலெழுந்த முந்நீர் போல முழங்கிசை நன்பணை" என்பதனாலுணர்க. பரம்—எல்லாப் பொருட்கும் மேலானவன்.
(௬௬)

பரவா தவருளத் தாமரை யேகாப் பதத்ததிகம்
பரவாத வன்னிவி ணீர்புவி யான பழமையவம்
பரவாத வற்கரு டோற்கா விறைவசெம் பாணிவலைப்
பரவா தவமிலேற் காக்குவை ஞானப் பலத்தினையே.

(இ-ள்) பரவாதவர் உளத்தாமரை ஏகாப்பதத்த—துதியாதவர் நெஞ்சத்தாமரையின்கண் செல்லாத திருவடிகளையுடையவனே, திகம்பர—ஆடையில்லாதவனே, வாதம் வன்னி விண் நீர் புவியான பழமைய—காற்று தீ வான் நீர் பூமி ஆகிய ஐம்பெரும் பூதமான பழம் பொருளே, அம்பர ஆதவற்கு அருள் தோற்கா விறைவ-வானிலுள்ள கதிரோனுக்குக் கிருபை செய்த திருவானைக்காக் கடவுளே, செம்பாணிவலைப்பரவா—சிவந்த கையில் வலையையேந்திய பரதவர் தலைவனே, தவமிலேற்கு—தவமில்லாத எனக்கு, ஞானப் பலத்தினை ஆக்குவை—மெய்ஞ்ஞானத்தின் பயனையளிப்பாயாக. (எ-று)

(வி-ரை) உளத்தாமரை யேகாமை, "மலர்மிசை யேகினான்" என்ற குறளால் விளங்கும். உளத்தாமரை பண்புத்தொகை. வாத முதலானவை ஆகியமை, "நீரும் நிலனுந்தீயும் வளியு, மாகவிசும்போ டைந்துட னியற்றிய மழுவாணெடியோன்" என்பதனலறிக. வான்-ஓசை ஒன்று. காற்று—ஓசை ஊறு இரண்டு. தீ-ஓசை, ஊறு, ஒளி, மூன்று. நீர்—ஓசை, ஊறு, ஒளி, சுவை, நான்கு. மண்—ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஐந்து. "சுவையொளி" என்ற திருக்குறளினும், 'மாஅயோயே' என்ற பரிபாடலினும் பரிமேலழகர் உரையால் இத்தத்துவ முறைகள் நன்கு உணரப்படும். ஆதவற்கருளியது தலபுராணத்துட்காண்க. (சுஎ)

பலத்த வனத்தருத் தோற்காப் பரன்கரம் பாவகற்கும்
பலத்த வனற்கு மறச்செற்ற மெய்ப்பொருள் [பண்டைமறைப்
பலத்த வனத்தி சிலம்பிதெய் வங்கள் பணிகழலம்
பலத்த வனம்ப னெனச்சொலப் போமலப் பாதகமே.

(இ-ள்) பலத்த — பழத்தையுடைய, வனம்தரு— அழகிய வெண்ணாவல் நிழலில் உறையும், தோற்காப் பரன்-திருவானைக்காச் சம்பு நாயகன், கரம்பாவகற்கும்- இத்தேவனது கையையும், பல் அதவனற்கும்—அழகிய பருதியது பல்லையும், அறச்செற்ற மெய்ப்பொருள்-இல்லா மற் செய்த உண்மைப் பொருளாயுள்ளவன், பண்டை மறைப் பலத்தவன்-பழைய வேதப் பலத்தையுடைய சம்பு முனியும், அத்தி-யானையும், சிலம்பி-சிலம்பிப் பூச்சியும், தெய்வங்கள்—பிற தெய்வங்களும், பணிகழல் அம்பலத் தவன்-வணங்குந் திருவடிகளையுடைய பொன்னம்பலத்தை யுடையவன், நம்பன்—எப்பொருட்கு மிறைவன், எனச் சொல-என்று அவன் பெயர் சொல்லி வணங்க, மலப் பாதகம் போம்-மலங்களாலுண்டாகிய பாவங்களெல்லாம் நீங்கும். (எ—று)

(வி-ரை) பலம்—பழம், 'பலங்கனிபயன்காய் சேனை' என்பது நிகண்டு, பாவகற்கும் தவனற்கும் என்பவற்றில் குவ்வுருபு ஆறும் வேற்றுமைப் பொருளில் வந்தது. அவ் விரு பெயர்க்கண்ணுள்ள உம்மையைக் கரம் பல் என்ப வற்றோடு கூட்டுக. சம்புமுனிமுதலியவர்கள் பூசித்தமை தலபுராணத்துட் காண்க. தெய்வங்கள்-பிறரால் வணங் கப்படுந் தேவர்கள். அ—அழகு. (கூஅ)

பாதவ னாக மணைபொழிற் றோற்காப் பதிவளர்நம்
பாதவ னாகம் புலிமுனம் பொன்னம் பலங்குனித்த
பாதவ னாகத கண்காணக் கைதொழப் பன்னநின்சீர்ப்
பாதவ னாகம் வணங்கப் பணிப்பையெம் பாவனைத்தே.

(இ-ள்) பாதவம் நாகம் அணைபொழில் தோற்காப் பதிவளர் நம்பா—மரங்கள் விண்ணுலகத்தைச் சேரும் சோலைகளையுடைய திருவானைக்காப் பதியிலுள்ள இறை வனே, தவநாகம் புலிமுனம் பொன்னம்பலம் குனித்த பாத — தவத்தையுடைய பதஞ்சலி வியாக்கிரபாதர் முன்னர் பொற்சபையில் இன்பக்கூத்து செய்தருளிய

திருவடிகளையுடையவனே, அநாத-அறியப்படாதவனே, கண்காண — என் கண்கள் நின்னைக் காணவும், கைதொழ—என் கைகள் நின்னைத் தொழவும், தவமிகுதியாக, நின் சீர் பா நாப்பன்ன-நின் கீர்த்தியாகிய தமிழ் மறையை நாப் பாடவும், நம் வணங்க-தலை வணங்கவும், எம்பாவம்நைத்தும் பணிப்பை — எம்முடைய பாவத்தை அறப்பண்ணி எமக்கு அருள் செய்வாயாக.

(எ-று)

(வி-ரை) "பற்றித்தொடருமிருவினைப் புண்ணிய பாவமுமே" என்றமையால் தொடர்ந்துவந்த பாவமுள் வழி அப்பாவ வயத்தால் இறைவனைக் காணல் முதலிய நிகழாவாதலின், பாவநைத்து வணங்கப் பணிப்பை யென்று கூறப்பட்டது. "பாவகாரிகள் பார்ப்பரிது" என்பது தேவாரம். நா பா பன்னுவது, "சொற்றுணைமாலை கொண்டு தொழுதெழுவார்கட்கெல்லாம் — நற்றுணையாவர்" "வணங்கத்தலைவைத்து வார்கழல் வாய்வாழ்த்த வைத்து" என்பனவற்றாலறிக. நாகம் புலி என்ற பெயர்களுக்கு முன் தவம் என அடைகொடுத்தமையால் அச்சொற்கள் பதஞ்சலி வியாக்கிரபாதரைக் குறித்தன.

(சுசு)

நையனம் பாதக நீங்கப் பிறப்பவா நவ்வியத்தா
னையனம் பாதவ வெண்ணுவ லானைக்கா நாயகன்வி
னையனம் பாதவர்க் கோட்டா னடியார் நலத்தனைய
னையனம் பாதரிக் குஞ்சடை யானடி நாடகமே.

(இ-ள்) நவ்வியத்தானையன்-மழுப்படையையுடையவன், அம் வெண்ணுவல் பாதவம்—அழகிய வெண்ணுவல் மரத்தையுடைய, ஆனைக்கா நாயகன் — திருவானைக்காவிற்குத்தலைவனுயுள்ளவன், வினை அல் நம்பாதவர்க்கு ஓட்டான்—வினையாகிய இருளை விரும்பாதவருக்கு நீக்காதவன், அடியார் நலத்து அனை அனையன்—தொண்டர்கள் நலத்தில் தாய்க்கு ஒப்பானவன், அம்பு ஆதரிக்குஞ் சடையான்-கங்கைவிரும்புஞ் சடையையுடையவன் ஆகிய

இறைவனின், அடி—திருவடிகளை, நம் பாதகம் கைய—நம் பாவங்கள் கெட, பிறப்பு அவா நீங்க—பிறவிக்கு முதலாகிய அவா நம்மைவிட்டு நீங்க, அகமே நாடு—மனமே தேடுவாயாக. (எ-று)

(வி-ரை) அவா, பிறவிக்குக் காரணமென்பது "அவாவென்ப எல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவாப் பிறப்பீனும் வித்து" என்ற தேவர் வாக்கான் தெளியப் படும், "அவாச்சார்ந்து பற்றுகும் பற்றினல் வினை முதிர்வாம், தவாதவிவ்வினை முதிர்வால் பிறப்பாகும்." (நீலகேசி) என்பதனானுமறிக. அவா-எனக்கிது வேண்டு மென்னும் விருப்பம். நம்பாதவர் — விரும்பாதவர் "நம்பு மேவும் நசையாகும்" (தொல்காப்) அனையனையன் சிறப்பு நிலைக்களமாகப் பிறந்த பண்பு வமம், "தாயவன்கா னுலகுக்கோர்" என்பது தேவா ரம். தாய்த்தலையன்பன் என்ற இலக்கண எடுத்துக் காட்டுங் காண்க. (எ)

கம்பர வஞ்சலஞ் செய்மரு தக்கரிக் காவரசு
கம்பர வஞ்சன் பிழைபொறுத் தாண்டு கழலருடி
கம்பர வஞ்சடை யாயக் கரமுருக் கன்மந்தலங்
கம்பர வஞ்சத்த வீட்டிற் குநிமித்த காரணனே.

(இ-ள்) கம்பு அரவம் சலம்செய் மருதம்—சங்குகள் ஒலிசெய்யும் நீர்வளஞ் சான்ற பழனமிகுந்த, கரிக்காவர-திருவானைக்காப்பரனே, திகம்பர-ஆடையில்லாதவனே, அம் சடையாய்-கங்கை பொதிந்த சடையையுடையவனே, அக்கரம்—எழுத்துக்களும், உரு—வடிவமும், கன்மம்-தொழிலும், தலம்—இடமும், கம்-தலையும், பரவு அஞ்சு அத்த—துதிக்கும் ஐந்தென்னும் எண்ணைக் கொண்ட வனே, வீட்டிற்கு நிமித்த காரணனே—முத்திக்குக் [redacted]காரணமாகவுள்ள செம்பொருளே, சகம்—இவ் வுலகில், பரவஞ்சன்—சிறந்த வஞ்சகனாய எனது, பிழை பொறுத்து—குற்றங்களைப் பொறுத்தருளி, ஆண்டு—

அடிமைகொண்டு, கழல் அருள்—திருவடிகளை அளித்தருள்வாயாக. (எ-று)

(வி-ரை) பரம்-பெரியவை. பரவஞ்சன் என்றது பரமதுட்டன், பரமமூடன் என்பவை போல நின்றது. தலையாயினர், அடைந்தார்ப் பிழை பொறுத்தமைதலும், இடையாயினர் துறத்தலும், கடையாயினர் கெடுத்தலும் உலகத்துண்மையின், கள்ளப்படிறர்க்கருளாவான் என்றுன்றோர் கூறியிருப்பினும், இறைவன் தலைமையாயினமைபற்றி பிழைபொறுத்தாள்வையென்று சொல்லப்பட்டது. கழல் ஆகுபெயர். ஐந்தொழில், ஐந்துருவம், ஐம்முகம், ஐந்தெழுத்து எனவரும் ஒற்றுமைபற்றி அஞ்சு அத்த என்றார். (எக)

காமரக் கானட மாயோட் கரிக்கருள் காரணபூங்
காமரக் கான முகிற்றேய் தமிழ்க்கரிக் காவிறைவ
காமரக் கானமாக் கொன்றை யடையாளக்
[கத்திகைமுக்
காமரக் கானல் மதிச்சிகண் டாஎங் கருமலைத்தே.

(இ-ள்) மரக்கால் நட மாயோட்கு அரிக்கு அருள் காரண—மரக்காலென்னுங் கூத்தையுடைய கொற்றவைக்கும் திருமாற்கும் அருள் செய்த காரணப் பொருளே, பூங்கா மரக் கானம்—பூஞ்சோலையிலுள்ள மிகுதியான மரங்கள், முகில் தோய்—மேக மண்டலத்தையளாவும், தமிழ்க்கரிக்கா இறைவ — செந்தமிழ் நிலவும் திருவானைக்கா இறைவனே, காமரக் கானம்—சீகாமரமென்னும் பண்ணைப்பாடும், மா-வண்டு மொய்க்கும், கொன்றை அடையாள கத்திகை—கொன்றைப் பூவாலாகிய அடையாள மாலையையுடைய, முக்காமர் அக்கா—மூன்று அழகிய கண்களையுடையவனே, நல்மதி சிகண்டா-இளம் பிறையை முடியிலணிந்தவனே, எம் கருமலைத்து கா— எம் பிறவிக் கருவை நீக்கிக் காப்பாற்றுவாயாக. (எ-று)

(வி-ரை) மரக்கால் கூத்துவகையிலொன்று; மாயவளாடியது. மரக்கால் மாயோள் இடைப்பதம் தொக்கு

நின்ற இரண்டாம் வேற்றுமைத் தொகை. ''மாயவ ளாடிய மரக்காலாடலும்'' (சிலம்பு) என்பதனாலுணர்க. சீகாமரமென்னும் பண்ணை வண்டுகள் பாடுமென்பது ''காமருதும்பி காமரஞ் செப்பும்'' என்றமையாலறிக. காமரக்கானம் இருபெயரொட்டு எனலாம். மாக் கொன்றை ''தேன் வண்டுறைதருங்கொன்றை'' என்றார் பெரியாரும். மா—வண்டு ''கொய்ம்மலர்க்கொன்றை மாலைக் குளிர்மதிக் கண்ணி'' என்ற சிந்தாமணிச் செய்யுளினுரையால் சிவனடையாளப்பூ கொன்றையென் பதை அறிக. காமம் மருவுமென்பது விகாரத்தால் காமருவெனவாகி காமர் எனக் கடைக்குறைந்து நின்றது. மருவும் ஈற்று மிசையுகரம் மெய்யொடுங் கெட்டு மவ்வீறு சந்தியாற் கெட்டது என்பது விதி. காமர் அக்கா என்பதற்கு அன்பர்கள்பால் விருப்ப மருவு கின்ற மூன்று கண்களையுடையவன் எனினும் அமையும். நல்லறிவு, ''ஆய்ந்தவுணர்வினுணர்வு, அறிவாலறிந்த மெய்யறிவாலறிந்து தெரி'' என்றார் பிறரும். அறிவா வது நல்லதனலனும் தீயதன் தீமையும் உள்ளவாறுணர் தல் என்பது. இது பூட்டுவிற் பொருள்கோள். (எஉ)

மலையா ரணங்கத்த நள்ளாறு காருயல் வார்கடல
மலையா ரணக்காஞய் மூர்நாகை கோளிலு
[வான்மதிற்க
மலையா ரணமழுத் தோற்காவ வென்பாரை
[வன்னமறுள்
மலையா ரணங்குசெய் யார்விழுத் தாரமுன் மானரகே.

(இ-ள்) மலையார் அணங்கு அத்த—மலையரையன் பெற்ற பெண் கூறனே, நள்ளாறு—திருநள்ளாற்றிலும், காருயல்—திருக்காருயலிலும், வார்கடல் அமலை ஆரணக்கான்-நீண்ட கடலொலிக்கும் திருமறைக்காட்டிலும், ஆய்மூர்—திருவாய்மூரிலும், நாகை-தென்னாகையிலும், கோளிலும்—திருக்கோளிலியிலும், வான்மதில் கமலையா— உயர்ந்த மதில் சூழ்ந்த திருவாரூரிலும் உள்ளவனே,

ரணமழுத் தோற்காவ — குருதி மழுப் படையையுடைய திருவானைக்காவரனே, என்பாரை—என்று கூறி வணங்கும் தொண்டர்களை, வல்—வலிய, நமன் ஆள்—இயமனுடைய ஏவலாளராய கூற்றுவன் முதலியோர், மலையார்—போரிடார், அணங்கு செய்யார்—துன்புறுத்தார், அழன் மா நரகு விழுத்தார்—தீப்போன்ற நரகில் தள்ளமாட்டார். (எ-று)

(வி-ரை) திரு நள்ளாறு முதலியவை சத்தவிடங்கத் தலங்கள், “சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு, காரார்மறைக்காடு காரோயல்-பேரான, ஒத்ததிரு வாய்மூர் உவந்த திருக்கோளிலி, சத்த விடங்கத் தலம்” என்ற வெண்பாவாலறிக. தருமராசனது ஆள் கூற்றமென்பது, “தருமராசற்கா வந்த, கூற்றினைக் குமைப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே” என்ற தேவாரத்தானுணர்க. (எ௩)

மானத் தனத்தன மத்துவா வாறுரு வான்கயற்கண்
மானத் தனத்தரி நீற்றெயிற் றோற்கா மதிச்சடைச்சே
மானத் தனத்த மழுவான் புகழ்கேட்கின் மாதர்புவி
மானத் தனத்தவா கோபமால் போநம் மனங்கரந்தே.

(இ-ள்) மால் நத்தன் அத்தன்—சங்கினையுடைய திருமாலுக்குத் தலைவனாயுள்ளவன், அம் அத்துவா ஆறுருவான்—அழகிய அத்துவாவுரு ஆறுடையவன், கயல் கண் மான் அத்தன்—சேற் கண்ணளாகிய உமையைப் கூறாகவுடையவன், அரி அத்து நீற்று எயில்-கதிரோனைக் கூடி நிற்குந் திருநீற்றுத் திருமதில் சூழ்ந்த, தோற்கா—திருவானைக்காவிலுள்ளவனும், மதிச்சடை—திங்களைச் சடையிலுடையவனும், சேமானத்தன்—காளையூர்தியையுடையவனுமாகிய, அத்தம் மழுவான்—கையில் மழுப் படையையுடையவனது, புகழ் கேட்கின்—சீர்த்தியைக் கேட்டால் (அக்கேள்விச் செல்வத்தால்), மாதர் புவி மானத்தனத்து அவா—பொன் நில மாதராலுண்டாகும் காமமும், கோபம்—வெகுளியும், மால்—மயக்கமும், நம்

மனம் காந்து போம்—நம்முளத்தைவிட்டு மறைந்து போம். (எ-று)

(வி-ரை) அத்துவா ஆறுரு, "மேவுரு வத்துவா வுருவாறும்" என்றார் பிறரும். அரி—கதிரோன். நீறு- "நீடலுறுந் தீவினையனைத்தும் நீற்றுவிடலால் நீறென்றும்," (பெருநர்ப்புராணம்) என்றதனாலறிக. மானத்தன மென்றது மாற்றுணிப்பொன்னை. மானம் என்றது அளவை. "மானக் கனகந்தரும்" என்றார் பெரியாரும். புகழ்கேட்கின் காமம் வெகுளி மயக்கமிவை மூன்றன் நாமங்கெடக்கெடும். எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானுமான்ற பெருமை தரும்." உபாய மூன்றனுளிதனால் கேள்வி கூறப்பட்டது. (எச)

கரவை யனத்தமுக் குற்றமறுத் தெற்குன் காறருவாய்
கரவை யனற்படை யாயண்ட மீன்றவை காத்தழிசங்
கரவை யனச்சுத னோடோ ருருமும்மைக் கத்தவஞ்சா
கரவை யனலம் பெறத்தொழு மானைக்காக்
[கண்மணியே.

(இ-ள்) கரம்—கையில், வை அனல் படையாய்—கூர்மையுள்ள மழுப் படையையுடையவனே, அண்டம் ஈன்று அவை காத்து அழி சங்கர-உலகங்களைப் படைத்துக் காத்தழித்து வரும் உருத்திரனே, ஐயன் அச்சுதனோடு—அயன் அரியுடன், ஓருருமும்மைகத்த-ஓருருவே மூவுருவமானவனே, அம் சாகர வையம்—அழகிய கடலார்ந்த உலகம், நலம் பெறத்தொழும்—நன்மையடைய வணங்கும், ஆனைக்கா கண்மணியே—திருவானைக்காவிலுள்ள கண்ணின்மணியாகவுள்ளவனே, கரவு-வஞ்சனையையும், ஐ அனத்தம்—செவி முதலிய பொறிகளால் வருங் கேட்டினையும், முக்குற்றம்—காம வெகுளி மயக்கங்களால் வரும் கெடுதல்களையும், அறுத்து—நீக்கி, எற்கு உன்கால் தருவாய்—எனக்கு உன் திருவடிகளை அளிப்பாயாக. (எ—று)

(வி-ரை) ஐ அனத்தம் முக்குற்றமறுப்பது, "அடல் வேண்டுமைந்தன் புலத்தை" "புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்" "காம வெகுளி மயக்கமிவை மூன்றன் நாமங்கெட" என்பவைகளாலுணர்க. என்று காத்தழித்தலைக் குறிப்பிட இறைவனோடு அயன் அச்சுதன் வடிவங்களும் கூறப்பட்டன. தோற்றமும் நிலையேறும் ஒடுக்கமும் நின்கண்ண வென்றவாறும். கரவை, ஐ சாரியை; ஐ யீற்றுத் தொழிற் பெயருமாம். உருமும்மை, "தெரிமாண்டமிழ் மும்மை" என்றமைபோல நின்றது. "ஒருருவே மூவுருவ மானநாளோ", "மூவருமொருவராகி நின்ற மூர்த்தியே", "கண்ணிற் கருமணியே" என்பனவும் கருத்தொப்புமையுடையன. வையம் தொழும் என்றது ஆகுபெயர். (எஙு)

கண்டக ராவி யடுமழுக் கைய கரியையினல்
கண்டக ராவிற நேமிதொட் டாற்கெட்டாக்
[காலமினார்
கண்டக ராவிரி காவி வயற்கரிக் காவபுவிக்
கண்டக ராவின லேற்கரு ணின்மெய்க் கருணையையே.

(இ-ள்) கண்டகர் ஆவி — கொடியவர் உயிரை, அடும் மழுக் கைய—மாய்க்கும் மழுவையுடைய கையையுடையவனே, கரியை இனல்கண்ட—யானையைத் துன்பஞ்செய்த, கரா இற—முதலையழிய, நேமி தொட்டாற்கு எட்டாக் கால-ஆழியை யேவிய திருமாலும் காண்பரிய திருவடிகளையுடையவனே, மினார்கண் தகரா விரி—பெண்களின் கண்கள் போல இரவில் மலரும், காவி—நீலோற்பலத்தையுடைய, வயல்—வயல் சூழ்ந்த, கரிக்காவ—திருவானைக்காவிலுள்ளவனே, புவிக்கண்—இவ்வுலகின்கண், தகரா இனலேற்கு — குறையாத துன்பத்தையுடைய எனக்கு, நின் மெய்க் கருணையை அருள்—நின் அருளை எனக்கு அளிப்பாயாக. (எ-று)

(வி-ரை) கண்டகர்—முட்போன்று பிறர்க்கின்னல் செய்பவர். தொட்டாற்கெட்டா உம்மை தொக்கது;

விளையாலனையும் பெயர். மின்னார்கண் தகாரவிரிகாவி என்றது "கண்ணொனக் கருவிளைமலர" என்றமை நோக்கி, "பொருளேயுவமஞ் செய்தனர் மொழியினும்" என்ற தொல்காப்பிய விதிப்படி பொருள் உவமஞ் செய்யப்பட்டது. (எசா)

கரும்பா னலங்கண்ட கற்பனை காலங் கடந்தவவிற்
கரும்பா னலமுற நீற்றுங் குறுக்கைய காயத்தர்நு
கரும்பா னலங்கச் சுவைக்குஞ்சொல் வாணிபொன்
[கண்ணவள்பாங்
கரும்பா னலத்திரு வானைக்கா வாவீ கதிப்பயனே.

(இ-ள்) கரும் பானல் அம் கண்ட-கருங் குவளையை யொத்த அழகிய கண்டத்தையுடையவனே, கற்பனை காலம் கடந்தவ—கற்பனையையுங் காலத்தையுங் கடந்தவனே, வில் கரும்பான் அலம் உற—கரும்பு வில்லையுடைய காமன் துன்புற, நீற்றுங்குறுக்கைய—எரிக்கும் குறுக்கை வீரட்டனரே, காயத்தர் நுகரும் பால்-தேவர் உண்ணும் அமிழ்தமும், நலங்கச் சுவைக்கும் சொல்-சுவை குறைய இனிக்கும் மொழியையுடைய, வாணி—கலைமகளையும், பொன்—அலைமகளையும், கண்ணவள்—இருகண்களாக வுடைய மலைமகளை, பாங்கர் உம்பா—பங்கிலுடைய தேவதேவனே, நலத்திருவானைக்காவா—நன்மை சான்ற திருவானைக்காவையுடையவனே, கதிப்பயன் ஈ—வீடாகிய பயனை எனக்கு ஈவாய். (எ-று)

(வி-ரை) பானல் அம்கண்ட என்றது "குவளைக் களத்தம்பலவன்" என்ற கோவையார் கருதி என்க. காலத்தோடு கற்பனை கடந்த என்பது முதியோர் கருத்தாகலான் கற்பனை காலங் கடந்தவ என்று சொல்லப்பட்டது. கலைமகள் திருமகளைக் கண்ணாக வுடையவள்; காஞ்சியிற் கோயில் கொண்ட பிராட்டியார். ஈயென்பது இழிந்தோன் கூற்று. (எஎ)

அனக னகநும் மலவன் குரம்பை யறக்கயிலா
யனக னகண்ட முணர்ந்தார்க் குணர்வரி யாவருமெய்
யனக னகநினைந் தம்புவி யீர்தொழு மாழிவளா
யனக னகமதில் சூழ்கரிக் காவெம தப்பனையே.

(இ-ள்) அனகன்—எப்பொருட்கு மிறைவனுயுள்ள வனும், கயிலாய நகன்—கைலாய மலையையுடையவனும், அகண்டம் உணர்ந்தார்க்கு—எல்லாமாகிய தன்னை ஒருகால் உணர்ந்தவர்கட்கு, உணர்வு அரியா—பின்னுணர்தற்குக் கருவியாகிய சித்த விருத்தியு மொடுங்குதலான் மீட்டுணர் வரியாத, அரு மெய்யன்—உருவில்லா உடலையுடையவனும் ஆகிய, ஆழி வளா அன—சக்கரவாளகிரிக்கு ஒப்பான, கனக மதில் சூழ்—பொன் மதிலாகிய திரு நீற்றுத் திரு மதில் சூழ்ந்த, கரிக்கா எமது அப்பனை—திருவானைக்காவினுள்ள எமது ஐயனாகிய சம்பு நாயகனை, அம்புவியீர்—அழகிய உலகிலுள்ளீரே, நும் அகம் மலம்—உம்முடைய பாவமும் மலமும் நிறைந்த, வன் குரம்பை அற—வலிய யாக்கையாகிய கூடு நீங்க, அகம் நக நினைந்து தொழும்—மனமலர இடையறாது எண்ணி வணங்குங்கள். (எ-று)

(வி-ரை) உணர்ந்தோர்க் குணர் வரியானென்பது தவத்தானும் நினைவானும் பொருள்களனைத்து முணர்ந்தவர்க்கும் உணர்வரியானெனினு மமையும். இப்பொருட்கு உணர்ந்தார்க்கும் என உம்மை தந்துரைக்கப்பட்டது. அகம் மலம் வன்குரம்பை யென்பது "கால் கொடுத்தெலும்பு மூட்டிக் கவினரம் பாக்கையாத்துத் தோலுடுத் துதிர மட்டித் தொடு மயிர் வேய்ந்த கூரை" என்பதனாலறியப்படும். பிறப்பற முயலுவோர் யாக்கையை விடுவரென்பது "பிறப்பறுக்க லுற்றார்க் குடம்புமிகை," "ஊனைக்காவல் கைவிட்டுன்னை யுகந்தார் உணர்வரே" என்பவைகளாலறியப்படும். அகம் நக நினைதல்—மனமலர இடைவிடாது நினைந்து அந்தக் கரணம் ஒருவகைப்பட்டுத் தாரணைக் கணிற்றல். "கெக்கு

நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்'' என்றார் பெரியாரும். (எஅ)

பனையன னற்கர வானை சிலம்பி பகல்விதுக்கும்
பனையன னந்தன் கவுதமன் சம்பு பரசரன்மெய்ப்
பனையன னம்மை யழற்கரு டோற்காப் பரமகரும்
பனையன னந்த விழித்தோய் தலைவைப்பை
[பைங்கழலே.

(இ-ள்) பனையன நற்கர ஆனை—பனை போன்ற கையையுடையயானைக்கும், சிலம்பி-சிலம்பிப்பூச்சிக்கும், பகல்—சூரியனுக்கும், விது—சந்திரனுக்கும், கும்பன்—அகத்தியனுக்கும், ஐயன்—பிரமனுக்கும், அனந்தன்—திருமாலுக்கும், கவுதமன் — கவுதமனுக்கும், சம்பு—சம்பு முனிக்கும், பரசரன்—பரசர முனிக்கும், மெய் பல் நயனன்—இந்திரனுக்கும், அம்மை—அகிலாண்ட நாயகிக்கும், அழல்—தீக்கடவுளுக்கும், அருள்—அருள் செய்த, தோற்காப் பரம—திருவானைக்காவிலுள்ள இறைவனே, கரும்பனை அனல் நந்த விழித்தோய்—காமன் தீயினால் அழிய நெற்றிக்கண்ணைத் திறந்தோய், பைங் கழல் தலை வைப்பை—நின்னுடைய பசிய திருவடிகளை என் முடியின்கண் வைப்பாயாக. (எ-று)

(வி-ரை) பனையன நற்கர ஆனை ''பனைக்கைமும் மத வேழ முரித்தவன்'', 'பனைக்கைம்மா' என்பன அப் பொருள. பசுமை நிறத்தில் சென்றதன்று, இளமையிற் சென்றது. ஆனை முதல் அழல் ஈறாக உள்ளனவற்றிற்கு அருளியமை கோயில் வரலாற்றானறிக. (எகூ)

கழலந் தரணிபொன் பெண்ணாசை விட்டுக்
[கதிதருநின்
கழலந் தரவந்து யாம்வணங் கோஞ்செய்
[கருணையைப்பு
கழலந் தரம்பெற லெங்ஙன் விடுதளக் கன்னியர்கைக்
கழலந் தரமட வார்கைப் புகுங்கரிக் காப்பரனே.

(இ-ள்) விடு தளக் கன்னியர் கை கழல்—வான்றோய் மாடத்துக் குறுந்தொடி மகளிர் கைபுனைந்தாடுங் கழங்கு, அந்தர மடவார் கைபுகும்—விண்ணுலக மடந்தையர் கையிற் சென்று சேரும், கரிக்காப்பரனே—திருவானைக்காப் பதியையுடையவனே, தரணி பொன் பெண் ஆசை விட்டுக் கழலம்—பொன்னில மாதராசையை விட்டு நீங்கமாட்டேம், கதிதரும் நின் கழல்—தொண்டர்களுக்கு வீடளிக்குங்கால் நின்னினுஞ் சிறந்த நின்றாளிணையை, அந்தரம் வந்து—நின் கோயிலுக்கு வந்து, யாம் வணங்கோம்—யாம் வணங்கமாட்டேம், செய் கருணையைப் புகழலம்—அன்பர்களுக்கு நீ செய் அருளைப் புகழ மாட்டோம், தாம் பெறல் எங்ஙன்—அங்ஙனமாயின் மேலான வழியையடையும் வண்ணம் எவ்வாறு? (எ-று)

(வி-ரை) கழல்—ஆகுபெயர். அந்தரம்—கோயில். "அந்தரம் ஏகந் தனியாகாயம்" என்பது பிங்கலந்தை. கழல்—கழங்கு. எங்ஙன் எனும் வினா எதிர் மறைக் கணின்றது. (அ0)

பரனு கமலவெண் மின்னுன் வலமிடப் பாதிபொன்னம்
பரனுக மன்கரிக் காவக தென்வட பாடைக்குந்தா
பரனுக மன்பாற் சிலம்பிபூ சித்தகம் பாவகன்சம்
பரனுக மண்ணு னவவருள் முத்திப் பழம்பதியே.

(இ-ள்) பரம் நா கமல வெண்மின்னுன்—சிறந்த நாவின்கண் கலைமகளையுடைய பிரமனை, வலம்-வலத்தும், பொன் அம்பரன்-பொற்பட்டாடையையுடைய திருமாலை, இடப்பாதி ஆக—இடத்துமாக, மன் கரிக்காவக—நிலைபெற்ற திருவானைக்காவையுடையவனே, தென் வட பாடைக்கும்—தமிழுக்கும் ஆரியத்துக்கும், தாபர—பற்றுக் கோடாயுள்ளவனே, நாகம் சிலம்பி அன்பாற் பூசித்த—யானையும் சிலம்பியும் அன்புடன் வழிபாடு செய்த, கம்பாவகன் சம்பரம் நாகம் மண்ணுனவ-காற்றும்

தீயும் நீரும் வானும் மண்ணுமாகியவனே, முத்திப் பழம்பதி அருள்—எனக்கு முத்தியுலகையருள்வாயாக. (எ-று)

(வி-ரை) தென் வடபாடைக்குந்தாபரனாகியது, 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாந் தொடர்புடைய தென்மொழியைக் குடமுனிக்கு வகுத்து' என்றார் பிறரும். இறைவன் ஐம்பெரும் பூதமாகியது "ஒன்றினிற் போற்றிய விசும்பு நீயே, இரண்டினுணரும் வளியு நீயே, மூன்றினுணருந் தீயு நீயே, நான்கினுணரும் நீரு நீயே, ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே," "கத வாயு நீரங்கி மண்காய மான கடவுள்" என வருபவைகளாலுணர்க. கம்-காற்று. சம்பரம்—நீர். "நிலந் தீ நீர் வளி விசும்போடைந்தும்" (தொல்காப்) எல்லாம் இறையருளால் எனல் போல், குடமுனியும், பாணினியும் முறையே தமிழும் ஆரியமும் கற்று நூல் வகுத்ததை இறையுணர்த்தியது என்று கூறியுள்ளனர். (அக)

பழனமை யாறுசோற் றுத்துறை வேதிப் பதிதுருத்தி
பழனமை யார்பொழிற் கண்டிநெய்த் தானப் [பரன்சம்புவெம்
பழனமை யானைக்கா முன்னேற் கடிமைப் [படுங்குடியாம்
பழனமை யாளாது கைவிடான் வைப்பன் [பதத்தருகே.

(இ-ள்) பழனம்—திருப்பழனத்தையும், ஐயாறு—திருவையாற்றையும், சோற்றுத் துறை-திருச்சோற்றுத் துறையையும், வேதிப்பதி — திருவேதி குடியையும், துருத்தி—திருப்பூந்துருத்தியையும், பழனம் மையார் பொழில்—வயலும் மேகமடர்ந்த சோலையும் சூழ்ந்த, கண்டி—திருக்கண்டியூரையும், நெய்த்தானப் பரன்—திருநெய்த்தானத்தையுமிடமாகவுடைய இறைவன்,

வெம் பழன் அமை சம்பு ஆனைக்கா முன்னேற்கு—விருப்பமுள்ள பழமமைந்த வெண்ணாவலையுடைய திருவானைக்காப் பழம் பொருளுக்கு, அடிமைப்படும் பழங்குடியாம் நமை—தொன்று தொட்டு அடிமைப்பட்டுவரும் பழங்குடியாகிய நம்மை, ஆளாது கைவிடான்—ஆண்டருளாது கை விடமாட்டான், பதத்து அருகு வைப்பன்—திருவடி நீழலாகிய பதத்தில் இருத்துவன். (எ-று)

(வி-ரை) "சோதியே நையாறு பழனந் திருச்சோற்றுத் துறையினொடு வேதிகுடியும், சொல்லரிய கண்டியூர் திருத்தினெய்த் தானமெழு சூழல்வா ழரன்" என்றார் பிறரும். இவை யேழும் ஏழிடங்கள். சம்பு பழம் வெம் அமை ஆனைக்கா முன்னோன்-நாவற் பழத்தின்கண் விருப்பமமைந்த ஆனைக்காவையுடையவன் எனினுமமையும், நாவற்கனி இறைவனுண்டமை கோயில் வரலாற்றிற் காண்க. பழனம்—ஓரூர். பழனம்-வயல்.

(அஉ)

அருந்த வருவிடங் கொண்டவ தோற்கா வரியரியு
யருந்த வருக்கத்த வோம்ந மசிவய வாய்கருவ
யருந்த வருந்தொழி லைந்துருவ
அருந்த வருள்ளோம் முகவைந் தலத்தவை யக்கரனே.

(இ-ள்) அருந்த வரும் விடம் கொண்டவ-திருமால் முதலியோர் உயிருண்ண வந்த நஞ்சை உண்டு கண்டமட்டாக்கியவனே, தோற்கா—திருவானைக்காவினுள்ள, அரி அரி உயருந் தவர் உக்கத்த—பொன்மலையையும் திருமாலையும் வில்லாகவும் ஏறாகவும் உடையவனே, ஓம் நமசிவய—ஐந்தெழுத்துப் பொருளாயுள்ளவனே, ஐந்தொழில்—ஐந்து தொழில்களையுடைய, ஐந்துருவ—ஐந்து வடிவங்களையுடையவனே, அருந்தவர் உள்—அரிய தவமுடையோர் நினைக்கும், ஐம்முக—ஐந்து முகங்களையுடையவனே, ஐந்தலத்த—ஐந்து பருப்பொருள்களின் இடத்தைக் கோயிலாகவுடையவனே, ஐ அக்கர—ஐந்தெழுத்தையுடையவனே, ஆய்கரு அயர் உந்த வருந்து

எமை ஆண்டருள்—தாய்க்கருக்குழியில் நான்முகன் தள்ள பிறவிக்கடலில் மூழ்கிவருந்தும் எம்மை அடிமை கொண்டருள்வாயாக. (எ-று)

(வி-ரை) அருந்த வருவிடம்—அருந்தக் கொண்டவ னெனினுமமையும். அரி-பொன். உக்கம்-ஏறு. அரி யரி தவர் உக்கம் என்பது நிரனிறை. அயர் எனும் ரகரவீறு எதுகை நோக்கி வந்தது. இழிவின்கண் வந்ததெனின் "காமரை வென்ற கண்ணோன்" என்றமைபோல நின்றது. ஐந்தொழில்—படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல் என்பன. ஐந்துருவம்—நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்பன. ஐம்முகம்—"தலைவனாம் முகங்க ளாவ சத்தியோ, சாதம் வாமம், புலனுறு மகோர மேதற் புருடமீசான மாகும்" என்றதனுனறிக. ஐந்தலம்-திருவானைக் காமுதலிய ஐந்து பருப்பொருள்களின் இடங்கள். ஐயக்கரம்-நமசிவாய எனும் ஐந்தெழுத்துக்கள். ஐந்தலம்—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், முதலான ஐந்திடங்களையும் சொல்லுவது மொன்று. ஐந்தொழில், ஐந்துருவம், ஐம்முகம், ஐந்தலம், ஐயக்கரம், என்ற சொல்லமைதி காண்க. (அ௩)

கரவாயு மாதேவி வைத்துக் கருவுயிர் காரிகைபாங்
கரவாயு மான சிராமலை யான்கரிக் காவிறைநு
கரவாயு மாலத்தன் றன்கழல் கூப்பக் கரையவெற்குக்
கரவாயு மாயிரன் தந்திலன் கஞ்சங் கலந்தவனே.

(இ-ள்) கரவாய் உமாதேவி வைத்து—மறைவாக உமையைத் தன்பால்கொண்டு, கரு உயிர் காரிகை பாங்கர்—கருவுயிர்ப் பின்னலுறும் செட்டிப்பெண் பக்கலில், அ ஆயும் ஆன சிராமலையான்—அவள் தாய் போல வந்திருந்து பணிவிடை செய்த திரிசிரபுர இறைவன், கரிக்கா இறை—திருவானைக்காத் தலைவன், நுகர

வாயும் ஆலத்தன்-உண்ணப் பொருந்திய நஞ்சையுடைய வன், தன் கழல் கூப்ப—அவனுடைய திருவடிகளைக் கைகுவித்துத் தொழவும், கரைய—அவன் புகழ் சொல்ல வும், எற்கு—எனக்கு, கஞ்சம் கலந்தவன்—தாமரையி லுள்ள நான்முகன், கரம் வாயும் ஆயிரம் தந்திலன்—கைகளும் வாயும் ஆயிரம் படைத்திலனே. (எ-று)

(வி-ரை) கரவாய்-கரவாக எனத்திரிக்க. ஆயுமான வர் சிரபுரத்திலுள்ள இறைவர்; அவர் தாய்போல வந்த வரலாற்றினை செவ்வந்திப் புராணத்தாலறிக. "கரங்கூப் பிக் கண் குளிரக் கண்டு" என்றும், 'அறங்கரைநா' "அறங்கரைந்து வயங்கியநா" என்றும், "நாவாயிர மிலே னேத்துவதெவன்" (மணிமேகலை) என்றும் வரு வனவற்றால் முறையே கூப்ப, கரைய, ஆயிரந்தந்திலன் என்பன விளக்கமுறும். கரம் வாயும் என்பது அறம் பொருளின்பம் வீடும் பயக்கும் என்பதுபோல் நின்றது. தாமரைப்பூ, படைப்பிற்கு முதலாக வந்து மலருமென் பது வேதக் கருத்தாகலின் படைத்தற்றொழிலையுடைய நான்முனைக் கஞ்சங் கலந்தவன் என்றார். "நீனிறவுருவி னெடியோன் கொப்பூழ், நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த் தாமரை" என்பதுமொன்று. (அச)

கலந்தவ ராக்களம் பெற்றகி லம்பெறுங் கன்னியிடங்
கலந்தவ ராண்டவ ரெங்குடி யெல்லாங் கனகவடுக்
கலந்தவ ராங்கரர் கும்பகன் னச்சாயை கல்லியடைக்
கலந்தவ ராமற் களித்த விடங்கரிக் காவகமே.

(இ-ள்) கலம் தவரா களம் பெற்று—மங்கல நாண் நீங்காக் கண்டத்தைப் பெற்று, அகிலம் பெறும்-உலகங் களைப் பெறும், கன்னி—கன்னித் தன்மை நீங்கா உமை யம்மையை, இடம் கலந்தவர்—இடப்பக்கத்துக் கொண் டவர், எம் குடியெல்லாம் ஆண்டவர்—தொன்றுதொட் டுத் தலைமுறையாக எம் குடியை ஆண்டருளியவர், கனக அடுக்கல் அம்தவர் ஆம் கார்—பொன் மலையை அழகிய

வில்லாக வளைத்த கையையுடையவர், தவ இராமற்கு—தன்னை நோக்கித் தவம்புரிந்த இராமருக்கு, கும்பகன்னச் சாயை கல்லி-கும்பகன்னப் பிரமகத்தியை நீக்கி, அடைக்கலம் அளித்த இடம் கரிக்காவகம்—புகலிடம் அளித்த இடம் அவருடைய திருவானைக்காப்பதியேயாம். (எ-று)

(வி-ரை) கலந்தவராக்களம் பெற்று என்றது. இறைவன், பிறவாயாக்கைப் பெரியோனென்பதுணர்த்தற்கு என்க. ஏனைத் தேவரிறக்க இவ்வொருவனே இறவாது நிற்கின்றானென்பதனை "நூறுகோடி பிரமர்கள்....ஈறிலாதவனீசனொருவனே" என்ற தேவாரத்தானுணர்க. குடி ஆகு பெயர். "என்குடி முழுதாண்டு" என்றார் பெரியாரும். பிரமகத்தி நீக்கியது கோயில் வரலாற்றாலறிக. (அ௫)

கானக மஞ்சரிக் காத்திரு வானைக்காக் காசிமறைக்
கானக மஞ்சடர் மெய்யிலங் கேசனைக் காய்ந்தடர்த்த
கானக மஞ்சற்குக் காணு வளவியைக் காட்டிநின்று
கானக மஞ்சக் குனித்தோய் மனுதி கடந்தவனே.

(இ-ள்) கான் அகம் மஞ்சரிக்கா-மணத்தையுள்ளே கொண்ட அரும்பும் பூங்கொத்துக்களையுடைய சோலைகள் சூழ்ந்த, திருவானைக்கா—திருவானைக்காவினையும், காசி—காசிப் பதியையும், மறைக்கானக—திருமறைக்காட்டினையுமுடையவனே, மஞ்சு அடர் மெய் இலங்கேசனை—மேகம் போன்ற கருநிறங்கொண்ட உடலையுடைய இராவணனை, காய்ந்து அடர்த்த—வெகுண்டு கயிலையின் கீழ்தள்ளி வருத்திய, கால் நக—காற்பெருவிரலையுடையவனே, மனுதி கடந்தவனே—மனம் முதலிய கருவிகளுக்கு மெட்டாதவனே, நகம் அஞ்ச குனித்தோய்—மேரு அஞ்ச வில்லாக வளைத்தவனே, மஞ்சற்கு—உன்னைமந்தணுகிய எனக்கு, காணு அளவியைக் காட்டிநின்று-யாவருங் காணுதற்கரிய நின் அளவை என் முன் காட்டிநின்று, கா—என்னைக் காப்பாற்றுவாயாக. (எ-று)

(வி-ரை) மஞ்சரி-பூங்கொத்து. மைந்தன் மஞ்சன் என்ருயிற்று. துறவு துறவியென நின்ருற்போல அளவு அளவியென நின்றது. காட்டி என்பதனுரை மணங் கமழ் தெய்வத் திளநலங் காட்டி'' என்ற முருகாற்றுப் படையானும், இந்நூல் 63-ம் கவி விசேடவுரையானும் அறியப்படும். மருதி கடத்தல்—வாய்மொழியான் மெய் யான் மனத்தானறிவிறத்தல். (அசு)

கடனஞ் சலம்புங் கரிவழு வூர்ப்பதி காய்கரிக்காக்
கடனஞ் சலர்களத் தெம்பர மாவம்பைக் காமனென்ம
கடனஞ் சலமிக வெய்துன் படவந்து காப்பதுநின்
கடனஞ் சலரூர டச்சிலை வாங்குங் கரத்தவனே.

(இ-ள்) கடம் நஞ்சு அலம்பும்—மதநீர் நைந்து ஒழு காநிற்கும், கரி—யானையை, வழுவூர்ப்பதி-திருவழுவூரில், காய்—சினந்து தோலையுரித்தருளிய, கரிக்கா—திரு வானைக்காவில் வீற்றிருக்கும், கடல் நஞ்சு அலர்களத்து எம்பர—திருப்பாற்கடலிற்ருேன்றிய நஞ்சமலர்ந்த கண் டத்தையுடைய எமது பரனே, அஞ்சலர் ஊர் அட— பகைவருடைய திரிபுரங்களையழிக்க, சிலை வாங்கும் கரத் தவனே—மலையை வில்லாகவளைத்த கைகளையுடையவனே, மா அம்பை—மாம்பூவாகிய கணையை, காமன்-மன்மதன் என் மகள் தனம்-எனது மகள் கொங்கையில், சலம்மிக எய்து—சினம் மிகுதியாக எய்தமையால் உண்டாகும், துன்பு அட-துன்பம் நீங்க, வந்து காப்பது நின் கடன். வந்து காப்பது நினது கடமையாகும். (எ-று)

(வி-ரை) வழுவூர்ப்பதி அட்டவீரட்டங்களுளொன்று. மா பொருளாகு பெயர். "நீள் சூதங் கொங்கைதனில்" என்பதனுலறிக. சலம்—தணியாச்சினம். மலை வளைத் தல் "இமய வில் வாங்கிய ஈர்ஞ்சடையந்தணன்" (கலித் தொகை) என்பதனுல் விளங்கும். தோழிகூற்று. (அஎ)

கரநக ராக்கங் கணத்தர் வெறுப்பன்பில் [கன்மத்தர் துங்
கரநக ராரைந் தொழிற்குவே ராந்தொண்டு [காணுருவார்
கரநக ராத்திரு நீலகண் டத்தர்தோற் காமதிற்சி
கரநக ரார்கழல் நீங்கா கணமெங் கருத்தைவிட்டே.

(இ-ள்) கரம் நகு அரா கங்கணத்தர்—கைகளில் விளங்கும் பாம்பைக் கங்கணமாக வுடையவர், வெறுப்பு அன்பில் கன்மத்தர்—வெறுப்பு விருப்பில்லாத் தொழிலை யுடையவர், துங்கர்—மாயை கலப்பில்லாதவர், அநகர்—முழுமுதற் கடவுளுண்மையானவர், ஆர் ஐந்தொழிற்கு வேராம்—பொருந்திய ஐந்து தொழில்களுக்கும் மூல மாகிய, தொண்டுகாண் உருவார்—ஒன்பதென்று காணும் உருவத்தையுடையவர், கரம் நகரா திருநீல கண்டத்தர்—நஞ்சு நீங்காத அழகிய நீலகண்டத்தையுடையவர், சிகர மதில் தோற்கா நகரார்—உயர்ந்த மதில் சூழ்ந்த திரு வானைக்கா நகரை யுடையவர், கழல்—அவருடைய திருவடிகள், கணம் எம் கருத்தைவிட்டு நீங்கா—சிறு பொழுதேனும் எம்முளத்தை விட்டு அகலா. (எ-று)

(வி-ரை) வெறுப்பன்பிலாமை, வேண்டுதல் வேண்டாமையிலான் "வேண்டாமை வேண்டுவது மில்லான் கண்டீர்" என்ற ஆன்றோர் கருத்தானுணர்க. ஐந் தொழிற்கு வேராந்தொண்டு காண் உருவார் என்பது "சாலவைந் தொழிற்கு மூலமாகிய ஒன்பானுருவும்" என்பதனால் விளங்கும். தொண்டு—ஒன்பது "தொடித் திரிவன்ன தொண்டு படு திவவு" என்ற மலைபடு கடாத் தாலறிக. கரம்—நஞ்சு. கணம் என்பதற்கு இந்நூல் உகூ-ம் கவி சிறப்புரையைப் பார்க்க. நகு அரா-நகரா என்றது உகரசு என்றமைபோல் நின்றது. சிகரமதில் தோற்கா நகரார் என மாற்றியுரைக்கவும். கழல் கணம் எம் கருத்தைவிட்டு நீங்காவென்பது புறத்துப் போகாது

மடக்கி ஒரு தலைப்பட்டு அவர் கழலையே நோக்கற்பால தாம். இதற்கு உருவ அகவழிபாடு என்று பெயர். (அஅ)

கரும்பல ரானைத் தெறுமோ ரளவிலான் காவிரிப்பாங்
கரும்பல ராமத்த னன்பர்க்கு முத்தி கணைகடனு
கரும்பல ராமற் கருள்சிவன் முல்லைக் கலிகையைநி
கரும்பல ராவல்குல் பாக னிருதாட் கமலங்களே.

(இ-ள்) கரும்பு அலரானைத் தெறும்—மன்மதனை யும் நான்முகனையும் உடலையுந் தலையையும் செற்ற, ஓர் அளவிலான்—ஓர் அளவைக்குமெட்டாதவன், காவிரிப் பாங்கர்-காவிரிப் பக்கத்திலுள்ள, உம்பல் அராமத்தன்-திருவானைக்காவையுடையவன், கணைகடல் நுகரும் பல ராமற்கு-அம்பினால் கடல் நீரைப்பருகச் செய்த வன்மை யுடைய இராமனுக்கு, அருள் சிவன்—குற்றத்தை நீக்கி அருள் செய்தவன், முல்லைக்கலிகையை நிகரும்பல்—முல்லையரும்பை யொத்த பற்களும், அரா அல்குல்—பாம் பின் படத்தைப் போன்ற அல்குலினையுமுடைய உமையம் மையை, பாகன்—ஒரு கூற்றிலுடையவன், அன்பர்க்கு—அவன் தொண்டர்களுக்கு, முத்தி-வீடாவது, இருதாள் கமலங்கள்—அவனது இரண்டு திருவடித்தாமரைகளே யாகும். (எ-று)

(வி-ரை) கரும்பையும் அலரையும் மன்மதனுக்கே ஏற்றினுமமையும். ஓர் அளவு என்பது காட்சி முதலான அளவைகள். உம்பல்-யானை, அராமம்-கா. கணைகடல் நுகர்தல் இராமாயணத்துட் காண்க. கலிகை-அரும்பு, கலித்தல்-முளைத்துத்தோன்றுதல் என்பது "பாசடைக் கலித்த" என்ற நற்றிணையடியாலறிக. பல்லுக்கு முல்லை "முல்லையெயிறிணை" (கார் நாற்பது) என்பதனாலறிக. தாள் அன்பர்க்கு முத்தியென்பது "பத்தர்க்கு வீடு, மரு தூரன் கழலிணையே", "நின்னிற் சிறந்த நின்றாளிணை யவை", (பரிபாடல்), "சேவடி படருஞ் செம்மலுள்ள மொடு" (முருகாறு), என்பனவற்றாலறிக. அராவல்குல்-உவமைத்தொகை. (அகூ)

கமனஞ் சுகந்தவ னாருயிர்க் காவைங் கருமஞ்செய்துங்
கமனஞ் சுகத்தரா மத்தன் றவர்மாதர் கற்படுஞ்சங்
கமனஞ் சுகந்தப் பொழிற்கரிக் காவன் கழலுனியா
கமனஞ் சுகம்விட்டுச் செய்தாட் படுவீர் கடுந்தவமே.

(இ-ள்) கமம் நஞ்சு உகந்தவன்—நிறைந்த நஞ்சினை விரும்பியவன், ஆருயிர்க்கா ஐங்கருமம் செய்துங்கமன்—உலகிலுள்ள உயிர்களுக்காக ஐந்து தொழில்களைச் செய்யும் உயர்ச்சியுள்ளவன், அஞ்சுகத்தராம் அத்தன்-ஐந்து கருத்தாவாயுள்ள இறைவன், தவர் மாதர் கற்பு அடும் சங்கமன்-தாருகாவனத்து முனிவர் மனைவிகளின் கற்பினையழிக்கும் இரந்துண்போனாயுள்ள இறைவன், அம் சுகந்தபொழிற்கரிக்காவன்-அழகும் மணமுமுள்ள சோலைகள் சூழ்ந்த திருவானைக்காவையுடையவன், கழல் உனி-அவன் திருவடிகளை நினைந்து, ஆகம் மனம்-உடலானும், உள்ளத்தானும் வரும், சுகம் விட்டு-நலங்களை வெறுத்து, கடும் தவம் செய்து—அரிய தவத்தைச் செய்து, ஆட்படுவீர்—மக்களே அக்கடவுளுக்கு அடிமைப் படுவீர்களாக. (எ-று)

(வி-ரை) கமம்—நிறைவு, "கமம் நிறைந்தியலும்" (தொல்கா) "கமஞ்சூன் மாமழை" என்பது அகம். ஆருயிர்க்கா என்பது இடைநிலை விளக்கு. ஐங்கருமமியற்றுதல், 'ஆருயிர்க்கிரங்கியன்றோ ஐந்தொழிலாற்றி' என்ற கந்த புராணத்தாலறிக. ஆகம்-உருவுடல், பொறிகாற்று காமச்செயல்களுடன் கூடிய மனம் அருவுடல். ஆகம் மனம் ஒன்றாகக்காணப்படினும், வேறுவேறு கருதிப்பிரித்துக் கூறினர். "ஒற்றுமை நயத்தினொன்றெனத் தோன்றினும் வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர்" என்பதனாலறிக. நீர்பலகான், மூழ்கி நிலத்தசையித் தோலுடையாச், சோர்சடை தாழச் சுடரோம்பி, யூரடையார், கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல், வானகத்துய்க்கும் வழி" என்பது தவம். தவத்தின் பெருமை "வையமுந் தவமுந் தூக்கிற்றவத்துக், கைய

வியனைத்து மாற்றாராகலின்'' (புறம்) என்பதனாலறிக. ஆகம் மனம் சுகம் விடுதல், கோடைக்கண் வெயிலினும் ஐந்தீ நடுவினும், மாரிக்கண் பனியினும் நீர் நிலையினும் நிற்றலேயாம். ''தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்'' வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவமீண்டு முயலப்படும்.'' எனவருவனவற்றாலுணர்க. இவ்வந்தாதி 43-ம் கவி சிறப்புரையைப் பார்க்க. ஆகம் மனம் பருவுடலும், நுண்ணுடலுமாகும். (கூ0)

தவள வனிதை கடையச் சசிபாவைத் தாமரைப்போ
தவள வனிமகள் கற்பியற் சாலினி தாழுமலர்ந்
தவள வனிச்ச வடிபங்க பொன்னிச் சலத்துடன்வந்
தவள வனித்திலம் பூண்கரிக் காவவீ தாடினமே.

(இ-ள்) தவள வனிதை—வெண்ணிறமுள்ள கலைமகளும், கடையம் சசி-கடையமென்னுங் கூத்தையுடைய அயிராணியும், பாவை தாமரைப்போதவள்—பாவையென்னுங் கூத்தினையுடைய தாமரையிலுள்ள திருமகளும், அவனிமகள்—பூமிதேவியும், கற்பியற்சாலினி-கற்பினையுடைய அருந்ததியும், தாழும்—வணங்கும், மலர்ந்த வளம் அனிச்சம்-மலர்ந்த வளமுடைய அனிச்சப் பூவையொத்த, அடி—அடிகளையுடைய, பங்க—உமைகூறனே, பொன்னி சலத்துடன் வந்த—காவிரி நீருடன் வந்த, வளவன் நித்தலம் பூண் கரிக்காவ-சோழனுடைய முத்தாரத்தை அணிந்த திருவானைக்கா விறைவனே, தாள் தினம் ஈ—நின் றிருவடிகளை நாளும் யான் வணங்க அளிப்பாயாக. (எ-று)

(வி-ரை) கடையம்-வாணபுரத்து வடக்குவாயிலின் கண் உளதாகிய வயலின்கண் நின்று கடைசியர் வடிவு கொண்டு இந்திராணி ஆடிய ஆடல். பாவை செருக் கோலத்தோடு அவுணர் மோகித்து விழக் கொல்லிப் பாவை வடிவாய்த் திருமகளாடிய ஆடல். அறிவு, இன்பப்பேறு, செல்வம், பொறுமை, கற்பு இவைகளின் மேன்மைக்கு வாணி முதலியோர் வணங்குவரென்ப. அனிச்சம்

ஆகுபெயர். அனிச்சப்பூ அடிமென்மைக்குவமை. கற்பிற்கு அருந்ததி "அருந்ததியனைய கற்பின்" (ஐங்குறுநூறு) "கடீவுளொருமீன் சாலினியொழிய" (பரிபாடல்) என்பனவற்றாலறிக. சோழன் முத்து மாலையணிந்தது தலபுராணத்துட் காண்க. இறையாதல் நோக்கி ஈ என இழிந்தோன் கூற்றுப்படமொழியப் பட்டது. தினம் தாள் ஈதல்-நித்தலும் துதிப்பாரகத்தினில் நிற்கும் நிர்மலன் என்பதனாலறிக. (௯௧)

தினகர னங்கி மதிவிழி யெம்மான் சிறந்தவெழுத்
தினகர னங்கிரி வின்மாற் கணைபுரந் தீயநின்றேந்
தினகர னங்கிளர் வேணிக் கிடமுருச் செப்பினெய்தத்
தினகர னங்கிங் கெனுதறி வாலறி சேதனமே.

(இ-ள்) தினகரன் அங்கி மதிவிழியெம்மான்—ஞாயிறு திங்கள் தீயென மூன்றும் முக்கண்களாகவுள்ள எமது கடவுள், சிறந்த எழுத்தின் அகரன்—எழுத்துக்களுள் சிறப்புறும் அகரத்தைப் போன்றவன், அம்கிரி வில்-அழகியமலையை வில்லாகவும், மால் கணை-திருமாலை அம்பாகவும், புரம் தீய நின்று ஏந்திய கரன்—முப்புரங்களும் அழிய நிலைபெற ஏந்திய திருக்கைகளையுடையவன், அம்கிளர்வேணிக்கு—கங்கையை ஏற்ற சடையையுடைய இறைவற்கு, இடம் செப்பின்—இருப்பிடம் கூறின், எய்து அத்தி நகரன்—யாவரும் விரும்பியடையும் திருவானைக்காவாகும், உருச்செப்பின்—அவனது வடிவத்தைச் சொல்லின், அங்கு இங்கு எனாது—அங்குள்ள உரு இங்குள்ள உரு என்று பிதற்றாது, அறிவால் அறிசேதனம்—மெய்யறிவால் அறியும் அறிவே அவன் உருவமாம். (எ-று)

(வி-ரை) தினகரன் முதலியோர் விழியாயினமை "இமையாத முக்கண் மூவரிற் பெற்றவன்", புரந்தீய்த்தது "எண்ணார் மும்மதிலெய்த இமையா முக்கட் பிஞ்ஞகனே" என்பனவற்றாலறிக. எழுத்தின் என்பதில் இன் சாரியை வேண்டாவழி வந்தது. எழுத்துக்களுள்

சிறந்த அகரன் என்பது, அகரம் விகாரத்தானன்றி இயல்பாகத் தோன்றி ஏனையெழுத்துக்களுந் தோன்றக் காரணமாக இருத்தலின் எழுத்துக்களுள் சிறந்து முதன்மையாளுற்போல, இறைவன் விகாரமின்றி இயற்கையாய் நின்று உலகந்தோன்றக் காரணனாக இருத்தலின் முதன்மை ஆயினன் என்க. " அகரவுயிர் போலறிவாகி யெங்கும் நிகரிலிறை நிற்கும் " அகர முதலினெழுத்தாகி நின்றாய் " அகர முதல....முதற்றே யுலகு " என்பன ஆன்றோரின் அறவுரைகள். அத்திநகரன்-உருவம். உருச்சேதனம்-அருவம். (கூஉ)

தனங்க டனங்க ளெனவோடித் தேடியந் தையலர்கள்
தனங்க டனக்களித் துப்புணர்ந் துண்டு தலைமயங்கு
தனங்க டனதே நலமெனும் மாந்தீர் தவிர்த்தவநித்
தனங்க டனஞ்சுண் டவன்றா டொழுங்கரித்
[தானம் வந்தே.

(இ-ள்) தனங்கள் தனங்கள் என ஓடி தேடி—பொருள் பொருளென்று அலைந்து ஈட்டி, அம் தையலார்கள்-அழகிய பெண்களின், தனம் கள் தனக்கு அளித்து-கொங்கைக்கும் மதுவுக்கும் செலவு செய்து, புணர்ந்து-அப்பெண்களைக் கூடியும், உண்டு—அம்மதுவை யருந்தியும், தலை மயங்குதல்—கலந்து நிற்றலே, நம் கடன்—நமது கடமை, அதே நலம்-அச்செயலே நன்மையானது, எனும்—என்று கூறும், மாந்தீர்—மக்களே, அவம்—அது வீண் செயலாகும், தவிர்த்து—அச்செயலை நீக்கி, நித்தன்-என்றுமுள்ளவன், அம்கடல் நஞ்சு உண்டவன்-அழகிய கடலிற்றோன்றிய நஞ்சினை அயின்றவன், தாள்-அவனுடைய திருவடிகளை, கரித்தானம் வந்து தொழும்-திருவானைக்காவுக்கு வந்து வணங்குவீராக. (எ-று)

(வி-ரை) " கள்ளும் பொய்யும் காமமுங் கொலையும், உள்ளக் களவுமென்றுரவோர் துறந்தவை. (மணிமேகலை) ' தனத்தினைத் தவிர்ந்து நின்று தம்மடி பரவுவார்க்கு, மனத்தினுண் மாசு தீர்ப்பான் ' என்ற சான்றோர்

கூற்றும்காண்க. நித்தன்-தோற்றக் கேடுகளில்லாதவன். தனங்கள் தனங்கள் என்பவை அடுக்குமொழி. மாந்தீர்- 'நினைமின் மாந்தீர் கேண்மின்,' என்ற பரிபாடலாலறிக. (சுரு)

நம்ப வனந்தவெ ழூழிய தோற்கா நகரவவா
நம்ப வனந்தழ லப்புமண் ணானவ நாள்குடியி
நம்ப வனந்த லிலாயெனி லெய்து நமக்கும்விண்ணோர்
நம்ப வனந்தரு மைம்முக முங்கள நஞ்சமுமே.

(இ-ள்) நம்ப-தெய்வங்களிற் சிறந்தவனே, அனந்த-கடவுளே, எழு ஊழிய—ஏழு ஊழிகளையுடையவனே, தோற்கா நகரவ-திருவானைக்காப் பதியையுடையவனே, வானம் பவனம் தழல் அப்பு மண் ஆனவ—ஐம்பெரும் பருப்பொருளாயுள்ளவனே, நாள் குடி இனம் பவம் நந்தல் இலாய்—வயதும் குடியும் சாதியும் பிறப்பும் இறப்பும் இல்லாதவனே, எனில்—என்று கூறினால், விண்ணோர் நம்ப—தேவர்களெல்லாம் விரும்ப, வனம் தரும் ஐம்முகமும்—அவனுடைய அழகிய ஐந்து திருமுகங்களும், களம் நஞ்சமும்—திருநீலகண்டமும், நமக்கும் எய்தும்—நமக்குமடையும். (எ-று)

(வி-ரை) எழு ஊழிதோற்கா நகரவ-"ஊழியேழான ஒருவா போற்றி", "ஏழு கொலாமவருழி படைத்தன" என்ற தேவாரங்களானறிக. பரம்பொருளினின்றும் வான் தோன்றி அதன் வழி ஒன்றன்பின் ஒன்றாக முறையே காற்று, தீ, நீர், நிலம் தோன்றிற்றென்று வேதத்துள் கூறப்பட்டுளது. இது பற்றி வானம், பவனம் தழல் அப்பு மண் என்று முறையாகச் சொல்லப்பட்டது. "தன்னையுன்னி யென்னையாக்கியபோழ்தே யானவனாயினேன்." இஃது சாரூபம். (சுசு)

நஞ்சமை யங்களத் தோற்காப் பரன்றியா
[னம்நிட்டைஞா
நஞ்சமை யங்கண் விசேட நிருவாண நந்தமுத்த

நஞ்சமை யங்கனை மண்ணளித் தோன்மார்பம் [நாடியக
நஞ்சமை யங்கண் டிறைஞ்சி னளிப்பன்ற னுடுதந்தே.

(இ-ள்) நஞ்சு அமை அம்களம் தோற்கா பரன்—நஞ்சு பொருந்திய அழகிய கண்டத்தையுடைய திருவானைக்காப் பரம்பொருள், முத்தனம் சமை அங்கனை மண் அளித்தோன்—மூன்று தனங்களையுடைய தடாதகைப் பிராட்டியாரின் தென்றமிழ்ப் பாண்டி நாட்டை அரசாட்சி புரிந்த இறைவன், மார்பம் நாடி-அவனுடைய மார்பத்தை நினைந்து, அகம் நஞ்சு அமையம் கண்டு இறைஞ்சின்-மனம் நெகிழ்ந்து வணங்கும் காலந் தெரிந்து வணங்கினால், சமையம் கண் விசேடம் திருவாணம்—சமையம் விசேடம் திருவாணமென்ற முத்தீக்கையையுமளித்து, தியானம்-தியான சமாதி ஏதுவாக, நிட்டை-மெய்ஞ்ஞான நிட்டை முதிர்ந்து அதனால், ஞானம் நந்த-இம்மையில் மெய்ஞ்ஞானம் பெருகச்செய்து, தன்னுடு தந்து-மறுமையில் தன் முத்தி நாட்டின்கண் இடமளித்து, அளிப்பன்—நம்மைக் காப்பாற்றுவன். (எ-று)

(வி-ரை) கொடுக்கும் பொருள் மார்பின் வலியான் உளதாம் ஆகலின் மார்பம் இறைஞ்சினென்று சொல்லப்பட்டது. "திருவரையகலந் தொழுவோர்க்குறி தமர் துறக்க முரிமை நன்குடைத்து "(பரிபாடல்)," தண்டாரகலம் நோக்கின மலர்ந்தே" (புறம்) என்பனவும் இக் கருத்துடைமை காண்க. தியானம்—எண்வகையோக வுறுப்புக்களுளொன்று. ஐந்திருளற நீக்கி நான்கினுட்டுடைத்த சித்தத்தைக் கடவுள்பால் நிறுத்துவது. இதன் விரிவை "நாலிரு வழக்கிற்றாபத பக்கமும்" என்ற தொல்காப்பிய நூற்பாவானறிக. மனமாதி முக்கருவிகளும் அசையாது நின்றவிடம் மெய்ஞ்ஞான நிட்டையென்பதும், அவையசைந்து செய்யும் தியான சமாதிகள் அந்நிட்டை வருதற்கு ஏதுவென்பதுமறிக. "சார்புணர்வு தானே தியானமுமாம் சார்புகெட வொழுகினல்ல சமாதி

யுமாம்'' என்றார் திருக்களிற்றுப்படியாரினும். அந் நிட்டை கூடினும் மெய்ஞ்ஞானமில்லார்க்கு வீடெய்தலரு மையெனல் "ஐயறிவறிந்தவையடங்கினவரேனும், மெய் யறிவிலாதவர்கள் வீடது பெருரே", "ஐயுணர்வெய்தி யக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லாதவர்க்கு'' என்பவைகளாலறியப்படும். நந்த என்பதனை சமையம், தியானம், நிட்டை, ஞானம், இவற்றிற்குத் தனித்தனி கூட்டுக. சைவ தீக்கை பெற்றுத் தியான சமாதி முதிர்ந்து நன்னிட்டை கூடி மெய்ஞ்ஞானம் பெருகி வீடெய்துவ ரென்பது போதரும். இஃது சாலோகம். (கூரு)

தந்த வரத்தச் சிலையவ மார்க்கண்டத் தாபதற்கந்
தந்த வரத்தரு மற்கந்தஞ் செய்தருள் தாளவிடைத்
தந்த வரத்த பொதுவினிற் றீர்த்தெற்குத் [தண்கரிக்காத்
தந்த வரத்த வெனிற்றிறக் குங்கதித் தாழ்க்கதவே.

(இ-ள்) தம் தவர் அத்தச்சிலையவ—தம்முடைய வில்லாகப் பொன் மலையையுடையவனே, மார்க்கண்டத் தாபதற்கு—மார்க்கண்ட முனிவனுக்கு, அந்தம் தவர—முடிவு நீங்க, தருமற்கு அந்தம் செய்தருள் தாள—கூற்று வனை முடிவு செய்து பின் உயிர்ப்பித்தருளிய அடிகளை யுடையவனே, இடை தந்தவர் அத்த—நூல்போன்ற இடையையுடைய உமை கூறனே, பொதுவினில் தீர்த்து-அதுவோ இதுவோ வழியென்று மயங்கி நின்ற நிலைமை யை நீக்கி, எற்கு—எனக்கு, தண்கரிக்கா தந்த வரத்த—குளிர்ந்த திருவானைக்காவில் உண்மை வழியை யடையக் கொடுத்த வரத்தையுடையவனே, எனில்—என்று சொன் ஞல், கதி தாழ்கதவு திறக்கும்—வீட்டுலகின் கதவின் தாழ் முடிவில் நமக்குத் திறக்கும். (எ-று)

(வி-ரை) அத்தம்-பொன். தந்து-நூல். மார்க்கண் டனை "மறலியுயிர் குடித்த கான்முளை'' என்றார் பிற ரும். பொதுவினிற்றீர்த்தென்பதற்கு எல்லாரையுமாளும் பொதுவாகிய முறையினின்று நீக்கி என்னை உளம்

நெகிழ்விப்பதோருபாயத்தோடு தக்க வாத்தையுடையவ னென்றுரைப்பினுமமையும். "அம்மை பயக்கும் மருந்து கண்டாய்" என்பது அப்பர் வாக்கு. தவர என்பது எதுகை நோக்கிற்று. (கசு)

கதவம் பரக்க னிசைகேட் டருள்கரிக் காவவநா
கதவம் பரவையே ழாய்பொழி லேழாநின் காளிணைமிக்
கதவம் பரயோக மோன மளித்துக் கடைகதியிற்
கதவம் பரக்கத் திறக்கச்செய் வாயெங் கருவறவே

(இ-ள்) கதம் அம்பு அரக்கன்—சினமிக்க கணைகளையுடைய இராவணனது, இசைகேட்டு—சாமகானத்தைக்கேட்டு மனமுருகி, அருள்—அவனுக்கருளிய, கரிக்காவ—திருவானைக்காவையுடையவனே, அநாகத—அறியப்படாதவனே, அம்பரவை ஏழாய் பொழில் ஏழா—அழிய கடல் ஏழாகவும் உலகங்கள் ஏழாகவும் இருந்த, நின் கால் இணை—நினது திருவடிகளை நினைக்கும், பர யோகம் மோனம் மிக்க தவம் அளித்து—யோகமும் மோனமும் கூடும்படியான மிகுந்த தவத்தை எனக்கு இம்மையில் அளித்து, கடை—முடிவான மறுமையில், எம் கரு அற—எம்முடைய பிறவி நீங்க, கதியின் கதவம்—வீட்டுலகின் கதவினை, பரக்க திறக்கச்செய்வாய்—விரிவாக எனக்குத் திறந்து வைக்கப்படும்படிச் செய்தருள்வாயாக. (எ-று)

(வி-ரை) அநாகதம்—அறிவினால் அறியப்படாமை. 'ஏழா எழுபொழிலு மிருந்தோன்' என்றார் மணிவாசகரும். பரக்க—விரிவாக என்றுமாம். யோகமாவது, வாயுவிரண்டுந் தடுத்துப் புலனொடுக்கி யிலக்கின் மனம் வைத்தாதார, தேயமுணர்ந்தன லைக் கொடுத் தெய்வ தங்களமிழுகமாய்த் திரும்பச்செய்து, போயதன்பின் பிரமபெலத்திற் வழுதிடைத்திளைத்துப் பொருவில் சோதி, யாயதைப்பாவித்தல் யோகமாம். மௌனமாவது வாய்வாளாது ஐம்புலன்களையுமடக்கித் தானேயிருத்தல்

மௌனமெனப்படும். மோனமென்பது ஞானவரம்பு. "கண்மூடி மௌனியாகி தனியேயிருப்பதற் கெண்ணினேன்" (தாயுமானவர்) என்பதனாலறிக. (கஎ)

கருமா வணத்தனைக் கந்தனைத் தந்தவர் கண்கயனி
கருமா வணங்கத்தர் மும்மல முக்குற்றங் [காய்வினை தாய்க்
கருமா வணங்கறத் தொண்டுசெய் நெஞ்சே கருதுவப
கருமா வணக்கரிக் காவள ரெந்தை கழறனக்கே.

(இ-ள்) கருமா வணத்தனை—கரிய யானைமுகக் கடவுளையும், கந்தனை—குமாரக்கடவுளையும், தந்தவர்—கொடுத்தருளியவர், கண்கயனிகரும் உமா அணங்கு அத்தர்—சேல்போன்ற கண்களையுடைய உமைகூறனார்; மும்மலம்—மூன்று மலங்களும், முக்குற்றம்—மூன்று குற்றங்களும், காய் வினை—மூன்று வினையும், தாய்க்கரு—பிறவியும் ஆகிய, அணங்கு அற—துன்பங்கள் நீங்க, கருதுவ பகரும் ஆவணம்—நினைப்பன விற்கும் அங்காடிகளையுடைய, கரிக்காவளர்—திருவானைக்காவின் எழுந்தருளியுள்ள, எந்தை கழல் தனக்கு—எம் தந்தையாகிய சம்பு நாயகர் திருவடிகளுக்கு, நெஞ்சே—என்னெஞ்சமே, தொண்டுசெய்—தொண்டுகளைச் செய்வாயாக. (எ-று)

(வி-ரை) மும்மலம்—ஆணவம், மாயை, கன்மம். முக்குற்றம் விழைவு வெறுப்பு அவிச்சை என்பன. "சொல்லா மரபினவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற் படுத்தடக்கியும்" என்பது தொல்காப்பிய விதியாதலான் நெஞ்சே தொண்டுசெய் எனச் சொல்லப்பட்டது. "மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம், ஆனிடத்தைந்துமாடும் அரன்பணிக்காக வன்றோ" என்பது சித்தியார். வினை மூன்று, சஞ்சித பிராரத்த ஆகாமியம் என்பன. கருதுவ பகரும் ஆவணம் வேட்டவையாவையுந் தருங்கடைத்தெருக்கள் என்பது. அ-பாரதம். (கஅ)

தனச்சிலம் பின்பச் சிலையவன் றந்தாற் றளிபுரிசா
தனச்சிலம் பிக்கி யரசளி யானைக்காச் சந்திரவ
தனச்சிலம் பிட்ட வடிபங்கன் சீர்த்தித்
[தமிழ்மறையோ
தனச்சிலம் பின்பெங்ங னுய்குவ முத்தியிற்
[றங்கினின்றே.

(இ-ள்) தனச் சிலம்பு இன்பச் சிலையவன்—பொன் மலையை இன்பமுறச் சிலையாகக்கொண்டவன், தந்தால் தளிபுரி-நாலரல் கோயில் செய்யும், சாதனம் சிலம்பிக்கு-பழக்கமுடைய சிலம்பிப்பூச்சிக்கு, அரசு அளி—அரசாட்சியைக் கொடுத்த, ஆனைக்கா—திருவானைக்காவிலுள்ள, சந்திர வதனம்—திங்கள் போன்ற முகமும், சிலம்பிட்ட அடிபங்கன்—சிலம்பணிந்த அடிகளையுடைய உமைகூறனுடைய, சீர்த்தி—புகழாகிய, தமிழ்மறை—தமிழ் வேதங்களை, ஓதனச்சிலம்—சொல்லித் துதிக்க விரும்பவில்லை, முத்தியிற்றங்கி நின்று—முத்தி வீட்டில் தங்கியிருந்து, பின்பு எங்ஙன் உய்குவம்—பிறகு எவ்வண்ணம் பிழைப்போம்? பிழையோம். (எ-று)

(வி-ரை) சிலம்பிக்கு அரசு தருதல்-திருவானைக்காவில் திருவெண்ணாவற்கீழ் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்ட சிலந்தி கோச்செங்கட் சோழராகப் பிறந்த வரலாற்றினைப் பெரியபுராணம் இனிது விளக்குகின்றது. தமிழ் மறையாகிய தேவார முதலியவற்றினும் இவ்வுண்மைவிதந்தோதப்படுகின்றது. சாதனம்-பழக்கம், எங்ஙனுய்குவமென்பது உய்யமாட்டோமென்பது பயப்பநின்ற இகழ்ச்சிக் குறிப்பு. எங்ஙன் எனும் வினா எதிர்மறைக்கணின்றதனாலே உய்குவமென்பது உய்யமாட்டோம் என்னும் பொருளையுணர்த்திற்று. எங்ஙனமாஞ்மருள் என்றமைபோல நின்றது. சிலம்பிட்ட அடி "எண்ணொண்கலையும் சிலம்புஞ் சிலம்படி" என்றார் பிறரும்.

(கக)

தங்கந் தரங்க மெறிபொன்னி யானைக்காத் தங்கு [முன்னோன்
தங்கந் தரங்கரங் கொண்டோன் பிரணவத் [தன்பொருளந்
தங்கந் தரங்கரு ளப்பெற்ற வெந்தை தருவனெற்குத்
தங்கந் தரங்கடற் பார்புகழ் முத்தித் தலத்திருவே.

(இ-ள்) தங்கம் தரங்கம் எறி பொன்னி-பொன்னை அலைகள் கொழிக்கும் காவிரி நதியையுடைய, ஆனைக்கா தங்கு முன்னோன்-திருவானைக்காவில் இருக்கும் பழமையானவன், தம் கந்தரம் கரம் கொண்டோன்-தம்முடைய கண்டத்தில் நஞ்சை வைத்தவன், பிரணவத்தன் பொருள் அந்தம்—பிரணவ மந்திரத்தின் முடிவை, கந்தர் அங்கு அருளப்பெற்ற எந்தை-குமாரக்கடவுள் திருவாய் மலர்ந் தருளக்கேட்ட எம் தந்தையாயுள்ளவன், தங்கு அந்தரம்-பொருந்திய ஆறக்கமும், கடல் பார்—கடல் சூழ்ந்த மண்ணுலகமும், புகழ்—துதிக்கும், முத்தித்தலத்திரு-வீட்டு நிலமாகிய பேற்றை, எற்குத்தருவன்—எனக்கு அளிப்பன். (எ-று)

(வி-ரை) தங்கம் அலையெறிவது "பொன்னிபொன் கொழிக்கும்" என்பதனாலறியப்படும். முடிவில் திருவென்று முடிந்தது. அந்தமும் ஆதியுமிதனாற் பெறப்பட்டது. முத்தித்தலமாகிய பேற்றை எனக்கு அளிப்பனென்று வினை முடிவுசெய்க. (௱)

ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்கா அந்தாதி மூலமும் உரையும் முற்றுப்பெற்றது,

திருவானைக்காப் புராணம்

(கவி)

சம்புமாதவன் பராசரன் றூமறைக் கிழவன்
கும்பமாமுனி தினகரன் குளிர்மதி யிராமன்
உம்பர்கோனழற் கடவுளென் றிவர்க்கெலா முவந்து
தம்பிரா னருடலைதரக் கொடுத்ததித் தலமே.

ஆக்கப்பட்டகாலம்

கச்சமங் கலத்துரைசிங் காரவடி வேலியக்கா
நச்சுகளற் கந்தாதி நாவின்று—உச்சமுற
ஆயிரத்தெட் டானூற்றுண் டாறுபத்தா றுஞ்சகத்தில்
மேயவரங் கேற்றினன் வேட்டு.

ஆக்கியோர் ஊர்

சென்னிவள நாட்டிற் றிருவானைக் காக்குணபால்
துன்னுமிரு காவதமாந் தூரத்தில்—பொன்னியின்றென்
வன்னியமுண் டம்பலத்தர் வாழ்பதிசான் றோர்புகழ்ந்து
பண்ணுகச்ச மங்கலமாம் பார்.

திருவானைக்காவந்தாதி

உரையிலெடுத்தாண்ட மேற்கோள்

நூல்கள்

1 திருஞானசம்பந்தர் [தேவாரம்
2 திருநாவுக்கரசர் [தேவாரம்
3 சுந்தரமூர்த்திகள் [தேவாரம்
4 திருவாசகம்
5 திருக்கோவையார்
6 பெரியபுராணம்
7 திருவிளையாடற்புராணம்
8 கந்தப்புராணம்
9 காஞ்சிப்புராணம்
10 திருவானைக்காப்புராணம்
11 தணிகைப்புராணம்
12 பழனித்தலபுராணம்
13 பேரூர்ப்புராணம்
14 கந்தரலங்காரம்
15 திருவருட்பயன்
16 திருவாய்மொழி
17 பெரியதிருமொழி
18 திருவேளைக்காரன் [வகுப்பு
19 சிவஞானசித்தியார்
20 தாயுமானவர் பாடல்
21 பட்டினத்தார் பாடல்
22 திருமந்திரம்
23 உண்மை விளக்கம்
24 திருக்களிற்றுப்படியார்
25 வைராக்கியதீபம்
26 வைராக்கிய சதகம்
27 அரிசமய தீபம்
28 கைவல்யம்
29 ஞானாமிர்தம்
30 சிவஞானபோதம்
31 அமிர்தசாரம்
32 கம்ப-இராமாயணம்
33 வில்லி-பாரதம்
34 அரங்கநாதன்-பாரதம்
35 தொல்காப்பியம்
36 இறையனார் அகப்பொருள்
37 புறப்பொருள் வெண்பாமாலை
38 இலக்கண விளக்கம்
39 யாப்பருங்கல விருத்தி
40 மாறனலங்காரம்
41 தண்டியலங்காரம்
42 கண்டனலங்காரம்
43 நன்னூல்
44 நற்றிணை
45 குறுந்தொகை
46 ஐங்குறுநூறு
47 பதிற்றுப்பத்து
48 பரிபாடல்
49 கலித்தொகை
50 அகநானூறு
51 புறநானூறு
52 திருமுருகாற்றுப்படை
53 பொருநராற்றுப்படை
54 பெரும்பாணாற்றுப்படை
55 சிறுபாணாற்றுப்படை
56 குறிஞ்சிப்பாட்டு

57 மதுரைக்காஞ்சி
58 முல்லைப்பாட்டு
59 நெடுநல்வாடை
60 பட்டினப்பாலை
61 மலைபடுகடாம்
62 சிறுபஞ்சமூலம்
63 களவழி நாற்பது
64 கார்நாற்பது
65 ஐந்திணையெழுபது
66 திருக்குறள்
67 நாலடியார்
68 திருவள்ளுவமாலை
69 நீதிநெறிவிளக்கம்
70 சிலப்பதிகாரம்
71 வளையாபதி
72 மணிமேகலை
73 சீவகசிந்தாமணி
74 நீலகேசித்திரட்டு
75 சூளாமணி
76 பெருங்கதை
77 தக்கயாகப்பரணி
78 கிளவித்தெளிவு
79 கல்லாடம்
80 நைடதம்
81 பிரபுலிங்கலீலை
82 கொக்கோகம்
83 தனிப்பாடற்றிரட்டு
84 உவமானசங்கிரகம்
85 பேராசிரியர்உரை
86 நச்சினார்க்கினியர்உரை
87 பரிமேலழகர்உரை
88 அடியார்க்குநல்லாருரை
89 மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ்
90 அழகர்கலம்பகம்
91 திருவருணைக்கலம்பகம்
92 திருவரங்கக்கலம்பகம்
93 பொன்வண்ணத்தந்தாதி
94 மருதூரந்தாதி
95 மறைசையந்தாதி
96 திருவேங்கடமாலை
97 பிங்கலந்தை
98 சூடாமணிநிகண்டு
99 பிரபோதசந்திரோதயம்
100 விநாயகபுராணம்
101 சங்கரநயினார்கோயிலந்தாதி
102 நல்வழி
103 நான்மணிக்கடிகை
104 ஆசிரியமாலை
105 வீரசோழியம்மேற்கோள்
106 இரத்தினச்சுருக்கம்
107 காசிகாண்டம்
108 திருவிசைப்பா

திருவானைக்காவந்தாதி

செய்யுள் முதற்குறிப்பகராதி

எண்—பக்கவெண்.

காப்பு—பாக்கியமக.

அகவினலற்றுக 54
அமையங்கன 56
அவையம்பல 57
அரங்கநகப்பாண்ட 58
அனகனக 77
அருந்தவருவிடம் 81
இலங்கைக் கவயவ 48
ஐயக்கரவ 7
கடம்பணிறுனம் 12
கவனப்பரிச்செங் 19
கணக்காவிரி 20
கத்தமையார 23
கனந்தகரத்த 28
கன்றுக்கணங்கழை 29
கந்தனையானற் 30
காவிலங்காமக் 35
கண்டனவந்தரி 37
கனகமலைத்தவெ 37
கந்தரமானற் 39
கத்திகையங்கத்த 43
கருமங்கதவாணவ 55
கம்பரவஞ்சலஞ்செய் 70
காவையனத்த 74
கண்டகராவி 75
கரும்பானலங்கண்ட 76
கழலந்தரணி 78
காவாயுமா தேவி 82
கலந்தவாக்களம் 83
கடனஞ்சலம்பு 85
காநகராக்கங்கண 86
கரும்பலரானை 87
கமனஞ்சுக 88
கதவம்பரக்க 95
கருமாவணத்தனை 96
காலனமனஞ்சு 31
காமரக்கானம் 71
கானக மஞ்சரி 84
கைத்தனந்தாரலர் 21
சங்கனந்தங்க 3
சனந்தரனுல்வர் 11
தந்தவராக 2
தவரந்தரமுத்தி 10
தாங்கமல 12
தமரங்கலற 18
தந்த நயன 24
தனக்கஞ்சனங்கை 34
தருமனஞ்ச 38
தவனனலவ 40
தவராகனக 50
தருக்கந்தர 62
தத்துவரிக்க 65
தவள வனிதை 89
தனங்கடனங்க 91
தந்தவரத்த 94
தனச்சிலம்பி 97
தங்கந்தரங்க 98

தாமரையானந்து 25
தானந்தவந்தழை 51
திருவானைக்காயத்தி 1
தினமனங்க 64
தினகானங்கி 90
துவக்கரை 27
தையனந்தாத 53
நமனங்கனந்த 4
நலம்பரவங்கரி 5
நத்தனங் கட்டந்து 14
நகத்தாரணி 22
நம்பவனந்த 92
நஞ்சமையங்க 92
நையனம்பாத 69
பவனலங்கட்ட 17
பதங்கனலவ 32
பதிகம்பரிக்கு 34
பதனந்துவளிடை 52
பன்னக வினப்படை 53
பணியம்பரப்பணி 66
பாவாதவருளத்தா 67
பலத்தவனத்தி 67
பனையனற்கர 78
பானு கமலவெண்மின் 79
பழனமையாறு 80
பாதவனுகமணை 68
மத்தனப் பஞ்ச 15
மலையாரணங்கத்த 72
மானம் புரந்த 46
மானத்தனத்த 73
மையலம் பங்கணி 8
வரம்பரிக்கு 6
வந்தகமண்ட 9
வனவாரண 42
வந்தனையற்ற 44
வரம்பாகனங்கை 45
வளச்சந்திரவிலான் 46
வனந்தருமன்றிரு 49
வனையனலங்க 59
வலையங்கடக 61
வரந்தரவாரின் 63
வினையனகர 26
விலங்கையனங்கனை 60
வையம்படைத்த 16

(ஆக 100 செய்யுள்)

தமிழ் வாழ்க

திருவானைக்காவந்தாதி.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	28	யுள்ளலா	யுன்னலா
3	2	உற்றவார்கை	உற்றவாக்கை
4	12	நைந்து	நைத்து
7	10	யை ஊர்தியாக	இடபமாக
13	12	மொக்குகள்	மொக்குள்
15	4	அரிமத்	அரிவித்
,,	10	எவல்	ஏவல்
19	16	சோழனுக்கும்	சோழனும்
,,	17	பூச்சிக்கும்	பூச்சியும்
,,	,,	யானைக்கும்	யானையும்
,,	18	மாலுக்கும்	மாலும்
20	2	மூர்வேனும்	மூர்வோனும்
,,	3	சிறியவ	சிறியவெ
23	7	ஒளி	ஒலி
33	28	நித்தியத்தோடுகூடிய நைமித்திகம்	நைமித்தியத்தோடு கூடிய நித்தியம்
35	28	னெனி	னெனினு
38	25	திருமன	தருமன
41	5	இவர்களில்	இவர்கள்
41	13	மூவரு	மூவாறு
43	9	காவா	காவ
,,	27	இனிப்	இனிப்ப
45	6	ஞானமறு	ஞானமுறு
49	3	மிடறடைப்பூண்டு	மிடறடைப்புண்டு
52	20	நந்து வந்து	நந்து வந்த
53	14	கவின்	கவி
,,	22	மொழிதிறத்	மொழித்திறத்
,,	30	தளர்கவன்	தளர்வகண்
59	24	உணர்சி	உணர்ச்சி

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
60	10	நீறணி	நீறளி
64	18	லொன்றையும்	லொன்றைக்
,,	19	விழியானும்	விழியால்
66	19	பத்தா	பத்தர்
,,	20	பரியாட	பரிபாட
64	12	காத்திசை நோக்கித் தொழுதெழின்	காப்பதி நோக்கித் திசை தொழின்வா
,,	21	கரிக்கா	கரிக்காப்பதி
,,	22	திசை நோக்கித் தொழுதெழின்	நோக்கித் திசைதொழின்
69	1	அநாத	அநாகத
72	16	நல்லறிவென்பதுமுதல்	இக்கவிக்கு வேண்டுவதன்று
,,	19	உள்ளவாறுணர்தல் என்பது வரை	
,,	21	கோளிலு	கோளிலி
,,	29	கோளிலும்	கோளிலி
77	3	மாழிவளா	மாழிவரை
,,	11	ஆழிவளா	ஆழிவரை
,,	20	உணர்ந்தோர்	உணர்ந்தார்
78	26	தர வந்து	தரம் வந்து
80	16	மையறு	மையாறு
82	16	சிவாய	சிவய
82	10	மறைதல்	மறைத்தல்
,,	24	மாயிரக்	மாயிரங்
85	22	எய்து	எய்
86	12	திருநிலை	திருநீல
17	11	பெண்னென்ற	பெண்ணொன்ற

தஞ்சைக்
கூட்டுறவு
மின்னியக்கப்
பதிப்பகம்,
கரந்தை.